பக்கங்கள்: 20 விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விழயல் 02 வள்ளுவர் ஆண்டு 2048 கார்த்திகை 06 புதன்கிழமை 22.11.2017 கதிர் 17

## காமினிக்கு நேற்று பிணை

### வெளிநாடு செல்லத் தடை

கொழும்பு, நவ.22
நிதிமோசடிக் குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வின் அலுவலக முன்னாள் பிரதானி காமினி செனரத் உள்ளிட்ட மூவர் பிணை பக்கம் 18

# விக்கிக்கு எதிரான டெனிஸின் வழக்கு; தள்ளுபடித் தீர்ப்பு நேற்றுத் தள்ளுபடி

## மேன்முறையீட்டு நீதிமன்றின் புதிய ஆயத்தில் திரும்பவும் விசாரிக்க உயர்நீதிமன்றம் பணிப்பு





கொழும்பு, நவம்பர் 22
தன்னை வடக்கு மாகாண அமைச்சர் பதவியிலிருந்து முதலமைச்சர் நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரன் நீக்கியமை தவறு என உத்தரவு விடுமாறு கோரி முன்னாள் வடமாகாணக் கடற்றொழில், போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன் தாக்கல் செய்த மனுவைத் தள்ளுபடி செய்து மேன்முறையீட்டு நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு நேற்று உயர் நீதிமன்றத்தினால் தள்ளுபடி செய்யப்பட்டது.

இது தொடர்பான மேன்முறையீட்டு மனுவைப் பரிசீலித்த கையோடேயே உயர்நீதிமன்றம் இந்த உத்தரவை விடுத்தது. மனுதாரரின் வழக்கை, மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் வேறு நீதியரசர்களைக் கொண்ட புதிய ஆயத்தின் முன் விரைந்து விசாரித்து முடிவை அறிவிக்கும்படியும் உயர்நீதிமன்றம் கட்டளையிட்டது. பக்கம் 18

## உணர்வெழுச்சியுடன் நேற்று ஆரம்பமானது மாவீரர் வாரம்



யாழ்ப்பாணம், நவ 22
தாயக விடுதலைக் காகத் தமது இன்னுயிரை ஈந்த மாவீரர்களின் நினைவேந்தல் வாரம் நேற்றுச் செவ்வாய்க்கிழமை தமிழர் தாயகப் பகுதிகளிலும், புலம்பெயர் தேசங்களிலும் உணர்வெழுச்சியு பக்கம் 18

## யாழ். பல்கலையிலும் சுடர்



யாழ்ப்பாணம், நவ.22
மாவீரர் வாரம் நேற்று ஆரம்பமான நிலையில் யாழ். பல்கலைக்கழக வளாகத்தில் உள்ள மாவீரர் நினைவிடத்தில் தீபம் ஏற்றப்பட்டு அஞ்சலி செலுத் பக்கம் 18

## ஆவா குழுவின் நிசாவுக்கு ஒன்றரை ஆண்டு கடூழியம்

### சிறைக்காவலர்களின் பிடியில் இருந்து தப்பிய குற்றத்துக்கு நீதிமன்று தீர்ப்பு

யாழ்ப்பாணம், நவ.22
நீதிமன்ற வளாகத்தில் சிறைச்சாலை உத்தியோகத்தர்களின் காவலிலிருந்து தப்பிச் சென்ற குற்றத்துக்காக ஆவா குழுவின் முக்கிய உறுப்பினர் எனக் கூறப் பக்கம் 18


## வடக்கு வைத்தியசாலைகளில் தாதியர்கள் இன்று போராட்டம்

யாழ்ப்பாணம், நவ.22
யாழ். போதனா வைத்தியசாலை மற்றும் வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் கீழ் இயங்கும் வைத்தியசாலைகளில் பணியாற்றும் தாதிய உத்தியோகத்தர்கள் இன்று காலை 7 மணி தொடக்கம் 24 பக்கம் 18

### தேசியக் கொடி ஏற்ற மறுத்த விவகாரம்:

## சர்வேஸ் மீதான நடவடிக்கை சகலருக்கும் ஒரு படிப்பினை

### வடக்கு ஆளுநர் குரே நம்பிக்கை



யாழ்ப்பாணம், நவ.22
தேசியக் கொடியை ஏற்ற மறுத்த வடக்கு மாகாணக் கல்வி அமைச்சருக்கு எதிராக எடுக்கப்படும் நடவடிக்கை ஏனைய அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ஒரு படிப்பினையாக அமையும் என்று வடக்கு மாகாண ஆளுநர் றெஜினோல்ட் குரே தெரிவித்தார்.

நேற்றுச் செவ்வாய்க்கிழமை நடத்திய செய்தியாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு கூறினார்.

மாகாணக்கல்வி அமைச்சர் க.சர்வேஸ்வரன் மீதான பக்கம் 18

## ஆலயக் காணியில் படைமுகாம் அமைப்பதை உடனே நிறுத்துக!

### பாதுகாப்பு இராஜாங்க அமைச்சரிடம் மன்னார் பிரதிநிதிகள் நேரில் வலியுறுத்து

கொழும்பு, நவ.22
மன்னார் – தள்ளாடிப் பகுதியில் அமைந்துள்ள தேவாலயத்துக்குச் சொந்த மான இடத்தில் இராணுவ கட்டடம் அமைப்பதை உடனடியாக நிறுத்தவேண்டும் பக்கம் 18

## நவம்பர் 27 மாலை 6.05 மணிக்கு தாயகமெங்கும் சுடர் ஏற்றுங்கள்!

### மாவீரர் வாரத்தை உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்க சிவாஜிலிங்கம் அழைப்பு



யாழ்ப்பாணம், நவ.22
தமிழ் மக்களின் விடுதலைக்காகத் தமது உயிரைத் தியாகம் செய்த பல்லாயிரக் கணக்கான வீர மறவர்களுக்கு மாவீரர் தினமான நவம்பர் 27ஆம் திகதி 6.05 மணிக்குத் தமிழர் தாயகமெங்கும் உணர்வெழுச்சியுடன் அஞ்சலி செலுத்தவேண்டும் பக்கம் 18

## புலிகளின் இலக்கை எட்டும் வரை கூட்டமைப்பாகவே பயணியுங்கள்!

### வலியுறுத்துகின்றார் சிவாஜிலிங்கம்

யாழ்ப்பாணம், நவ.22
தமிழ்க் கட்சிகளைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக விடுதலைப் புலிகள் ஒற்றிணைத்தமைக்கான நோக்கம் இன்னும் முழுமைப்படுத்தப்படவில்லை. அரசியல் தீர்வை அடையும்வரை நாம் பொறுமை காக்கவேண்டும்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் வலியுறுத்தினார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று நடத்திய செய்தியாளர்கள் பக்கம் 18

# கார்த்திகை மாதத்தை மரநடுகை மாதமாக நீடிப்பதில் உடன்பாடில்லை என்கிறார் வடக்கு விவசாய அமைச்சர்!



வவுனியா, நவ. 22

கார்த்திகை மாதத்தை மரநடுகை மாதமாகநீடிப்பதில் எனக்கு உடன்பாடில்லை என வடமாகாண விவசாய அமைச்சர் க.சிவனேசன் தெரிவித்துள்ளார்.

வவுனியா, முருகனூர் விவசாய பண்ணையில் விவசாயிகளுக்கான சான்றிதழ் மற்றும் மரங்கள் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

வன்னிப் பிரதேசத்தில் விவசாய நடவடிக்கையில் அழிவுகளை ஏற்படுத்தும் ஒரு விலங்காக குரங்கு காணப்படுகின்றது. குரங்கைக் கட்டுப்படுத்துவது மிகவும் கடினமாக இருக்கின்றது.

குரங்குகளை அழிக்க முடியுமா என்கின்ற கேள்வியும், இந்தக் குரங்குகளை என்ன செய்வது என்ற கேள்வியும் இருக்கிறது. அதைப் பிடித்துச் சென்று தூர இடத்தில் விடுவதாக இருந்தால் இன்று மக்கள் குடியிருப்புக்களை அண்டிய பகுதிகளில் தான் காடுகள் இருக்கின்றன.

ஆகவே, நாங்கள் அந்த விலங்குகள் இருக்கின்ற இடத்தில் வாழ்கின்றோம் என்ற காரணம் இருந்தாலும் அவற்றில் இருந்து எப்படி வீட்டுத் தோட்டங்களை பாதுகாப்பது என்று சிந்திக்க வேண்டியிருக்கிறது.

கொஞ்சம் அசந்தால் போதும் குரங்குகள் வீட்டுத் தோட்டத்தை துவம்சம் செய்து விட்டுப் போகின்றன. எனவே இது பிரச்சினையாகவும், சவாலாகவும் இருக்கிறது. இதனால் வருகின்ற ஆண்டு எனது அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் குரங்குகளை ஒழிப்பதற்கு என்று ஒரு குறிப்பிட்ட நிதியை ஒதுக்கி வைத்துள்ளோம்.

ஆனால், அதனை எவ்வாறு ஒழிப்பது என்பது குறித்து ஆய்வு செய்து வருகின்றோம். அதனை ஒழிப்பதற்கு எமக்கு அதிகாரம் இருக்கின்றதா? மக்களுக்கு அழிப்பதற்குரிய கருவிகளை கொடுப்பதா என்று எல்லாம் ஆய்வு செய்து வருகின்றோம்.

மேலும் யானைகளின் அச்சுறுத்தலும் இருக்கின்றது. காடுகளைச் சுற்றி மரங்கள் இருக்கின்ற போதும் காடுகளின் உட்பகுதியில் மரங்கள் இல்லை. அவை வெட்ட வெளியாக இருக்கின்றன. காடுகளின் நடுவில் உள்ள பயன்தரு மரங்கள் அழிக்கப்பட்டு வெட்டப்பட்டுள்ளன.

இதனால், உணவுக்காக யானைகள் மக்கள் குடிமனைகளை நோக்கி வருகின்றது. இதனை எப்படிக் கட்டுப்படுத்துவது. வடக்கு மாகாண சபையால் தனித்து அதனைக் கட்டுப்படுத்த முடியாது.

மத்திய அரசுடன் இணைந்து தான் நாம் கட்டுப்படுத்த முடியும். தென் பகுதியில் வருமானத்திற்காக வளர்த்த யானைகளை தற்போது வருமானம் குறைந்ததும் அதனை வடபகுதியில் கொண்டு வந்து விட்டுள்ளார்கள். இதனால் எமது விவசாயிகள் தான் பாதிக்கப்படுகிறார்கள். இது தொடர்பில் முடிவு எட்ட வேண்டியுள்ளது.

அத்துடன், மரநடுகை மாதமாக கார்த்திகை மாதம் என்கின்ற ஒரு விடயம் இருக்கின்றது. அண்மையில் தான் நான் இந்த அமைச்சுப் பொறுப்புக்களை எடுத்திருந்தாலும் கூட கார்த்திகை மாதத்தில் மரம் நடுவதில் எனக்கு உடன்பாடு இல்லை.

மரநடுகைக்கான மாதமாக கார்த்திகையை நாம் எடுக்கலாமா? என்கின்ற ஒரு கேள்வி எழுகின்றது. வழமையாக கார்த்திகை மாதம் என்பது எங்களது பகுதிகளைப் பொறுத்தவரை நிலங்கள் ஊற்றெடுத்து இருக்கின்ற ஒரு காலம்.

மேடான பகுதி கூட நிலங்கள் ஊற்றெடுத்து காணப்படும் காலப்பகுதி. ஆகவே, இந்தக் காலப்பகுதியில் மரங்களை நாட்டுகின்ற போது உச்ச பயனை அடையலாமா என்ற கேள்வி எழுகின்றது.

கடந்த 3 வருடங்களாக இதை செயற்படுத்தி வருகின்றார்கள். விவசாய போதனாசிரியர்கள், விவசாயத்துறை சார்ந்தவர்கள் இதற்கான பதிலைக் கூற வேண்டும். அடுத்த முறையும் இதைச் செய்வதா அல்லது மாதத்தை மாற்றுவதா என்று முடிவு எடுக்க வேண்டும்.

என்னைப் பொறுத்தவரை நான் ஒரு விவசாயி என்ற அடிப்படையில் ஆடி, ஆவணி மாதம் தான் மரங்கள் நட பொருத்தமானது. நட்டவுடன் அதன் வேர்கள் ஊன்றிவிடும். பின்னர் அது வளர வாய்ப்பாக இருக்கும். இது எனது தனிப்பட்ட கருத்து. எனவே கார்த்திகை மாதம் மரநடுகைக்குப் பொருத்தமானதா என ஆராய வேண்டும் என்றார். (க-100)

# வவுனியாவில் அதிக போதை கொண்ட 12 கிலோ கஞ்சாவுடன் இருவர் கைது!

வவுனியா, நவ. 22

வவுனியாவில் அதிக போதை கொண்ட12 கிலோ கஞ்சாவுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வவுனியாவின் இருவேறு பகுதிகளில் நேற்றுமுன்தினம் இரவு இவர்கள் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வவுனியா வைத்தியசாலைக்கு அருகிலுள்ள பஸ்தரிப்பிட நிலையத்தில் சந்தேகத்திற்கிடமான முறையில் தனிமையாக நின்றிருந்த ஒருவரை ரோந்து நடவடிக்கையில் சென்றிருந்த பொலிஸார் சோதனையிட்ட போது அவரது உடைமையில் கஞ்சா இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்திலிருந்து புத்தளம் நோக்கி கொண்டு செல்லவிருந்த 10 கிலோகிராம் கேரளாக் கஞ்சா குறித்த நபரிடம் இருந்து மீட்கப்பட்டது. அதனை எடுத்துச் சென்ற புத்தளத்தை சேர்ந்த 30 வயதுடைய அந்த நபர் கைது செய்யப்பட்டார்.

அத்துடன், கொழும்பு செல்வதற்காக வவுனியா பூட்சிட்டிக்கு முன்பாக சந்தேகத்திற்கிடமான முறையில் நின்ற முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு பகுதியைச் சேர்ந்த 30 வயதுடைய நபர் ஒருவரின் பயணப் பொதியை சோதனை செய்த போது 2 கிலோகிராம் கஞ்சா கண்டுபிடிக்கப்பட்டதுடன் அந்த நபரும் கைது செய்யப்பட்டார்.

12 கிலோ கிராம் நிறை கொண்ட அதிக போதையுடைய கஞ்சாவுடன் குறித்த சந்தேக நபர்கள் இருவரையும் விசாரணைகளின் பின்னர் நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

வவுனியா பொலிஸ் நிலையபதில் பொறுப்பதிகாரி ஆர்.எம்.எஸ்.குமாரசிங்கவின் தலைமையின் கீழ் சப் இன்ஸ்பெக்டர் சுபசிங்க உள்ளிட்ட பொலிஸ் குழுவே இந்தக் கஞ்சாவைக் கைப்பற்றியுள்ளது. (க-100)

# வவுனியாவில் சிறந்த விவசாயிகளுக்கான கௌரவமளிப்பு!

வவுனியா, நவ. 22

வவுனியாவில் 2016 ஆம் ஆண்டுக்கான சிறந்த விவசாயிகளிற்கான கௌரவமளிப்பு விழா வவுனியா முருகனூர் விவசாய பண்ணையில் வட மாகாண விவசாய அமைச்சின் ஏற்பாட்டில் நடைபெற்றது.

பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் த.யோகேஸ்வரன் தலைமையில் நேற்று இடம்பெற்ற இந்த நிகழ்வில் வட மாகாண விவசாய அமைச்சர் க.சிவநேசன் கலந்துகொண்டார்.

இந்த நிகழ்வின் போது 2016 ஆம் ஆண்டுக்கான சிறந்த விவசாயிகளுக்கான சான்றிதழ் வழங்கப்பட்டதுடன், சிறந்த வீட்டுத்தோட்டச் செய்கையாளர்களுக்குமான சான்றிதழ்களும் வழங்கப்பட்டிருந்தன.



அத்தோடு, வீட்டுத் தோட்டத்தை மேம்படுத்தும் நோக்கில் பயன்தரும் பழமரக் கன்றுகளும் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன.

அத்துடன், இந்த நிகழ்வில் விவசாய போதனாசிரியர்கள், வவுனியா மாவட்டத்தை சேர்ந்த விவசாயிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (க-100)

# புலம்பெயர் தமிழர்களின் நிதியைப் பயன்படுத்த முடியாத நிலை!

## வடக்கு மகளிர் விவகார அமைச்சர் அனந்தி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ. 22

இனியொரு யுத்தம் ஏற்படாது என்ற உத்தரவாதம் இல்லாமையால் சொத்துக்கள் மீண்டும் இழக்கப்படாது என்று உறுதியாகக் கூறமுடியாத நிலை காணப்படுகின்றது.

இதனால், புலம்பெயர் வாழ் தமிழர்களின் நிதியை அபிவிருத்திப் பணிகளுக்கு பயன்படுத்த முடியாது உள்ளது என வடமாகாண மகளிர் விவகார அமைச்சர் அனந்தி சசிதரன் தெரிவித்துள்ளார்.

மகளிர் விவகார அமைச்சர் அலுவலகத்தில் நடைபெற்ற வாழ்வாதார உதவி வழங்கும் நிகழ்வில் பங்கேற்று வாழ்வாதார உதவிகளை வழங்கி வைத்து பேசும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

மகளிர் விவகார அமைச்சு நிதியின் கீழ் வட மாகாண மகளிர் விவகார அமைச்சர் அனந்தி சசிதரனால் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு ஏழுலட்சம் ரூபா பெறுமதியான வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டன.

இதன்போது அமைச்சர் அனந்தி மேலும் தெரிவிக்கையில்-

பெண் தலைமைத்துவக் குடும்பங்கள், முன்னாள் போராளிகள், மாற்றுத்திறனாளிகள் என்ற வகையில் ஒட்டுமொத்த வட மாகாணத்தில் போரால் பாதிக்கப்பட்ட எமது சமூகம் தங்களுடைய வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் விதத்திலான உதவிகளைக் கோருகின்றார்கள்.

ஆனால், எங்களுக்கு அரசால் வழங்கப்படுகின்ற நிதி ஒட்டுமொத்த சமூகத்தையும் கட்டியெழுப்ப போதாமல் இருக்கின்றது.

அதே போன்று புலம்பெயர் தமிழர்களும் பிரதேசசபை ரீதியாக தொழில் முயற்சிகளை மேற்கொள்வதற்கு உதவிகளைச் செய்வதற்குத் தயாராக உள்ளார்கள்.



அந்த நிதியை இங்கு முதலிடுவதற்கான உத்தரவாதம் இலங்கை அரசால் கிடைக்கப்பெறாமையினால் அவர்களை ஊக்குவிக்க முடியாத நிலையில் இருக்கின்றோம்.

இனி ஒரு யுத்தம் ஏற்படாது என்ற உத்தரவாதத்தை எந்தவொரு நாடும் அல்லது இலங்கை அரசும் எங்களுக்குத் தரவில்லை. எங்களுடைய சொத்துக்கள் இழக்கப்படாது என்ற உத்தரவாதத்தைத் தராத நிலையில் நாங்கள் தொடர்ந்து எதுவும் செய்ய முடியாதவர்களாக இருக்கின்றோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir



# தமிழகத் தலைவர்களுடன் திகாம்பரம் நேற்றுப் பேச்சு



சென்னை, நவ.22

தொண்டமானின் பெயர் நீக்கப்பட்டதாகக் குறிப்பிட்டு, எதிர்வரும் தேர்தலை இலக்குவைத்து அரசியல் நோக்கத்திற்காகவே சிலர் பிரச்சினைகளைத் தூண்டுகின்றனர் என மலையக புதிய கிராமங்கள் உட்கட்டமைப்பு அமைச்சர் பழனி திகாம்பரம் தெரிவித்துள்ளார்.

தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையத்தின் பெயர் மாற்றப்பட்டமைக்கு, இலங்கைத் தொழிலாளர் கங்கிரஸ் உள்ளிட்ட பல்வேறு தரப்பினர் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர். தமிழகத்திலும் அண்மையில் கண்டன ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. இந்நிலையில், இதன் உண்மைத் தன்மையைத் தெளிவுபடுத்தும் வகையில் தமிழகத்துக்கு விஜயம் செய்துள்ள அமைச்சர் திகாம்பரம், தமிழ்மாநில காங்கிரஸ் தலைவர் ஜி.கே.வாசன், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல். திருமாவளவன், நாம் தமிழர் கட்சியின் தலைவர் சீமான் ஆகியோரைச் சந்தித்து உரையாடினார். இதன்போதே மேற்குறித்த விடயத்தை அவர் குறிப்பிட்டார்.

தொண்டமான் எனும் பெயரை பயன்படுத்திக் குடும்ப அரசியல் செய்யப்பட்டு வருவதாகக் குறிப்பிட்ட திகாம்பரம், எந்த இடத்திலும் சௌமியமூர்த்தி தொண்டமான் எனும் பெயர் நீக்கப்படவில்லையெனக் கூறினார்.

சௌமியமூர்த்தி தொண்டமான் ஞாபகார்த்த மன்றம் தொடர்ந்தும் அவ்வாறே இயங்குமெனக் குறிப்பிட்ட அவர், அத்தகைய மன்றத்தின் கீழ் அரச நிறுவனங்களை நடத்திச் செல்வதில் உள்ள நடைமுறைச் சிக்கல்கள் காரணமாகவே நான்கு நிலையங்களின் பெயர்கள் மாற்றப்பட்டன எனத் தெரிவித்தார்.

அத்துடன், மன்றத்தின் கீழ் இடம்பெற்றதாகக் கூறப்படும் ஊழல் மோசடிகள் குறித்து விரைவில் விசாரணை நடத்தப்படவுள்ளதாகவும், உண்மை நிலையைக் கண்டறியத் தமிழக அரசியல் தலைவர்களை மலையகத்துக்கு வருகை தருமாறும் திகாம்பரம் அழைப்பு விடுத்துள்ளார்.

இதனை செவிமடுத்த தமிழக அரசியல் தலைவர்கள், தமக்கு ஒரு பக்கச் சார்பாகவே இந்தச் செய்தி சொல்லப்பட்டதாகவும் சிங்கள அரசு இத்தகைய காரியத்தில் ஈடுபட்டதாகச் சொல்லப்பட்டதால் உணர்ச்சி மேலோங்கி தமிழுணர்வுடன் தமது அறிக்கைகளை வெளியிட்டதாகவும் குறிப்பிட்டனர் என அமைச்சர் திகாம்பரத்தின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

தமிழக அரசியல் தலைவர்களுடனான இந்தச் சந்திப்பில், நாடாளுமன்ற உறுப்பினர் எம். திலகராஜும் கலந்துகொண்டார்.

# கோட்டா விரைவில் கைது?



கொழும்பு, நவ.22

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ விரைவில் கைது செய்யப்பட உள்ளார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

கடந்த அரசின் காலத்தில் மெதமுலன பிரதேசத்தில் டீ.ஏ. ராஜபக்ஷ அருங்காட்சியகம் மற்றும் நினைவகம் அமைக்கப்பட்டபோது அரச நிதி தவறாகப் பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பிலேயே அவர் கைது செய்யப்படவுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் திட்டத்தை இலங்கைக் காணி மீட்பு மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்துக்குக் கையகப்படுத்தி அரசுக்கு சுமார் 9 கோடி ரூபா நட்டம் ஏற்படுத்தப்பட்டதாக அவர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

காணி மீட்பு மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான 9 கோடி ரூபா நிதி தவறாகப் பயன்படுத்தப்பட்டதாக கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டின்படி பொலிஸ் நிதிமோசடி விசாரணைப் பிரிவினரால் கோட்டாபய ராஜபக்ஷ உள்ளிட்ட சம்பந்தப்பட்ட சில தரப்பினரிடம் இதற்கு முன்னர் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

குறைந்த செலவில் இதனை நிர்மாணிப்பது அரசுக்குப் பிரச்சினையை எற்படுத்தியிருப்பதாகவும், அதை இந்த அரசு தவறாகப் பயன்படுத்தியதாகக் கருதுகின்றது என்றும் கோட்டாபய ராஜபக்ஷ இதற்கு முன்னர் கூறியிருந்தார்.

இதில் கோட்டாபய ராஜபக்ஷவைக் கைது செய்வதற்கான அனுமதியைச் சட்டமா அதிபரும் வழங்கியுள்ளார் எனத் தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# கிழக்கு உள்ளூராட்சிச் சபைகளை மு.கா. தனித்து நின்று கைப்பற்றும்

## முன்னாள் முதலமைச்சர் சொல்கிறார்



மட்டக்களப்பு, நவ.22

புல்மோட்டை முதல் பொத்துவில் வரையுள்ள பெரும்பான்மையான உள்ளூராட்சிச் சபைகளை முஸ்லிம் காங்கிரஸ் தனித்து நின்று கைப்பற்றும் என கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் செய்னுலாப்தீன் நஸீர் அஹமட் நேற்றுத் தெரிவித்தார்.

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் என்னும் கட்சி, உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடப் போவதில்லை. அவர்கள் ஐக்கிய தேசியக் கட்சியினூடாகவே வாக்குக் கேட்கின்றனர்.

அமீர் அலிக்கோ, மஹ்ரூப்புக்கோ மக்கள் அளிக்கின்ற வாக்கு ஐக்கியத் தேசியக் கட்சிக்கு அளிக்கும் வாக்காகும். இதன் மூலம் முஸ்லிம்களுக்கு கிடைக்கின்ற நன்மை என்ன?

ஆனால், அவர்கள் தமக்கான இலாபங்களையே ஈட்டிக் கொள்வார்கள்.

அதேபோன்று தேசிய காங்கிரஸ் கட்சியினர் தமது வாக்குகளைப்பெற்று, மாயக்கல்லி மலையில் சிலை வைக்க முன்னின்ற ஒன்றிணைந்த எதிர்க்கட்சியின் வீரசேகர போன்றோருக்கே தாரை வார்க்கப் போகின்றனர்.

சுதந்திரக் கட்சியின் இராஜாங்க அமைச்சர் ஹிஸ்புல்லாஹ்வுக்கோ அல்லது சுபைருக்கோ அளிக்கும் வாக்கு அக்கட்சியையே பலப்படுத்தும். அதனால் நம் சமூகத்துக்குக் கிடைக்கப் போகும் பலன் என்ன?

ஆகவே, இந்த உள்ளூராட்சித் தேர்தலில் கிழக்கின் பிரதேச சபைகள், நகர சபைகள் மற்றும் மாநகர சபைகளை வென்றெடுக்க முஸ்லிம்கள், முஸ்லிம் காங்கிரஸுக்கு வாக்களிக்கவேண்டும்.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸோ அல்லது தேசிய காங்கிரஸோ நமக்குச் சவால் அல்ல என்பதை நாம் சுட்டிக் காட்ட வேண்டும். – என்றார்.

# உள்ளூராட்சித் தேர்தலில் ஈ.பி.டி.பி. தனி வழியில்; சில இடங்களில் ஐ.ம.சு.கூட்டமைப்பில் இணைந்து!

## அக்கட்சியின் செயலாளர்நாயகம் டக்ளஸ் எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, நவ.22

நடைபெறவிருக்கும் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி தனித்தே போட்டியிடுவதற்கு தயாராகிவருகின்ற நிலையில், தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் பேச்சுகளுக்கு அமைவாக பல இடங்களில் தனித்தும் சில இடங்களில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பினருடன் நட்புறவைப் பேணும் முகமாக இணைந்தும் போட்டியிடுவதற்கான வாய்ப்புகள் குறித்தும் பிராந்திய கூட்டுதொடர்பாகவும் பேச்சுகளை ஈ.பி.டி.பி. முன்னெடுத்து வருகின்றது என்று அக்கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா எம்.பி. தெரிவித்தார்.

நேற்று முன்தினம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் கொழும்பில் நடைபெற்ற ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக் கட்சிகளுடனான சந்திப்பில் கலந்துகொள்ளுமாறு ஜனாதிபதியினால் விடுக்கப்பட்ட அழைப்பை ஏற்று ஈ.பி.டி.பியின் சார்பில் அதன் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான குழுவினர் கலந்துகொண்டனர்.

அந்தச் சந்திப்பில் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் தொடர்பாகவும் நாட்டின் சமகால அரசியல் சூழல்நிலை தொடர்பான பல விடயங்களும் கலந்துரையாடப்பட்டன.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் தனித்துப் போட்டியிடுவதற்கான ஆயத்தங்களை ஈ.பி.டி.பி. செய்திருப்பதாகவும் நட்புறவைப் பேணும் முகமாக சில இடங்களில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் சின்னத்தில் இணைந்தும் பல இடங்களில் ஈ.பி.டி.பி. தனது வீணைச் சின்னத்தில் தனியாகவும் போட்டியிடுவதற்கு முடியும் என்று அவர் அங்கு தெரிவித்தார்.

இதேவேளை ஈ.பி.டி.பி தனித்து வீணைச் சின்னத்தில் போட்டியிடும் இடங்களில் கருத்து ஒருமைப்பாடுடைய முற்போக்குச் சக்திகளுடனும் சிறுகட்சிகளுடனும் பொது மற்றும் சமூக அமைப்புக்களுடனும் இணைந்து பிராந்தியக் கூட்டமைத்து போட்டியிடுவதற்கும் ஈ.பி.டி.பி தயாராக இருக்கின்றது என்றும் அதுதொடர்பான பேச்சுகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# பல்கலை மாணவர் அனுமதி; அதிகரிக்க அரசு நடவடிக்கை

கொழும்பு, நவ.22

அரச பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களை அனுமதிக்கும் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் 2020ஆம் ஆண்டில் 50 ஆயிரம் வரை பல்கலைக்கழக அனுமதியை அதிகரிப்பதற்கு எதிர்பார்ப்பதாகவும் உயர்கல்வி இராஜாங்க அமைச்சர் மொஹான் லால் கிரேரு தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற வரவு – செலவுத்திட்ட விவாத அமர்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு கூறினார்.

தொடர்ச்சியாக ஒவ்வொரு வருடம் பல்கலைக்கழக அனுமதி வீதம் அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும், இது அனைத்து இளைஞர் யுவதிகளுக்கும் பெரும் வெற்றி எனவும், அரச பல்கலைக்கழக அனுமதி எண்ணிக்கையை மேலும் அதிகரிப்பதாகவும் அமைச்சர் கூறினார்.

# பிணை முறி விவரம் அறியவே அலோசியஸுடன் பேசினேன்

## அமைச்சர் சுஜீவ சேனசிங்க விளக்கம்



கொழும்பு, நவ.22

மத்திய வங்கிப் பிணை முறிக் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பிலான விவரங்களை அறிந்துகொள்வதற்காக மட்டுமேதான் அர்ஜுன் மகேந்திரன் மற்றும் அர்ஜுன் அலோசியஸுடன் தொடர்புகளை ஏற்படுத்தினார் என இராஜாங்க அமைச்சர் சுஜீவ சேனசிங்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது, அர்ஜுன் அலோசியஸுடன் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொலைபேசியில் உரையாடிய விடயம் தொடர்பில் சுஜீவ சேனசிங்கவிடம் கேள்விகள் முன்வைக்கப்பட்டன.

குறித்த கேள்விகளுக்குப் பதில் அளிக்கும்போதே அவர் இதனைக் கூறினார்.

அவர்களிடம் வேறு விவரங்கள் தொடர்பில் தான் உரையாடவில்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## உயர்நீதிமன்றத்தின் உத்தரவு

வடக்கு மாகாண அமைச்சர்கள் நியமனம் தொடர்பில் மீன்பிடி, போக்குவரத்து முன்னாள் அமைச்சர் பா.டெனீஸ்வரன் தாக்கல் செய்த வழக்கு ஒன்று சம்பந்தமாக உயர்நீதிமன்றம் நேற்று முக்கிய உத்தரவு ஒன்றை வழங்கியிருக்கின்றது.

இந்த வழக்கில் பிரதான எதிர்மனுதாரர் வடக்கு மாகாண முதலமைச்சர். அவர் முன்னாள் உயர்நீதிமன்ற நீதியரசரும் கூட.

அவர், தம்மை வடக்கு மாகாண அமைச்சர் பதவியிலிருந்து நீக்கிய முறைமை தவறு என்று மாகாண சபை உறுப்பினரான பா.டெனீஸ்வரன் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் பூர்வாங்க வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்தார். மனுதாரரான பா.டெனீஸ்வரனும் ஒரு சட்டத்தரணி என்பது குறிப்பிடத்தக்கது.

அவர் தாக்கல் செய்த மனுவை மேன்முறையீட்டு நீதிமன்றம் தள்ளுபடி செய்து தீர்ப்பளித்ததிருந்தது. அந்தத் தீர்ப்புக்கு எதிராக அவர் உயர்நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்தார்.

அந்த மேன்முறையீட்டைப் பரிசீலித்த உயர்நீதிமன்றம் முன்னைய தள்ளுபடித் தீர்ப்பை தள்ளுபடி செய்திருக்கின்றது. அது மாத்திரமல்ல. மனுதாரர் டெனீஸ்வரனின் வழக்கை மேன்முறையீட்டு நீதிமன்றம் திரும்பவும் உரிய முறையில் விசாரிக்க வேண்டும். அதுவும், அந்த வழக்கைத் தள்ளுபடி செய்த இரண்டு நீதியரசர்களும் இடம்பெறாத மேன்முறையீட்டு ஆயத்தில் இந்த வழக்கு விசாரிக்கப்பட வேண்டும் என்றும் உயர்நீதிமன்றம் உத்தரவிட்டிருக்கின்றது.

டெனீஸ்வரனின் மூல வழக்கைத் தள்ளுபடி செய்வதற்கு முன்னைய மேன்முறையீட்டு ஆயம் இரண்டு காரணங்களை முன்வைத்திருந்தது.

வழக்குத் தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட சத்தியக் கடதாசிகளில் சில உறுப்புரை ஒப்பமில்லை என்பது அவற்றுள் ஒன்று. அதனைக் காட்டி வழக்கைத் தள்ளுபடி செய்வது சரியானதுதான் என்று மூலவழக்கின் எதிர்மனுதாரரான முதலமைச்சரின் சட்டத்தரணி கனகஈஸ்வரன் கூட உயர்நீதிமன்றத்தில் வாதிடவில்லை. அந்த அற்ப காரணத்தைக் காட்டி வழக்கைத் தள்ளுபடி செய்தமையை உயர்நீதிமன்றம் ஏற்க மறுத்துவிட்டது.

அடுத்து - டெனீஸ்வரன் தொடர்ந்த வழக்கில் ஏதோ ஆழமான விடயங்கள் பொதிந்திருக்கின்றன. அமைச்சர்கள் நியமனம், பதவி நீக்கம் தொடர்பான நடைமுறைகள் குறித்து பரிசீலிக்கப்பட வேண்டிய விடயங்கள் உள்ளன. ஒருவரை அமைச்சர் பதவியிலிருந்து தாம் நீக்குகின்றார் என்று முதலமைச்சர் உத்தியோகபூர்வமாக எழுதும் கடிதத்தை, எடுத்த எடுப்பிலேயே அது ஒரு தகவல் அறிவிப்பு மட்டுமே என்ற குறிப்பாக கருதி அதனை ஒதுக்கி விட முடியாது. அப்படி ஒதுக்கி வழக்கைத் தள்ளுபடி செய்வது பொருத்தமற்றது. இந்த வழக்கில் மனுதாரரின் முறைப்பாடு முறைப்படி - விரிவாக - நீதிமன்றத்தினால் பரிசீலிக்கப்பட வேண்டும் என்றும் உயர்நீதிமன்றம் கருத்து வெளியிட்டிருக்கின்றது.

மாகாண அமைச்சர் ஒருவரைப் பதவி நீக்கம் செய்வதாயின் அதுபற்றிய அறிவித்தல் ஆளுநரினால் வர்த்தமானியில் பிரகடனப்படுத்தப்பட வேண்டும். வர்த்தமானி அறிவித்தலுக்கான ஆவணங்கள் பூர்த்தியாகும் போதுதான் அந்த அமைச்சர் தமது பதவியை இழக்கின்றமையும், அதனால் வெற்றிடம் ஏற்படுகின்றமையும், அந்த வெற்றிடத்துக்குப் புதியவர் நியமிக்கப்படுகின்றமையும் இடம்பெறலாம் எனச் சட்ட வட்டாரங்கள் சுட்டிக் காட்டுகின்றன.

இவ்விவகாரத்தில் இந்த விடயங்களில் பல ஓட்டைகள் இருக்கின்றமையைப் பயன்படுத்தியே டெனீஸ்வரன் மேன்முறையீட்டு நீதிமன்றுக்குச் சென்றிருக்கின்றார் என்று கூறப்படுகின்றது.

அவை குறித்து விளக்கமாக - விவரமாக - ஆராயாமல், அல்லது அந்த விடயங்கள் குறித்து தீர்க்கமான ஒரு தீர்ப்பைக் குறிப்பிடாமல், டெனீஸ்வரனின் வழக்கை மேன்முறையீட்டு நீதிமன்றம் தள்ளுபடி செய்திருக்கின்றமையே உயர்நீதிமன்றம் அது விடயத்தில் மறு விசாரணைக்கு உத்தரவிடக் காரணம் என்றும் அந்தச் சட்ட வட்டாரங்கள் சுட்டிக் காட்டுகின்றன.

அது மாத்திரமல்ல. இந்த மேன்முறையீட்டு விடயத்தில் உயர் நீதிமன்றம் செயற்பட்ட முறைமையும் கவனிக்கத்தக்கது.

மேன்முறையீடு நேற்று உயர்நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டபோது நீதிமன்றம் மேன்முறையீட்டைப் பரிசீலிக்கும்; கூடிய பட்சம் அதை விசாரணைக்கு ஏற்க அல்லது நிராகரிக்க முடிவு செய்த உத்தரவிடும் என்று மட்டுமே எதிர்பார்க்கப்பட்டது. அதையும் தாண்டி சில சமயம் எதிர்மனுதாரர்களுக்கு அடுத்த தவணைக்கு ஆஜராவதற்கு நோட்டீஸ் உத்தரவு அனுப்பப் பணிப்புரை விடுக்க கூடும் என்றும் கருதப்பட்டது.

ஆனால், உயர்நீதிமன்றம் அதை எல்லாம் தாண்டி, இந்த மேன்முறையீட்டு மனுவின் அடிப்படைகளை நேற்று நீண்ட நேரம் பரிசீலித்தது. நோட்டீஸ் உத்தரவு அனுப்பி, விடயத்தை இன்னொரு திகதிக்கு ஒத்திவைத்து, இழுபட அது அனுமதிக்கவில்லை.

பரிசீலனைக்கு விடயத்தை எடுத்த அன்றே, அதனை ஆராய்ந்து ஒரு முடிவை அது எடுத்து அறிவித்திருக்கின்றது. மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தள்ளுபடித் தீர்ப்பை அது தள்ளுபடி செய்திருக்கின்றது. புதிய மேன்முறையீட்டு ஆயத்தின் முன்னால் அந்த மூல வழக்கு விசாரிக்கப்பட வேண்டும் என அது உத்தரவிட்டுள்ளது.

அது மாத்திரம் அல்ல. இந்த மூல வழக்குத் தாக்கல் செய்யப்பட்ட விடயம் தீர்க்கப்படாமல் இவ்வளவு காலம் இழுபடுவது தேவையற்றது எனக் கருத்து வெளியிட்டுள்ள உயர்நீதிமன்றம், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் புதிய ஆயம் இந்த மூலவழக்கை தாமதமின்றி - விரைந்து - விசாரித்துத் தனது தீர்ப்பை - முடிவை - அறிவிக்க வேண்டும் எனவும் பணித்துள்ளது.

மாகாண அமைச்சர்களின் நியமனம், பதவி விலக்கல் முறைமைகள் தொடர்பில் வழிகாட்டுத் தீர்ப்பு ஒன்று இந்தச் சர்ச்சையினால் வெளிவரும் என்பது மட்டும் இப்போதைக்கு உறுதியாகியுள்ளது எனக் கூறலாம்.

# மேல்மாகாண தமிழ்மொழி ஆசிரியர் பதவி வெற்றிடங்கள்; பட்டதாரிகளை இணைத்துக்கொள்வதற்கு நடவடிக்கை!

கொழும்பு, நவ. 22

மேல்மாகாண கல்வி அமைச் சிற்குட்பட்ட பாடசாலைகளில் நிலவும் தமிழ்மொழி ஆசிரியர் பதவி வெற்றிடங்களுக்கு பட்டதாரிகள் இணைத்துக் கொள்ளப் படவுள்ளனர்.

மேல்மாகாணம் உள்ளிட்ட ஏனைய சகல மாவட்டங்களில் நிரந்தரமாக வசிக்கும் பட்டதாரிகளிடமிருந்து இதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

மேல்மாகாணத்திற்கு காணப்படும் வெற்றிடங்களுக்கு மேல் மாகாணத்திற்குள் நிரந்தரமாக வசிக்கும் விண்ணப்பதாரிகள் எழுத்து மூல போட்டிப்பரீட்சைக்கு சித்தியடையாத சந்தர்ப்பங்களில் மாத்திரம் புள்ளிகளின் அடிப்படையில் சப்ரகமுவ, மத்திய, ஊவா, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்தோர் நியமிக்கப்படுவர்.

இவர்கள் தகவல் தொழில்நுட்பம் மற்றும் அழகியற்கலை பாடங்களுக்கு மாத்திரமே தெரிவு செய்யப்படுவர்.

இது தொடர்பான விவரம் நேற்று வெளியான அரச வர்த்தமானியில் வெளியாகியுள்ளது.

# கடந்த 2016 ஆம் ஆண்டில் 35,199 வாகன விபத்துக்கள்!

2016 ஆம் ஆண்டில் இடம்பெற்ற வாகன விபத்துக்களின் எண்ணிக்கை 35 ஆயிரத்து 199 ஆகும்.

இதில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 201 என்றும் ஆளும் கட்சியின் பிரதம கொரடாவும் நாடாளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் காணி அமைச்சருமான கயந்த கருணாதிலக தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உறுப்பினர் ஒருவர் வாய்மொழி மூலம் கேட்ட கேள்விக்கே அமைச்சர் இவ்வாறு பதிலளித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

2014 ஆம் ஆண்டு இடம்பெற்ற விபத்துக்களின் எண்ணிக்கை 35 ஆயிரத்து 966. 2015 ஆம் ஆண்டில் 35 ஆயிரத்து 160 விபத்துக்கள். 2016 ஆம் ஆண்டில் இத்தொகை 35 ஆயிரத்து 199.

விபத்துக்களினால் 2016 ஆம் ஆண்டு உயிரிழந்தோரின் எண்ணிக்கை 3 ஆயிரத்து 233. 2014 ஆம் ஆண்டு 2 ஆயிரத்து 440. 2015 ஆம் ஆண்டு 2 ஆயிரத்து 816 என்றும் அமைச்சர் மேலும் சுட்டிக்காட்டினார்.

# மக்கள் ஆட்சிக்கான அரசமைப்புத் தொடர்பில் கையெழுத்துச் சேகரிக்கும் நடவடிக்கை!





மக்கள் ஆட்சிக்கான அரசமைப்பு அமைக்க சமயத் தலைவர்களது ஆதரவு வேண்டி கையெழுத்துச் சேகரிக்கும் நடவடிக்கை ஒன்று நேற்று மல்லாவி அனிஞ்சியன்குளம் பகுதியில் நடைபெற்றது.

அன்புக்கும் நட்புக்குமான இளைஞர்களின்வலையமைப்பு என்ற அமைப்பு நேற்றுக்காலை அனிஞ்சியன்குளம் பொது நோக்கு மண்டபத்தில் இந்த நிகழ்வை நடத்தியது.

மக்களுடனான இந்தச் சந்திப்பில் அரசமைப்புத் தொடர்பாகக் கலந்துரையாடி மக்கள் ஆட்சிக்கான அரசமைப்பு ஒன்றை அமைப்பது தொடர்பாக சமயத் தலைவர்களின் ஆதரவு வேண்டி கையெழுத்து சேகரிக்கும் நடவடிக்கையும் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் அந்தப் பகுதியைச் சேர்ந்த சுமார் நூற்றுக் கணக்கான மக்கள் கலந்து கொண்டு தமது கையெழுத்துக்களை பதிவு செய்தனர். (க-81)

# மாவீரர் வார ஆரம்ப நாள் நிகழ்வு வன்னிவிளாங்குளம் துயிலும் இல்லத்தில்



கிளிநொச்சி, நவ. 22

தமிழ் மக்களின் உரிமை மீட்புக்காகத் தம் உயிரைத் துச்சமென ஆகுதியாக்கிய வீரமறவர்களை நினைவு கூரும் முகமாக கார்த்திகை 21 - 27 ஆம் திகதி வரை மாவீரர் வாரமாக அனுஷ்டிக் கப்படுகிறது.

அந்தவகையில் இம்முறை மாவீரர் வாரத்தின் முதல் நாளான நேற்று வன்னி விளாங்குளம் மாவீரர் துயிலுமில்லத்தில் மாவீரர்களின் பெற்றோர் உறவுகளால் சுடரேற்றி மலர் தூவி வீர மறவர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

அத்தோடு, இந்த துயிலுமில்லத்தில் மாவீரர் நாள் நிகழ்வுகள் நடாத்துவதற்கான ஏற்பாடுகள் அனைத்தும் பூர்த்தியடைந்துள்ளன எனவும் அனைத்து மாவீரர் பெற்றோரையும் தமது பிள்ளைகளுக்கு அஞ்சலி செலுத்த வருகை தருமாறும் பணிக்குழு அழைப்பு விடுத்துள்ளது. (க-81)

## நாளை

23.11.2017
வியாழக்கிழமை

நட்சத்திரம் : உத்தராடம் முழுவதும்
திதி : பஞ்சமி பி.இ. 02.59 வரை

சுபநேரம் : 07.41 – 09.11 வரை
இராகுகாலம்: 01.41 – 03.11 வரை

# வடக்கில் இராணுவத்தின் பங்களிப்பில் பல்வேறுபட்ட சுகாதாரத் திட்டங்கள்!

கொழும்பு, நவ. 22

மூன்று தசாப்தகால யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடக்கு மக்களின் வாழ்க்கையை மீண்டும் கட்டியெழுப்பும் அரசின்நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் ஆலோசனையின் பேரில் முப்படையின் பங்களிப்புடன் நடைமுறைப்படுத்தப்படும் பல்வேறு அபிவிருத்தி நடவடிக்கைகள் தற்போது நிறைவுசெய்யப்பட்டுள்ளன.

இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் மகேஷ் சேனநாயக்கவின்கண்காணிப்பின் கீழ் இராணுவத்தின் பங்களிப்புடன் வட பகுதி மக்களின் சுகாதார வசதிகளை முன்னேற்றுவதற்கு சுகாதார அமைச்சுடன் இணைந்து நடைமுறைப்படுத்தப்பட்ட பல்வேறு திட்டங்கள் தற்போது வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம்மருதங்கேணி பிரதேச வைத்தியசாலை, ஊர்காவற்றுறை தள வைத்தியசாலை, வட்டுக்கோட்டை பிரதேச வைத்தியசாலை, வேலணை பிரதேச வைத்தியசாலை மற்றும் கொடிகாமம் பிரதேச வைத்தியசாலை ஆகிய வைத்தியசாலைகளின் வெளிநோயாளர் பிரிவு மற்றும் வார்ட்டுத் தொகுதிகள், மருத்துவ அதிகாரிகளுக்கான வதிவிடங்களை நிர்மாணித்தல் உள்ளிட்ட அபிவிருத்தி நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.



மேலும், கிளிநொச்சி பிரதேசத்தின் மல்லாவி தள வைத்தியசாலை, மாங்குளம் தள வைத்தியசாலை, கிளிநொச்சி மாவட்ட வைத்திய சாலை ஆகிய வைத்திய சாலைகளும் முல்லைத்தீவு பிரதேசத்தில் சம்பத்நுவர மாவட்ட வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவு ஆகியவற்றின்நிர்மாணப் பணிகளும் நிறைவு செய்யப்பட்டுள்ளன.

வன்னிப் பிரதேசத்தில் வவுனியா தள வைத்தியசாலை, மாந்தை மேற்கு கிராமிய வைத்தியசாலை, மருத்துவ அதிகாரிகளுக்கான வதிவிடங்கள் நிர்மாணம் உள்ளிட்ட அபிவிருத்தி நடவடிக்கைகள் வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டுள்ளன.

நிர்மாணப் பணிகள் நிறைவடைந்துள்ள அனைத்து திட்டங்களையும் சுகாதார அமைச்சுக்கு கையளிப்பதற்கு இலங்கை இராணுவம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

# சாதாரண தரப் பரீட்சைக்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தி!



கொழும்பு, நவ. 22

அடுத்த மாதம் 12 ஆம் திகதி ஆரம்பமாகும் ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

இதுதொடர்பாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் பி.சனத் பூஜித தெரிவிக்கையில்-

இம்முறை புதிய பாடத்திட்டத்தின் கீழ் நான்கு லட்சத்து 14 ஆயிரத்து 94 பேர் தோற்றுகின்றனர். பழைய பாடத் திட்டத்தில் 14 ஆயிரத்து 799 பேர் தோற்றுகின்றனர்.

இதற்கமைவாக பரீட்சைக்கு தோற்றும் மொத்த பரீட்சையாளர்களின் எண்ணிக்கை நான்கு லட்சத்து 24 ஆயிரத்து 493 பேர் என்று அவர் தெரிவித்துள்ளார்.

தனிப்பட்ட பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை இரண்டுலட் சத்து 50 ஆயிரத்து 80 ஆகும்.

நாடு முழுவதும் ஆயிரத்து 516 பரீட்சை நிலையங்களில் பரீட்சை நடைபெறவுள்ளது. ஆயிரத்து 23 இணைப்பு மத்திய நிலையங்கள் செயற்படும். க.பொ.த. சாதாரண பரீட்சை எதிர்வரும் 21 ஆம் திகதி நிறைவடையவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

(க)

## 39 மாணவர்களுக்கு திடீர் சுகவீனம்; டயகம வைத்தியசாலையில் சேர்ப்பு!

கொழும்பு, நவ. 22

டயகம தமிழ் வித்தியாலயத்தில் கல்வி பயிலும் 39 மாணவர்கள் திடீரென சுகவீனமுற்ற நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்த மாணவர்கள் வழக்கம் போல் நேற்றுக் காலை கற்றல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தபோதே அவர்களுக்கு மயக்கமும் வாந்தியும் ஏற்பட்ட நிலையில் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

இதேவேளை, கடந்த 19 ஆம் திகதி டயகம பகுதியில் இடம்பெற்ற ஆலய கும்பாபிஷேக நிகழ்வில் வழங்கப்பட்ட அன்னதானத்தை உண்ட சிலர் இவ்வாறு நோய்வாய்க்குட்பட்டமை தெரியவந்துள்ள நிலையில் சுகாதார பரிசோதகரால் அந்த விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

டயகம வைத்தியசலையில் அனுமதிக்கப்பட்ட மாணவர்களில் சிலர் சிகிச்சையின் பின் வீடு திரும்பியுள்ளனர் என்றும் ஏனையோர் தொடர்ந்தும் சிகிச்சைபெற்று வருகின்றனர் என்றும் எவருக்கும் ஆபத்தான நிலை இல்லை எனவும் வைத்தியசாலை அதிகாரிகள் தெரிவித்தனர்.

## பொலிஸ் அதிகாரியைத் தாக்கிய இராணுவச் சிப்பாய் கைது!

கொழும்பு, நவ. 22

மரண வீடொன்றில் ஏற்பட்ட கருத்து முரண்பாடு காரணமாக, பொலிஸ் அதிகாரி ஒருவரைத் தாக்கினார் எனக் கூறப்படும் இராணுவச்சிப்பாய் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று ஆனைமடு பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுமுன்தினம் மாலை ஆனைமடு - தட்டெவ பகுதியில் இந்த சம்பவம் இடம் பெற்றது.

மேலும், தாக்குதலுக்கு இலக்கானார் எனக் கூறப்படும் பொலிஸ் உத்தியோகத்தர் ஆனைமடு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, கைது செய்யப்பட்ட சந்தேகநபரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை ஆனைமடு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(க)

## ஆஸ்திரேலியாவில் இலங்கைக்கான சுற்றுலா பயணிகளை ஈர்க்கும் வேலைத்திட்டம்!




ஆஸ்திரேலியாவில் இலங்கைக்கான சுற்றுலா பயணிகளை ஈர்க்கும் தொடர்வேலைத் திட்டம் ஒன்றை இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகம் மேற்கொண்டுள்ளது.

இதன் ஒரு கட்டமாக அந்த நாட்டு தலைநகரான பேர்த் நகரில் முதலாவது பயண வர்த்தக வீதி நிகழ்வொன்றை நேற்று முன்தினம் மேற்கொண்டுள்ளது.

ஆஸ்திரேலிய கேந்திரமான பகுதியில் நடத்தப்பட்ட பயண முகவர்கள் இலங்கைக்கான ஹோட்டல் ஏற்பாட்டாளர்கள் உள்ளிட்ட பலர் இதில் கலந்துகொண்டனர்.

இதன்போது உரையாற்றிய இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகத்தின் சந்தைப் படுத்தல் பணியாளர் மதுபாணி பெரேரா, இந்த ஆண்டில் இலங்கைக்கு வருகை தந்துள்ள சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை 8 சதவீதமாக அதிகரித்துள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

(க)

# ‘போதையற்ற நாடு’ விழிப்புணர்வுப் பேரணி





மட்டக்களப்பு, நவ.22

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் போதையற்ற நாட்டை உருவாக்கும் திட்டத்தின் கீழ் மாபெரும் விழிப்புணர்வு பேரணியொன்று நேற்றுமுன்தினம் மட்டக்களப்பில் நடைபெற்றது.

தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார நடவடிக்கை அமைச்சும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றமும் இணைந்து கிழக்கு மாகாணத்தின் பிரதான நிகழ்வாக இந்த நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தன.

இதனையொட்டி மட்டக்களப்பு கல்லடிப் பாலம் அருகில் இந்த நிகழ்வு இடம்பெற்றது. போதையற்ற நாட்டை உருவாக்கும் நிகழ்வு தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் கிழக்கு மாகாண பணிப்பாளர் சிசிரகுமார தலைமையில் நிகழ்வுகள் ஆரம்பமாகின. ஆரம்ப நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்டத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினரும் இளைஞர் சேவைகள் மன்ற முன்னாள் உத்தியோகத்தருமான சீ.யோகேஸ்வரன் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார்.

இந்த நிகழ்வில் மட்டக்களப்பு, அம்பாறை,திருகோணமலை மாவட்டங்களின் தேசிய இளைஞர் சேவைகள் மன்ற பணிப்பாளர்கள், உத்தியோகத்தர்கள், இளைஞர் யுவதிகள், பொலிஸ் உயர் அதிகாரிகள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

இதன்போது கல்லடிப் பாலத்தினருகில் நடைபெற்ற நிகழ்வைத் தொடர்ந்து விழிப்புணர்வு ஊர்வலம் ஆரம்பமானது.இந்த ஊர்வலத்தில் கிழக்கு மாகாணத்தில் உள்ள ஆயிரத்திற்கும் மேற்பட்ட இருந்து இளைஞர், யுவதிகள் கலந்துகொண்டனர்.

(ப)

# உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தயார்!

## பொதுநிகழ்வில் ஸ்ரீநேசன் எம்.பி.

மட்டக்களப்பு, நவ.22

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தயார் நிலையில் உள்ளது என நாடாளுமன்ற உறுப்பினர் ஸ்ரீநேசன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு - ஏறாவூர்ப்பற்று பிரதேச விளையாட்டுக் கழகங்கள் மற்றும் பொது அமைப்புகளுக்கு உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இந்த நிகழ்வில், கலந்துகொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார். இதன்போது, தொடர்ந்து கருத்து வெளியிட்டுள்ள அவர்,

நாட்டின் உரிமையைப் பகிர்ந்து வாழும் நிலையை ஏற்படுத்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மிகவும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டுக் கொண்டிருக்கிறது. உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தயார் நிலையில் உள்ளது. எமது கட்சி ஊழல், மோசடிகள், லஞ்சம் போன்றவற்றுக்கு அப்பாற்பட்ட வகையில் மக்களுக்கு இயன்ற விடயங்களைச் செய்துகொடுத்துள்ளோம்.

தமிழ் மக்கள் வாழுகின்ற பிரதேசத்தில் தங்களது விடயங்களை தாங்களே கையாளக் கூடிய வகையிலும், தமது அதிகாரங்களைப் பெற்றுக்கொள்ளக் கூடிய வகையிலும் புதிய அரசமைப்பு இருக்கவேண்டும் என்றும் கூறியுள்ளார்.

இதேவேளை, அரசமைப்பின் இடைக்கால அறிக்கையை வாசித்து விளங்கிக் கொள்ளாமல் அவற்றைப் பற்றி வியாக்கியானங்களைக் கொடுப்பதைவிட ஆழமாகச் சிந்தித்து அறிந்து கொள்வதன் மூலமாகத் தெளிவை ஏற்படுத்திக் கொள்ளலாம் எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் ஸ்ரீநேசன் தெரிவித்துள்ளார்.

(ப)

# கிரான் செல்லப்பா அணைக்கட்டு திறப்பு



கிழக்கு மாகாண முன்னாள் விவசாய அமைச்சர் துரைராஜசிங்கத்தின் 25 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் அமைக்கப்பட்ட கிரான் பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட இலுமிச்சையடி, கரந்தவட்டவான் பிரதேசத்திலுள்ள செல்லப்பா அணைக்கட்டு மக்கள் பாவனைக்காகத் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வு நேற்றுமுன்தினம் கரந்தவட்டவான் கமநல அமைப்பின் ஏற்பாட்டில் இடம்பெற்றது. கரந்தவட்டவான் கமநல அமைப்பினரின் வேண்டுகோளுக்கிணங்க முன்னாள் அமைச்சரின் பிரமாண அடிப்படையிலான நிதி ஒதுக்கீட்டின் மூலம் செல்லப்பா அணைக்கட்டு நிர்மாணிக்கப்பட்டது.

40 வருடங்களாக இப்பிரதேச விவசாயிகள் இவ்வணைக்கட்டு நிர்மாணிக்கப்படாமையால் பெரும் அசௌகரியத்தை எதிர்நோக்கியுள்ளனர். பல்வேறு தரப்பினரிடம் சென்று தெரிவித்த போதும் இதனைச் செய்து தருவதற்கு யாரும் முன்வராத நிலையில் முன்னாள் அமைச்சரின் முயற்சியால் தற்போது இவ் அணைக்கட்டு நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

இதனால், அவருக்கு நன்றி தெரிவிக்கின்றோம், இந்த அணைக்கட்டு நிர்மாணிக்கப்பட்டமையினால் அணைக்கட்டை அண்டிய பகுதிகளில் சுமார் 300 ஏக்கர்களுக்கு மேல் கூடுதலான விவசாயம் மேற்கொள்ள முடியும் எனவும் விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த நிகழ்வில் கிழக்கு மாகாண முன்னாள் விவசாய அமைச்சர் துரைராஜசிங்கம், நீர்ப்பாசனத் திணைக்கள மாகாணப் பிரதிப் பணிப்பாளர் எம். வடிவேல் உள்ளிட்டவர்கள் கலந்துகொண்டனர்.

(ப)

## பிரதேச சபைக்கான தேர்தல்

# காரைதீவு மக்கள் ஒன்று கூடி சுயேச்சையாக போட்டியிட முடிவு

எதிர்வரும் காரைதீவு பிரதேச சபைக்கான உள்ளூராட்சித் தேர்தலில் சுயேச்சையாகப் போட்டியிடுவது எனக் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஊர்த் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

காரைதீவு விபுலானந்த மணிமண்டபத்தில் அறங்காவலர் சபைச் செயலாளர் சி.நந்தேஸ்வரன் தலைமையில் ஊர்ப் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

சுமார் 3 மணிநேரம் இடம்பெற்ற இந்தக் கூட்டத்தில் ஊருக்கான மகா சபையை அமைப்பதென்றும் அதன் முதற்கட்டமாக பிரிவு தோறும் ஒவ்வொரு உறுப்பினர்களைத் தெரிவு செய்ததோடு தலைவர் செயலாளர் பொருளாளர் உள்ளிட்ட நிறை வேற்றுச் சபையும் ஆலோசகர் சபையும் தெரிவு செய்யப்பட்டது.

ஊர்மக்களின் கருத்துக்கள் 3மணிநேரம் அறியப்பட்டது. புதிய கலப்புமுறைத்தேர்தல் தொடர்பாக சிரேஷ்ட ஊடகவியலாளர் வி.ரி.சகாதேவராஜா விளக்கமளித்தார். இறுதியில் இம்முறை கட்சிகளை மறந்து ஊர் இறைமை கருதி ஒரு சுயேச்சை அணியில் கேட்பது எனவும் அதில் எந்தக் கட்சியைச் சார்ந்தவர்களும் போட்டியிடலாமெனவும் முடிவானது. அதற்கான திட்டங்களும் முன்வைக்கப்பட்டன.

சுயேச்சையில் போட்டியிடுவது தொடர்பிலும் த.தே. கூட்டமைப்பில் போட்டியிடுவது தொடர்பிலும் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

ஸ்ரீலங்கா சு.கட்சி, ஐ.தே. கட்சி மற்றும் ரி.எம்.வி.பி ஆகிய கட்சிகளின் பிரதிநிதிகள் நாம் தனித்துக் கேட்கத் தயாராக விருந்தாலும் ஊர்முடிவு என்னவோ அதற்கு கட்டுப்படுவோம் எனக் கருத்துரைத்தனர். த.தே. கூட்டணிப்பிரமுகர்கள் அக்கட்சியிலே போட்டியிடவேண்டும் எனவும் கேட்டுக்கொண்டனர்.

இறுதியாக மக்கள் விருப்பத்தை ஜனநாயக முறைப்படி அறிவதற்காக தலைவர் சி.நந்தேஸ்வரன் சுயேச்சை அணியை களமிறக்குவது என்பதற்கு ஆதரவானோர் கையை உயர்த்தும்படி கூறினார். சபையிலிருந்த கணிசமானோர் கையை உயர்த்தி ஆரவாரித்தனர்.

த.தே.கூட்டமைப்புப் போட்டியிட வேண்டுமென்பதற்கு ஆதரவானோர் கையை உயர்த்தும்படி கோரினார். ஆக 3 பேர் கையை உயர்த்தினர்.

இறுதியில் ஜனநாயக முறைப்படி மக்கள் விருப்பப்படி பெரும்பான்மையோர் கோரும் சுயேச்சையில் போட்டியிடுவது என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

# ஐ.நா. அமைதி காக்கும் பாதுகாப்பு அமைச்சர்களுக்கான மாநாடு!

கொழும்பு, நவ. 22

கனடா வான்கூவர் நகரில் 2017 ஆம் ஆண்டுக்கான ஐ.நா. அமைதி காக்கும் பாதுகாப்பு அமைச்சர்களுக்கான மாநாடு அண்மையில் இடம் பெற்றது.

பாதுகாப்பு செயலாளர் கபில வைத்தியரத்ன தலைமையில் உள்நாட்டு பிரதிநிதிகள் குழுவினர் பங்கேற்ற இந்த மாநாடு இரண்டு நாள்கள் இடம்பெற்றது.

ஐந்து சர்வதேச அமைப்புக்களும் 79 நாடுகளைச் சேர்ந்த சுமார் 550 இற்கும் அதிகமான பிரதிநிதிகளும் இந்த வருடம் இடம்பெற்ற இம்மாநாட்டில் கலந்துகொண்டனர்.

கடந்த 14 ஆம் திகதி ஆரம்பமான மாநாட்டின் இறுதி நாளான இரண்டாவது நாள் இடம்பெற்ற மாநாட்டு 'உறுதி மொழி'யின் கீழ் 'புதிய கண்டு பிடிப்புக்கான பயிற்சி மற்றும் திறன் ஒருங்கமைப்பு', 'ஆபத்தில் இருப்பவர்களைப் பாதுகாத்தல்' மற்றும் 'ஆரம்ப எச்சரிக்கை மற்றும் துரித வளர்ச்சி' ஆகிய பிரிவுகளிலும் அமர்வுகள் இடம்பெற்றன.

இலங்கையை பிரதிநிதித்துவப் படுத்தி செயலாளரால் 'உறுதி மொழி'' முன் வைக்கப்பட்ட அதேவேளை, கனடிய பிரதமர் றுதேவினால் முதலாவது 'உறுதிமொழி'' முன்வைக்கப் பட்டமை குறிப்பிடத்தக்கது.




# முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு பத்து ஆயிரம் ரூபா மேலதிக கொடுப்பனவு!



கொழும்பு, நவ. 22

இலங்கையின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான ஓய்வூதியத்துக்கு மேலதிகமாக, 10 ஆயிரம் ரூபா கொடுப்பனவு கடந்த ஒக்ரோபர் மாதம் முதல் வழங்கப்படும் என நாடாளுமன்ற மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

262 முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களும், மரணமான நாடாளுமன்ற உறுப்பினர் களின் மனைவிமார் 220 பேரும், ஓய்வூதியத்தைப் பெற்று வருகின்றனர்.

இவர்களுக்கு கடந்த மாதம் தொடக்கம், மேலதிகமாக 10 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கப்படுகிறது. இதனால் அரசுக்கு, 2 கோடியே 62 லட்சம் ரூபா மேலதிக செலவு ஏற்பட்டுள்ளது.

ஐந்து ஆண்டுகள் நாடாளுமன்ற உறுப்பினராகப் பணியாற்றியவர்கள் இந்த ஓய்வூதியத்தைப் பெறுவதற்குத் தகுதி வாய்ந்தவர்களாவர்.

நாடாளுமன்ற உறுப்பினர்களின் சம்பளத்தில் மூன்றில் ஒரு பங்கு ஓய்வூதியமாக வழங்கப்படுகிறது.

ஐந்து ஆண்டுகள் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த ஒருவர் பெறும் ஆகக் குறைந்த ஓய்வூதியம், 18,095 ரூபாவாகும்.

அதேவேளை, 15 ஆண்டுகள் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தவருக்கு, 36,190 ரூபா ஓய்வூதியமாக வழங் கப்படும்.

அமைச்சரவை முடிவுக்கமையவே, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு மேலதிக கொடுப்பனவு 10 ஆயிரம் ரூபா வழங்கப்படுகிறது.

பல முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது குறைகளை சபாநாயகருக்கு எடுத்துக் கூறியிருந்தனர். அத்துடன், தமக்கு குறைந்தளவு ஓய்வூதியமே வழங்கப்படுகிறது எனவும் தெரிவித்திருந்தனர்.

சபாநாயகர் இதனை அரசிடம் தெரிவித்ததை அடுத்தே, அமைச்சரவையில் இந்த முடிவு எடுக்கப்பட்டது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

(க)

# பத்து கைதிகள் மாத்திரம் மோசமான குற்றவாளிகள்!

## இலங்கை அரசு கூறுகிறது

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள 10 பேர் மாத்திரம், தீவிரமான குற்றச்செயல்கள் தொடர்பான வழக்குகளில் தொடர்புபட்ட சந்தேக நபர்களாக உள்ளனர் என்று இலங்கை அரசு தெரிவித்துள்ளது.

நாடாளுமன்றத்தில் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் நேற்றுமுன்தினம் உரையாற்றியிருந்தார்.

அவரது உரைக்குப் பதிலளிக்கும்போதே பிரதி நீதி அமைச்சர் சாரதி துஸ்மந்த மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள 10 பேர் மாத்திரம், தீவிரமான குற்றச்செயல்கள் தொடர்பான வழக்குகளில் தொடர்புபட்ட சந்தேகநபர்களாக உள்ளனர்.

இவர்கள் அனைவரும் தீவிரவாதச் செயல்களுடன் தொடர்புடைய மோசமான குற்றங்களில் ஈடுபட்ட சந்தேக நபர்கள்.

மேஜர் ஜெனரல் ஜனக பெரேரா கொலை, சரத் பொன்சேகா மீதான கொலை முயற்சி, கோட்டாபய ராஜபக்ஷ கொலை முயற்சி, வில்பத்து சரணாலயத்தில் 7 படையினர் கொலை, அனுராதபுர விமானப்படைத் தளத் தாக்குதல், போன்றவற்றில் தொடர்புடைய சந்தேகநபர்கள் இதில் உள்ளடங்கியுள்ளனர் என்று அவர் தெரிவித்துள்ளார்.

# எட்கா பொருளாதார உடன்பாடு குறித்து இந்தியாவுடன் அடுத்த மாதம் பேச்சு!

## அமைச்சர் மலிக் சமரவிக்கிரம தெரிவிப்பு



கொழும்பு, நவ. 22

இந்தியாவுடனான எட்கா எனப்படும் பொருளாதாரத் தொழில்நுட்ப ஒத்துழைப்பு உடன்பாடு குறித்த அடுத்த கட்டப் பேச்சுக்கள், அடுத்தமாதம் நடைபெறும் என்று சிறிலங்காவின் அபிவிருத்தி மூலோபாய மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர் மலிக் சமரவிக்கிரம தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

எட்கா உடன்பாடு குறித்து இந்தியாவுடன் இதுவரை ஆறு சுற்றுப் பேச்சுக்கள் நடத்தப் பட்டுள்ளன.

இந்தியாவுடனான சுதந்திர வர்த்தக உடன்பாட்டில் உள்ள நடைமுறை சிக்கல்களைத் தீர்ப்பதே எட்கா உடன்பாட்டின் முக்கிய நோக்கம்.

இலங்கைக்கு இந்த உடன்பாடு முக்கியத்துவம் வாய்ந்தது. எதிர் வரும் ஆண்டுகளில் இந்தியா வேகமாக வளரும் பொருளாதாரத்தைக் கொண்டதாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதுவரை நடத்தப் பட்ட பேச்சுக்களில், இந்தியா பல விடயங்களுக்கு இணங்கியுள்ளது. ஆடை மற்றும் மிளகுக்கான ஒதுக்கீடுகளை அகற்றுவதற்கும் பேச்சுக்கள் நடத்தப்படுகின்றன.

சீனா- இலங்கை இடையில் செய்து கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ள சுதந்திர வர்த்தக உடன்பாடு, 70 கோடி டொலர் வர்த்தகத்தை உருவாக்கும்.

ஆடை தயாரிப்புத் துறை மாத்திரம் 40 கோடி டொலர் வர்த்தகத்தைப் பெறும்.

சுதந்திர வர்த்தக உடன்பாடு குறித்து சீனாவுடன் இதுவரை ஆறு சுற்றுப் பேச்சுக்கள் நடத்தப்பட்டுள்ளன. இதன் மூலம் கணிசமான முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# நேற்று இந்தியா சென்றார் ரணில்; பிரதமர் மோடியுடனும் பேசுவாராம்!



கொழும்பு, நவ. 22

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று இந்தியாவுக்கு அதிகாரபூர்வ பயணம் ஒன்றை மேற்கொண்டுள்ளார்.

நேற்று பெங்களூர் சென்ற பிரதமர், உடுப்பி அருகே உள்ள மூகாம்பிகை அம்மன் ஆலயத்தில் வழிபாடுகளை மேற்கொண்டுள்ளார்.

அதன் பின்னர் பெங்களூரில் தங்கியிருந்து விட்டு, இன்று புதுடில்லி செல்வார். அங்கு இலங்கைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியைச் சந்தித்து இருதரப்புப் பேச்சுக்களில் ஈடுபடவுள்ளார்.

புதுடில்லியில் தங்கியிருக்கும் போது, அவர் இந்திய குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்துடனும் பேச்சுக்களை நடத்தவுள்ளார்.

அத்துடன், புதுடில்லியில் உள்ள ஏரோசிற்றியில், வரும் வியாழக்கிழமை இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி ஆரம்பித்து வைக்கவுள்ள, 5 ஆவது பூகோள மின்வெளி கருத்தரங்கின் ஆரம்ப விழாவிலும் பிரதமர் பங்கேற்கவுள்ளார்.

இலங்கைப் பிரதமருடன், அவரது பாரியார் மைத்திரி விக்கிரமசிங்க, அமைச்சர்கள் சாகல ரத்நாயக்க, இலங்கைப் பிரதமரின் செயலர் மற்றும் மேலதிக செயலர், சிறப்பு உதவியாளர் ஆகியோரும் இந்தியா செல்லவுள்ளனர்.

# அடையாள அட்டை இன்றி 3 லட்சம் வாக்காளர்கள்!

கொழும்பு, நவ. 22

இலங்கையில் சுமார் 3 லட்சம் வாக்காளர்கள் தேசிய அடையாள அட்டை இல்லாமல் இருக்கின்றனர் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதன் காரணமாக எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலுக்கு முன்னதாக அனைத்து வாக்காளர்களுக்கும் அடையாள அட்டைகளைப் பெற்றுக் கொடுப்பதை இலக்காகக் கொண்டு தேசிய அடையாள அட்டை இல்லாதவர்களுக்கு அடையாள அட்டைகளைப் பெற்றுக் கொடுப்பதற்கான தேசிய வேலைத்திட்டம் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது

## தினசரி ராசி பலன் 22.11.2017

2017 ஆம் ஆண்டு ஏவிளம்பி வருடம் கார்த்திகை திங்கள் 7 ஆம் நாள் புதன்கிழமை. சதுர்த்தி திதி பி.இ 2.55 மணிவரை. பின்னர் பஞ்சமி. நட்சத்திரம் பூராடம் முழுவதும். அமிர்தயோகம் முழுவதும்.

**ராகுகாலம்** - *பகல் 11.56 மணிமுதல் 1.23 மணிவரை.*

**சுபநேரம்** - *மாலை 4.45 மணிமுதல் 6.15 மணிவரை.*

**திவசம் செய்ய வேண்டிய திதி** - *கார்த்திகை மாத வளர்பிறை சதுர்த்தி.*

**பிறந்த நட்சத்திர வழிபாடு:** *பூராடம்.*

**'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.**

**மேஷம் :** யோகமான நாள். கடந்த காலக் கனவுகள் நிறைவேறும். உத்தியோகத்தில் இவர்கள் விரும்பிய பணி கிட்டும். ஆடம்பரப் பொருள்கள் வாங்குவார்கள். வெளியூர்ப் பயணத்தால் வருமானம் உண்டாகும்.

**ரிஷபம் :** கவலையான நாள். பணவரவு குறையும். குடும்பத்தில் தகராறுகளால் மனக்கவலை உண்டாகும். உறவினர்கள், நண்பர்களுடன் வீண்பகைமை உண்டாகும்.

**மிதுனம் :** சமபலன்கள் காணப்படுகின்றன. வருமானம் சுமாராக இருக்கும். தொழிலில் போட்டிகளை வென்று சமாளிப்பார்கள். உத்தியோகப் பணியில் வேலைச் சுமை அதிகரிக்கும்.

**கடகம் :** இன்பமான நாள். பணப்புழக்கம் சரளமாக இருக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். திருமணக் காரியம் சிறப்பாக அமையும். பெண்களுக்கு புதிய நகைகள் வாங்கும் வாய்ப்பு அமையும்.

**சிம்மம் :** ஆக்கபூர்வமான நாள். பணப்புழக்கம் அதிகரிக்கும். தடைப்பட்ட காரியங்கள் கைகூடும். பகையாய் இருந்த உறவுகள் மீண்டும் ஒன்று சேரும் வாய்ப்பு உண்டாகும்.

**கன்னி :** குழப்பமான நாள். மனக்குழப்பம், யோசனை அதிகரிக்கும். பணம் பற்றாக்குறையாக இருக்கும். வியாபாரிகளுக்கு சக வியாபாரிகளுடன் பகைமை உண்டாகும்.

**துலாம் :** மகிழ்ச்சியான நாள். பணப்புழக்கம் தாராளமாக இருக்கும். குடும்பத்தில் எல்லையற்ற மகிழ்ச்சி காணப்படும்.

**விருச்சிகம் :** இனிமையான நாள். பொருளாதாரம் வளமாகக் காணப்படும். குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும். குடும்பத்தில் சுபகாரியங்கள் நடக்கும்.

**தனுசு :** அதிஷ்டமான நாள். பணபலம், மனபலம் அதிகரிக்கும். உத்தியோகத்தர்களுக்கு பதவி உயர்வு, ஊதிய உயர்வு கிடைக்கும் வாய்ப்பு அமையும். இதுவரை இழுபறியாய் இருந்த சொத்துக்கள் வந்துசேரும்.

**மகரம் :** யோசனையான நாள். பணவரவு குறைவடையும். உடல் நலனில் அக்கறை தேவை. வரவுக்கு மீறிய செலவு வரும். புதிதாக கடன்படவேண்டி வரும்.

**கும்பம் :** மேன்மையான நாள். பொருளாதாரம் ஏற்றம் அடையும். திட்டமிட்டபடி பலதுறைகள் வெற்றிக்கு வழிகாட்டும். வியாபாரிகள் வெளியூர்களில் புதிய கிளைகள் நிறுவுவார்கள்.

**மீனம் :** மத்திமபலன்கள் காணப்படுகின்றன. வருமானம் சுமாராக இருக்கும். புதிய முயற்சிகளில் ஆர்வம் குறையும். மங்கல நிகழ்ச்சிகளில் ஏற்ற, இறக்கம் தென்படும்.

**சந்திராட்டமநாள்:** கார்த்திகை 2 ஆம், 3 ஆம், 4 ஆம் பாதங்கள், ரோகினி, மிருகசீரிடம் 1ஆம், 2 ஆம் பாதங்களில் பிறந்தவர்கள் நற்காரியங்களில் ஈடுபடுவதைத் தவிர்க்கவேண்டும்.

# நீதிமன்ற அவமதிப்பு விவகாரம்; ரஞ்சன் உயர்நீதிமன்றில் ஆஜர்!

பிரதியமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க நேற்று உயர்நீதி மன்றத்தில் மீண்டும் ஆஜரானார்.

நீதிமன்றத்தை அவமதித்த விவகாரம் தொடர்பில் வண. மாகல் கந்த சுதந்த தேரர் மற்றும் ஓய்வு பெற்ற விமானப் படை அதிகாரி ஒருவரும் தாக்கல் செய்த மனு மீதான விசாரணைகளுக்கு பதிலளிக்கவே அவர் இவ்வாறு நீதிமன்றம் சென்றுள்ளார்.

இதுதொடர்பில் ரஞ்சன் ராமநாயக்க ஊடகங்களிடம் கருத்து தெரிவிக்கையில்-

இந்த நாட்டில் பெரும் பாலான சட்டத்தரணிகள் ஊழல்வாதிகள் என நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் கூறியமையானது, மக்களுக்கு சட்டம் தொடர்பில் இருக்கும் நம்பிக்கையை சீர்குலைக்க வாய்ப்புள்ளது எனவும் மனுதாரர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதனால், நீதிமன்றத்திற்கு அபகீர்த்தி ஏற்பட்டுள்ளது எனவும் அவர்கள் கூறியுள்ளனர்.

இதற்கமைய, குறித்த மனுவை ஆராய்ந்த உயர்நீதிமன்றம், கடந்த ஒக்ரோபர் 25ம் திகதி அவரை நீதிமன்றத்தில் ஆஜராக உத்தரவு பிறப்பித்தது. இதன்படி, ஆஜரான அவரை மீண்டும் நேற்று நீதிமன்றத்தில் முன்னிலையாக உத்தரவு பிறப்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# சத்திய சாயி பாபாவின் அவதார தினவிழா நாளை

யாழ்ப்பாணம், நவ.22



சத்தியசாயி பாபாவின் 92 ஆவது அவதார தினவிழா நாளை வியாழக்கிழமை சேர். பொன்.இராமநாதன் வீதி, திருநெல்வேலியிலுள்ள பகவான் ஸ்ரீசத்தியசாயி சேவா நிலையத்தில் இடம்பெறவுள்ளது.

அதிகாலை 4.45 மணிக்கு ஓம்காரம் சுப்ரபாதம், நகரசங்கீர்த்தனம் இடம்பெறும்.

காலை நிகழ்வுகள் 8.30 மணிக்கு பிரசாந்திக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி வேதபாராயணம், அஸ்டோத்திரம், திருநீற்றுப் பதிகம், காயத்திரி ஜெபம், பாதநமஸ்காரம், பஜனை என்பன இடம்பெறவுள்ளன.

முற்பகல் 10.30 மணிக்கு திருமதி மதுராங்கியின் பாட்டு, ஷ்யாம் கிருஷ்ணாவின் வயலின், சதாவேல்மாறனின் மிருதங்கம் மற்றும் சத்தியஜித்தின் மோர்சிங் அடங்கிய ''இசை அர்ப்பணம்'' இடம்பெறவுள்ளது.

தொடர்ந்து 11.20 மணிக்கு மாவட்ட ஆயுர்வேத இணைப்பாளர் டாக்டர் ஜெயதர்ஷினி சத்துருக்கனின் ''பகவானின் போதனைகளும் அற்புதங்களும்'' எனும் பொருளில் சிறப்பு சொற்பொழிவு ஆற்றுவார். 11.50 மணிக்கு இந்திய இலங்கைக் கலைஞர்களின் உருவாக்கத்திலான இனிய பாடல்கள் அடங்கிய ''சாயிமதுரம்'' என்ற இறுவட்டு வெளியீடு மற்றும் நாம சங்கீர்த்தனம் இடம்பெறும். 12.30 மணிக்கு ஆரத்தியைத் தொடர்ந்து மதியபோசனம் வழங்கப்படும்.

மாலை நிகழ்வுகள் 2 மணிக்கு ''வீணா கானம்'' திருமதி விதுஷா கோபிகிருஷ்ணா, செல்வி கீர்த்தனா விக்னராஜா, செல்வி. துவாரகா வரதராஜா ஆகியோர் இணைந்து வழங்குகின்றனர். இதன் பக்கவாத்தியக் கலைஞர்களாக வயலின் - திருமதி உமா வைகுந்தன், மிருதங்கம் - நி.மதிரூபன், மோர்சிங் - இ.இராஜேஸ்வரன், கீபோர்ட் - திருமதி வ.கிருபாமேரி, ஆகியோர் கலந்துகொள்கின்றனர்.

பிற்பகல் 3.30 மணிக்கு ''வாழ்வின் ஆதாரம்'' எனும் பொருளில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் விஞ்ஞானபீட கணிதப் பேராசிரியர் கலாநிதி சி.சிறிசற்குணராசாவின் சிறப்புச் சொற்பொழிவு இடம்பெறும்.

மாலை 4 மணிக்கு நிலைத்தலைவர் பிரதீபன் வருடாந்த செயற்பாடுகளின் தொகுப்பினை விளக்குவார். தொடர்ந்து வேதபாராயணம், பஜனை, திருவூஞ்சல் என்பன இடம்பெற்று மாலை 5.45 மணிக்கு மகாமங்கள ஆராத்தி மற்றும் பிரசாதம் வழங்கலுடன் நிகழ்வுகள் நிறைவுபெறும்.

இந்நிகழ்வுகளின் நேரடி ஒளிபரப்பை ("sathya sai centre - jaffna facebook", இல் பார்வையிடமுடியும் என நிலையத் தலைவர் அறிவித்துள்ளார். (இ)

# பொதுசன உதவித் தொகை; மீளாய்வு செவ்வாயன்று

கொடிகாமம், நவ.22

மந்துவில் வடக்கு ஜே/347 கிராம உத்தியோகத்தர் பிரிவுக்குட்பட்ட பொதுசன மாதாந்த உதவித் தொகை பெற்றுக் கொள்ளும் பயனாளிகளுக்கு 2017 ஆம் ஆண்டுக்கான மீளாய்வு எதிர்வரும் 28 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 12.30 மணிவரை மந்துவில் பொதுநோக்கு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

மீளாய்வில் கலந்துகொள்ளும் பயனாளிகள் குடும்பப் பதிவு அட்டை, பொது மாதாந்த பதிவு அட்டை மற்றும் தேசிய அடையாள அட்டை ஆகியனவற்றை தவறாது கொண்டு வருமாறு கிராம உத்தியோகத்தர் எஸ். கானமூர்த்தி கேட்டுக் கொண்டுள்ளார். (இ)

# ஜெய்ப்பூர் நிறுவனத்தில் இரத்ததான முகாம்

யாழ்ப்பாணம், நவ.22

சர்வதேச மாற்றுத் திறனாளிகள் தினத்தை முன்னிட்டு யாழ். ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனம் எதிர்வரும் டிசெம்பர் மாதம் 5 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு இல.05 பழைய பூங்காவீதி, சுண்டுக்குளியிலுள்ள ஜெய்ப்பூர் நிறுவன அலுவலகத்தில் இரத்த தான முகாம் நடத்த ஏற்பாடு செய்துள்ளது.


இந்த இரத்ததான நிகழ்வில் ஜெய்ப்பூர் நிறுவனப் பணியாளர்கள், அலுவலக உத்தியோகத்தர்கள், பொது மக்கள் மற்றும் ஆர்வலர்கள் பங்குகொண்டு குருதிக் தட்டுப்பாட்டை நீக்குவதற்கு உதவுமாறு ஜெய்ப்பூர் நிறுவனத்தினர் கேட்டுக் கொள்கின்றனர். (இ)

# மின் தடை

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வியாழக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரை-


**கிளிநொச்சிப் பிரதேசத்தில்** - கரைகட்டுக்குளம் -

**வவுனியா பிரதேசத்தில்** பம்பைமடு கிராமம், அட்டம்பஸ்கட கிராமம், கற்பகபுரம் கிராமம், தவசிக்குளம் கிராமம் ஆகிய இடங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின்பொறியியலாளர் எம்.துவாரகன் அறிவித்துள்ளார். (இ)



**யாழ். மாநகரசபைக்குட்பட்ட இடங்களில்தேங்கிக்கிடக்கும் திண்மக் கழிவு அகற்றும் விசேட வேலைத்திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகிறது. அதன் ஆரம்ப நிகழ்வு நேற்றுமுன்தினம் குருநகர் ஐந்து மாடிக் குடியிருப்புப் பகுதியில் இடம் பெற்றது.**

**இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு வடக்கு மாகாண முதலமைச்சர் நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரன் உரையாற்றினார். அந்த உரை இங்கு பிரசுரமாகிறது.**



# திண்மக் கழிவு அகற்றல்: பொதுமக்கள் ஒத்துழைப்பு மிக மிக அவசியம்

## அபாயத்தை அறிவிக்கும் ‘அலாரம்’ அடிக்கிறது!

## உங்கள் குழந்தைகளுக்கு டெங்கு, மலேரியா வராமல் பாதுகாக்க விழிப்புடன் செயற்படுங்கள்!!

தற்போது மழைக்காலம் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் வட பகுதியில் டெங்குநோய்த் தாக்கம் மற்றும் மலேரியா நோய்த் தாக்கங்கள் விரைவாகப் பரவி வருகின்றமை பற்றி சுகாதார அமைச்சும் யாழ். போதனா வைத்தியசாலை வைத்திய நிபுணர்களும் பொதுச் சுகாதார பரிசோதகர்களும் அலாரம் அடித்தவண்ணம் உள்ளனர்.

குப்பை கூளங்களை நாமே அகற்றி புனிதமான நகரை உருவாக்குவோம் என்ற விசேட செயற்றிட்டம் ஒன்றை நாம் நடைமுறைப்படுத்த உத்தேசித்துள்ளோம். இந்நிலையில் யாழ்.மாநகர சபைக்கு உட்பட்ட பகுதிகளில் பெருமளவில் குவிந்து கிடக்கும் திண்மக் கழிவுகளை அகற்றுவதற்கென விசேட திண்மக் கழிவு அகற்றல் செயற்றிட்டம் ஒன்றை 20.11.2017 அதாவது - நேற்று முன்தினம் முதல் 24.11.2017 வரை - யாழ். மாநகரசபை, மாநகரசபைக்கு உட்பட்ட பிரதேச செயலகங்கள் மற்றும்உள்ளூராட்சித்திணைக்களங்கள் ஆகிய அனைத்தும்இணைந்துகொண்டு நடைமுறைப்படுத்த முன்வந்துள்ளன. இவ் வாறு நடைமுறைப்படுத்துவதன் மூலம் பொதுமக்களிடையே ஒருவிழிப்புணர்வை கொண்டுவர எத்தனித்துள்ளோம். பெரும் தாக்கங்களை ஏற்படுத்தக் கூடிய டெங்கு, மலேரியா போன்ற விரைவாகப் பரவிவரும் நோய்த் தாக்கங்களிலிருந்து எமது குழந்தைகளைப் பாதுகாத்து அவர்களை ஆரோக்கியமான குழந்தைகளாக வளர்த்தெடுப்பதற்கு வழிவகுக்கும் திட்டம் இதுவாகும்.

இவ் விசேடவேலைத்திட்டம் ஒருகால அட்டவணை அடிப்படையில் கடந்த 20ஆம் திகதி தொடக்கம் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை வரை மாநகரசபைக்கு உட்பட்ட பகுதிகளில் அகற்றப்படாமல் தேங்கிக் கிடக்கின்றகுப்பைகளைஅகற்றுவதற்கானஒருவேலைத் திட்டமாகமுன்மொழியப்பட்டுள்ளது. இதன் ஆரம்பநிகழ்வாக இன்று குருநகர் ஐந்துமாடிக் குடியிருப்பிலிருந்து ஆரம்பித்து கடற்கரைவீதி வரை கடலில் இருந்து அகற்றப்பட்ட கழிவுகளை அகற்றுகின்ற நிகழ்வுகள் இப்போது ஆரம்பமாக இருக்கின்றன.

### ஒத்துழையுங்கள்; தவறினால் யாழ். நகரம் குப்பை மேடாகிவிடும்

யாழ்.மாநகரசபை முழு அளவில் நாளொன்றுக்கு சுமார் 70 மெற்றிக் தொன் வரையான திண்மக் கழிவுகளை அகற்றுகின்றபோதும் குப்பைகளின் தேக்கம் தொடர்ந்து அதிகரித்தவண்ணம் உள்ளன. இந்நிலையில் இக் குப்பைகள் விரைந்து அகற்றப்படாவிடில் சில காலத்தில் யாழ்ப்பாண நகரம்குப்பைமேடாகக்காட்சியளிக்கும். இதனால் தான் நான் அண்மையில் ஓர் அவசரக் கூட்டமொன்றைக் கூட்டி இதைப்பற்றி ஆராய்ந்தேன்.

நாங்கள் வகுத்த வேலைத்திட்டம் பற்றி பிரதேச செயலாளர்களுடன் அளவளாவியபோது அவர்கள் தமது முழுமையான ஒத்துழைப்பை வழங்க முன்வந்தமை மட்டுமன்றி தமது அலுவலக உத்தியோகத்தர்களில் ஐம்பது பேர் வரை இவ் வேலைத்திட்டத்திற்கு ஒதுக்கித் தந்திருக்கின்றமை மன மகிழ்ச்சியைத் தருகிறது. அவர்களின் உதவி மகிழ்வுடன் ஏற்றுக்கொள்ளப் படுகின்றது.

இன்றைய இந்த நிகழ்வானது பொது மக்கள் மத்தியில்ஒருவிழிப்புணர்வைக் கொண்டுவரவேண்டும். பொதுமக்கள் மத்தியில் விழிப்புணர்வு வருகின்ற போதே திண்மக் கழிவு முகாமைத்துவத்தைத் திறம்பட நடத்த முடியும். நான் ஏனைய பிரதேசங்களுக்குச் செல்லும்போதுசிலவிடயங்களைஅவதானித்திருக்கின்றேன். கழிவுகள் அனைத்தும் விசேட கழிவகற்றல் பைகளில் இடப்பட்டு நாய்கள் இழுக்காதவகையில் உயரமான இடங்களில் வைத்திருப்பார்கள். மாநகரசபை வாகனங்கள் குறிப்பிட்ட நேரத்தில் அப்பகுதிக்கு வந்து அவற்றை எடுத்துச் செல்லும். ஆனால், எமது பகுதிகளில் ஒவ்வொரு வீட்டின் முன்பும் அல்லது வெறும் வளவுகளில் ஓர் உழவு இயந்திரம் நிரம்பக் கூடிய குப்பைகள் பைகளிலும் இடப்படாது முன் வாயில் ஓரங்களில் குவிக்கப்பட்டிருக்கின்றன. அவற்றில் இருக்கும் உணவுக் கழிவுகளை நாய்கள் வீதி முழுவதும் இழுத்து அசிங்கப்படுத்தி விடுகின்றன. படித்த, சமூகத்தில் நல்ல பதவியில் இருக்கும் சிலர்கூடத் தமது குப்பை கூளங்களைக் கொண்டுபோய் வீதிஓரங்களில் வீசிவிட்டுச் செல்கின்றார்கள். இது தவிர்க்கப்பட வேண்டும். இவ்வாறான சமூகத்தின் பெரிய மனிதர்களைக் கோட்டுக்குக் கொண்டுசென்றால் எப்படி இருக்கும் என்று அவர்கள் நினைத்துப் பார்க்க வேண்டும்.

எனவே, பொதுமக்கள் தமது ஒத்துழைப்புக்களை முழு அளவில் வழங்குகின்ற போதே திண்மக் கழிவு அகற்றல் நிகழ்வு சிறப்பாக அமையும். முடியுமான வரையில் காய்ந்த சருகுகள் போன்ற குப்பைகளை தோட்டத்தில் வெட்டித் தாக்க எமதுமக்கள் முன்வர வேண்டும். நான் கொழும்பில் என் வீட்டில் தரையைக் கூட்டிவரும் கழிவுகளை இதற்கான தொட்டில்களில் இட்டு மூன்று நான்கு மாதங்களுக்கு ஒரு முறை இயற்கை சேதனப் பசளையைப் பெற்று வருகின்றேன்.

### அயலவர்களுக்கும் நண்பர்களுக்கும் ஆலோசனை கூறுங்கள்

**படித்த, சமூகத்தில் நல்ல பதவியில் இருக்கும் சிலர்கூடத் தமது குப்பை கூளங்களைக் கொண்டுபோய் வீதி ஓரங்களில் வீசிவிட்டுச் செல்கின்றார்கள். இது தவிர்க்கப்படவேண்டும். இவ்வாறான சமூகத்தின் பெரிய மனிதர்களைக் கோட்டுக்குக் கொண்டுசென்றால் எப்படி இருக்கும் என்று அவர்கள் நினைத்துப் பார்க்க வேண்டும்.**

பொது மக்கள் விடுகின்ற சிறுசிறு தவறுகள் நுளம்புப் பெருக்கங்களுக்குக் காரணமாகி விடுகின்றன. வீட்டிலுள்ள பழையவாளிகள், பாற் பேணிகள், மீன் தகரங்கள், சிரட்டைகள் என்பவற்றில் தேங்குகின்ற மழை நீரில் நுளம்புக் குடம்பிகள் உற்பத்தியாவதன் மூலம் நுளம்புப் பெருக்கம் அதிகரிக்கின்றது. அதேபோன்று வீட்டுக் கூரைகளுக்கு மேல் இருக்கும் குப்பை கூளங்கள் அகற்றப்படாதபோது அங்கும் நுளம்புக் குடம்பிகள் உண்டாகும்.

உங்கள் சலவை இயந்திரம், குளிர்சாதனப் பெட்டி இவற்றுக்குக் கீழும் நுளம்புகள் உற்பத்தியாகலாம். இவற்றை நாம் சற்றேனும் அவதானித்து செயலாற்றும்போது நுளம்புப் பெருக்கம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்படும். தற்போது பொதுச் சுகாதார பரிசோதகர்கள் கிணறுகளை முழுமையாக வலைகளால் மூடி பாதுகாக்குமாறு கேட்டுக்கொண்டுள்ளனர். தகரங்களால் மூடுவது கூட தவறுஎன்கின்றார்கள். கிணற்றுநீரில் சூரியவெளிச்சம் படவேண்டும் என்று கூறுப்படுகின்றது. இவற்றையெல்லாம் கருத்திற் கொண்டு எமது அயலவர்களுக்கும் நண்பர்களுக்கும் ஏனைய மக்களுக்கும் இவற்றைப் பற்றிஎடுத்துக் கூற நாங்கள் முன்வரவேண்டும். அவ்வாறு அவர்களுக்குக் கூறுகின்றபோது அவர்களும் இவ்வாறானவிடயங்களில் கூடிய அவதானங்களைக் கொண்டிருப்பார்கள். நாம் சேர்ந்து ஒத்துழைத்தால் தான் குப்பைகளை அகற்றலாம். நோய்களைத் தடுக்கலாம்.

ஓரிரு வாரங்களுக்கு முன்னர் திண்மக் கழிவு மற்றும் டெங்கு நோய்க் கட்டுப்படுத்தல் தொடர்பான ஒரு கூட்டத்தில் உரையாற்றுகின்றபோது வர்த்தக நிலையங்களுக்கு முன்னால் காணப்படுகின்ற சிறு குழிகளில் தேங்கி நிற்கின்ற நீரிலிருந்து பல்லாயிரக் கணக்கான நுளம்புக் குடம்பிகள் உருவாவதற்கு வாய்ப்புக்கள் உண்டெனவும் இக் குழிகளை சிமெந்து இட்டு மூடுவதற்கு நூறுரூபா கூடச்செலவாகாது என்றும் குறிப்பிட்டிருந்தேன்.

### ஒத்துழைத்த அந்த ஒருவர்; அவருக்கு எனது நன்றி

நான் அவதானித்த அந்த ஒரு கடையின் முன்பு காணப்பட்ட குழி தற்போது சிமெந்து இட்டு மூடப்பட்டுள்ளது என எனது உத்தியோகத்தர்கள் மூலம் அறிந்து கொண்டேன். அவ்வாறு எம்முடன் ஒத்துழைத்தவருக்கு எமது நன்றிகள் உரித்தாகுக! அவர் போன்று மற்றைய சகோதர சகோதரிகளும் நோய்த் தடுப்பு விடயங்களில் தகுந்த கரிசனைகாட்டவேண்டும்.

எனது உரை ஒருவரையாவது சிந்திக்க வைத்துள்ளது என எண்ணிப் பெருமையடைகின்றேன். அந்த ஒருவரின் முன்னுதாரணத்தில் ஏனைய வர்த்தக நிலைய உரிமையாளர்களும் தமது வர்த்தக நிலையங்களுக்கு முன்பு காணப்படுகின்ற குழிகளை மூடுவார்கள் என எதிர்பார்க்கின்றேன். நாம் எல்லோரும் சேர்ந்ததே இந்த யாழ்ப்பாண நகரம். எமக்குள் ஒற்றுமை வேண்டும். விட்டுக் கொடுப்பு வேண்டும். அப்போது தான் நாம் யாவரும் இந்த நகரத்தைச் சுத்தமாகவும் சுகாதாரமாகவும் சீரியசுற்றுச் சூழல் உடையதாகவும் மாற்றலாம்.இன்றுநாம் தொடங்கியுள்ள இந்தச் செயற்றிட்டம் முழு வெற்றி அளிக்க வாழ்த்துகின்றேன். (இ)

தொகுப்பு: பொன்.வேணு கிருஷ்ணா




**அமெரிக்க மக்கள் தொகையின் பாதிப்பேரது மொத்த செல்வத்தினை விட அதிகமாக கொண்டுள்ளனர் மூன்றே மூன்று மாபெரும் கோடி கோடிகோடீஸ்வரர்** (Three billionaires are wealthier than half the US population)




கொள்கை ஆய்வுகள் நிறுவனம் (Institute for Policy Studies) வெளியிட்ட ஓர் அறிக்கையின் படி, மூன்று





அமெரிக்க பெரும் செல்வந்தர்கள் -ஜெஃப் பெசோஸ், பில் கேட்ஸ் மற்றும் வாரன் பஃபெட்- இப்போது அமெரிக்காவின் வறுமைப்பட்ட பாதி மக்கள்தொகை, அதாவது சுமார் 160 மில்லியன் பேர் கொண்டிருப்பதற்கும் அதிகமான செல்வத்தைக் கொண்டிருக்கின்றனர்.( According to a report published Wednesday by the Institute for Policy Studies, the three richest Americans—Jeff Bezos, Bill Gates, and Warren Buffett—now own more wealth than the poorest half of the US population, some 160 million people.)

பத்திரிகையாளர் ஃபேர்டினான்ட் லுன்ட்பர்க்கின் 1937 அம்பலப்படுத்தலில் ஆவணப்படுத்தப்பட்டிருந்த பெரிய செல்வத்தைக் கொண்ட அமெரிக்காவின் 60 குடும்பங்கள் வெறும் மூன்று பில்லியனர்களைக் கொண்டு பிரதியிடப்பட்டுள்ளன, இவர்களது ஒட்டுமொத்த செல்வத்தின் மதிப்பு 264 பில்லியன் டொலருக்கும் அதிகமாகும்.

**பில்லியனர் கொண்டாட்டம்:**

ஃபோர்ப்ஸ் 400 பேரும் எஞ்சிய நாமும் என்ற கொள்கை ஆய்வுகள் நிறுவனத்தின் அறிக்கை, அமெரிக்காவின் மிகவும் பணக்காரர்களாய் இருக்கும் 25 பேரது சொத்துமதிப்பு அமெரிக்காவின் கீழிருந்தான 56 சதவீத மக்களது சொத்து மதிப்பைக் காட்டிலும் அதிகம் என்பதை வெளிக்காட்டுகிறது. மிகவும் பணக்காரர்களாய் இருக்கும் 400 பேரது மொத்த சொத்துமதிப்பு நாட்டின் கீழிருந்தான மூன்றில் இரண்டு பங்கு மக்களது, அதாவது கிட்டத்தட்ட 20 கோடி பேரது சொத்துமதிப்பிற்கு நிகரானதாய் இருக்கிறது. அமெரிக்கா சொத்து மற்றும் அதிகாரத்துவத்தின் ஒரு வம்சாவளி பிரபுத்துவமாக ஆகியிருப்பதாக இந்த அறிக்கையின் ஆசிரியர்கள் தெரிவித்துள்ளனர்.

**சொத்து முன்கண்டிராத அளவில் ஓரிடத்தில் குவிவது என்பது ஒரு சர்வதேச நிகழ்வுப் போக்காக இருக்கிறது. உலகின் மிக செல்வந்தர்களான எட்டு பேரிடம் வறுமைப்பட்ட உலக மக்கள்தொகையின் பாதிப்பேர் கொண்டிருப்பதற்கு நிகரான செல்வம் இருப்பதாக 2017 ஜனவரியில் Oxfam தெரிவித்தது. இது முன்பு 2015 இல் 80 ஆக இருந்திருந்தது. இன்று உச்சத்தில் இருக்கும் ஐந்து பில்லியனர்களில் ஒவ்வொருவரிடமும் 750 மில்லியன் மக்களிடம், அதாவது லத்தீன் அமெரிக்காவின் மொத்த மக்கள்தொகை அல்லது அமெரிக்காவின் மக்கள்தொகை போன்று இரண்டு மடங்கு மக்களிடம் இருப்பதற்கு நிகரான சொத்து உள்ளது.**





அமெரிக்கத் தரவு, செல்வக் குவிப்பின் சொத்துப் பரவல். Credit: People's Policy Project

இப்போதைய மட்டங்களை குறைத்துமதிப்பிடுகிறது, ஏனென்றால் கடல்கடந்த வரிஏய்ப்பு புகலிடங்கள் மற்றும் சட்டரீதியான அறக்கட்டளைகளின் பயன்பாட்டுப் பெருக்கம் முன்னெப்போதினும் மிகப் பரந்த அளவில் சொத்துக்களை மறைத்திருக்கிறது என்று IPS அறிக்கை விளக்குகிறது. வரிஏய்ப்பு புகலிடங்களில் யார் சொத்துக்களைக் கொண்டிருக்கிறார்கள்? என்ற தலைப்பில் Alstadsaeter, Johannesen மற்றும் Zucman 2017 இல் வழங்கிய ஓர் அறிக்கை உலகின் மிகப்பெரும் செல்வந்தர்கள் 5.7 டிரில்லியன் டொலர் முதல் 32 டிரில்லியன் டொலர் வரையான தொகையை வரிவிதிப்பு அல்லது புள்ளிவிவரப் பகுப்பாய்வில் இருந்து மறைந்த நிலையில் கொண்டிருப்பதாகக் குறிப்பிடுகிறது.

பெரும்செல்வந்தர்கள், உத்தரவிடும் உயர்மட்டங்களில் ஆதிக்கம் செலுத்துகின்ற நேரத்தில், கீழிருக்கும் 90 சதவீதம் பேரோ கடின நிலைமையையும் எத்தனை தூரத்தில் என்பதில் மட்டுமே வித்தியாசப்படுகின்ற நெருக்கடிக்கும் முகம்கொடுத்திருக்கின்றனர். வாகனங்கள், வீட்டு சாதனங்கள் மற்றும் மரச்சாமான்கள் போன்ற பயன்பாட்டுப்பொருள்களைக் கழித்த பின்னர் தொழிலாள வர்க்க குடும்பங்களின் நிகர செல்வம் என்னவாக இருக்கிறது என்பதை IPD அறிக்கை அளவிடுகிறது. அதன் மதிப்பீட்டின்படி, 19 சதவீதத்திற்கும் அதிகமான அமெரிக்க குடும்பங்கள் -சுமார் 6 கோடி மக்கள்- இத்தகைய பயன்பாட்டு பொருள் களைக் கழித்துவிட்டால் பூச்சியம் அல்லது எதிர்மறை நிகர சொத்தையே கொண்டிருக்கின்றனர்.

(கேள்வி தொடரும்)



காலைக்கதிர் Kalaikkathir



# கம்பவாரிதி ஜெயராஜின் இலக்கிய அனுபவப் பகிர்வு 13

தமிழர் நாடறிந்த இலக்கியச் செம்மல் கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ். கம்பன் என்றால் ஜெயராஜ் என்று எண்ணுமளவுக்கு இலக்கியக் கம்பனாய் உருவெடுத்தவர் அவர். அவருடைய இலக்கிய அனுபவத் தொகுப்பு இங்கு தினசரி தொடராகப் பிரசுரமாகின்றது. 'உன்னைச் சரணடைந்தேன்' என்ற அவரது தொகுப்பில் 'யாழில் கம்பன்' பற்றிய தொடர் பதிவு இது.



## கழகம் பிறந்த கதை 22.05.1980

### மூவேந்தர் அரங்கு சென்றோம்

இப்படியாய் மற்றவர்கள் பாராட்டில் மகிழ்ந்து நின்றபின்பு, அன்று 'மூவேந்தர் அரங்கில்' கவிஞர் கண்ணதாசனின் தலைமையில், கவியரங்கு இருப்பதாய் அறிந்து, உடனே நாம் அங்கு சென்று விட்டோம். நாம் சென்ற பின்பு, பரபரப்பான பல விடயங்கள் தொல்காப்பியர் அரங்கில் அரங்கேறி, இலங்கையில் எங்களுக்குப் பெரிய பிரபல்யம் கிடைத்தது. அதுபற்றிப் பின் சொல்கிறேன்.

### கற்றோரின் சங்கமமும் கண்ணதாசன் கவியரங்கும்

நான் முன்சொன்னதுபோல மூவேந்தர் அரங்கு நிகழ்ச்சிகள் பொதுமக்களின் தமிழ்த் தாகத்தைத் தீர்க்கும்படி அமைந்திருந்தன. கிட்டத்தட்ட நாற்பதாயிரம் பேர் அமர்ந்திருக்கக்கூடிய பெரிய பந்தல். அவ்வரங்கில் பட்டிமண்டபம், வழக்காடு மன்றம், கவியரங்கம், கருத்தரங்கம் என பல நிகழ்ச்சிகள் நடந்தன. தமிழுலகில் பெயர் பெற்றிருந்த பல அறிஞர்களையும் பேச்சாளர்களையும், அவ்வரங்கில்தான் முதன்முதலில் நேரில் கண்டேன். திருமதி சௌந்தரா கைலாசம், பேராசிரியர் எஸ். இராமகிருஷ்ணன், நீதியரசர் மு.மு.இஸ்மாயில், தவத்திரு குன்றக்குடி அடிகளார், திரு.குமரி அனந்தன், திரு.சாலமன் பாப்பையா, திரு.சுகி.சிவம், கவிஞர் கண்ணதாசன், கவிஞர் வாலி, கவிஞர் வலம்புரி ஜோன் போன்ற பலரையும் தரிசிக்கும் வாய்ப்பை அவ்வரங்கு தந்தது. ஒரே இடத்தில் அத்தனை அறிஞர்களையும் கண்டு நான் பிரமித்ததை இன்றும் மறக்க முடியவில்லை. மேடையிலேயே கவிஞர் கண்ணதாசன், ஊசி போட்டுக்கொண்டிருந்து கவி பாடியதையும், பேராசிரியர் எஸ்.இராமகிருஷ்ணன் தலைமையில் நடந்த வழக்காடு மன்றத்தில், வலம்புரி ஜோனும் சுகி.சிவமும் கடுமையாய் மோதிக் கொண்டதையும், நடுவருக்குக் கட்டுப்பட மறுத்த அவர்களை பேராசிரியர் இராமகிருஷ்ணன், தன் ஆளுமையால் உத்தரவிட்டுக் கட்டுப்படுத்தியதையும், சபையைக் கலங்க வைத்த கவிஞர் வாலியின் கவிதையையும், சான்றாண்மை மிக்க அம்மையார் சௌந்தரா கைலாசம் அவர்கள் தந்த ஆசியையும், இன்றைக்கும் என்னால் மறக்க முடியாது. அன்று கண்ணதாசன் தலைமையில் நடந்த கவியரங்கத்தைக் கிறங்கக் கிறங்கப் பார்த்து இரசித்துவிட்டு இருப்பிடம் திரும்பினோம்.

### ''கண்டறியாதன கண்டேன்!''

இம் மாநாட்டில் பார்த்ததைப் போன்ற மக்கள் கூட்டத்தை எனது வாழ்நாளில் இன்றுவரை நான் பார்த்ததில்லை. பின்னாளில் தமிழ்நாட்டில் பல மாநாடுகளில் கலந்து கொண்டேன். கலைஞர் கருணாநிதி அவர்கள் நடத்திய, கோவை செம்மொழி மாநாட்டில் கலந்துகொள்ளும் வாய்ப்பும் கிடைத்தது. ஆனால், மதுரை மாநாட்டுக்கு நிகராக, அவற்றில் எதனையும் கூறமுடியாது என்பது உறுதி. மதுரை வீதிகள் முழுவதும் தலைகளே தெரிந்தன. எள்விழ இடமில்லை என்ற கற்பனை உவமையை நிஜமாக்கிய கூட்டம். எம்.ஜி.ஆர்., இந்திரா காந்தி, எம்.எஸ்.சுப்புலஷ்மி, பத்மா சுப்பிரமணியம் போன்ற மக்கள் கவர்ச்சி மிக்க பலரும் இவ்விழாவில் கலந்து கொண்டனர். தற்போதைய தமிழ்நாட்டு முதல்வர் ஜெயலலிதா, எம்.ஜி.ஆரை விட்டுப் பலகாலம் பிரிந்திருந்து, மீண்டும் எம்.ஜி.ஆரால் இம்மாநாட்டில்தான் அறிமுகப்படுத்தப்பட்டார். அதன்பின்னரே, அ.தி.மு. க. கட்சியில் ஜெயலலிதாவின் கை ஓங்கியது. இப்படி மக்களை ஈர்க்க, பல காரணங்கள் அம்மாநாட்டில் அமைந்திருந்தன. வாழ்க்கையில் நாங்கள் கனவிலும் கண்டிராத கூட்டம் அது. மதுரை முழுவதும் விழாக் கோலம் பூண்டிருந்தது.




### சாப்பாட்டுக்குத் திண்டாட்டம்!

மாநாட்டு ஒழுங்குகளை மிக அற்புதமாகச் செய்திருந்தார்கள். மாநாடு தொடங்கி ஒரு நாள் கழிந்த பின்னர்தான் நாம் மதுரை வந்துசேர முடிந்தது. இராமேஸ்வரத்திலேயே மாநாட்டின் அதிர்வுகளைக் கண்டு வியந்தோம். எம்.ஜி.ஆரின் செயலாளரது கடிதத்தைக் காட்டியதும், இராமேஸ்வர 'ரயில்' நிலையத்திலேயே, எங்களுக்கு ராஜ மரியாதை தந்தார்கள். மதுரை வந்து சேர்ந்ததும் அம் மரியாதை மேலும் அதிகரித்தது. நாம் தங்குவதற்கென மதுரை 'பொலிரெக்னிக்' கல்லூரியில், மூன்று அறைகளை ஒதுக்கித் தந்தார்கள். ஓர் அறையே நாம் ஏழு பேரும் தங்கக் கூடிய வகையில், பிரமாண்டமாய் இருந்தது. உணவு மட்டும் எமது பொறுப்பு. மாநாட்டுக்காரர்கள் அவ்வளவு பெரிய மக்கள் கூட்டத்தை எதிர்பார்க்கவில்லைப் போலும், சாப்பாட்டுக்குப் படாத பாடுபட்டோம். சாப்பாட்டுக் கடைகளுக்குள் நுழையவே முடியவில்லை. கடைக்காரர்கள் ஒற்றைக் கதவை மட்டும் திறந்து, தொகுதி தொகுதியாக மக்களை உள்ளெடுத்தார்கள். கடைக்குள் நுழைய பலதரம் விழுந்தெழும்ப வேண்டியிருந்தது. எல்லாக் கடைகளிலும் ஊத்தப்பம் மட்டும்தான் எப்போதும் கிடைத்தது. அந்த அனுபவமும் மறக்க முடியாததே!

### காற்றினிலே வந்த கீதம்

காலையில் கிடைத்த மறக்க முடியாத இன்ப அனுபவம், மாலையில் கேட்ட இனிய கவியரங்கம், கிடைத்தற்கரிய அறிஞர்களின் சந்திப்பு, சன நெரிசல் அனுபவம், சாப்பாட்டுக்கு சண்டை என, அன்று முழுவதும் கிடைத்த வேறுபட்ட அனுபவங்களால் களைப் புற்றிருந்தோம். எம்.ஜி.ஆர். சந்திப்பின் சந்தோசத்தை மறக்க முடியவில்லை. அந்தக் களைப்புக்குள்ளும் நடந்தவற்றை நான் சொல்லச் சொல்ல, குமாரதாசன் கடிதமாய் எழுதி, அடுத்த நாளே அக்கடிதத்தை சிவராமலிங்கம் மாஸ்டருக்கு அனுப்பி வைத்தான். பின், உடைமாற்றிப் படுக்கப்போனோம். திடீரென அருகில் எங்கோ பாடகர் மதுரை சோமுவின் பாட்டுக் கேட்டது. விசாரித்ததில் அருகிலுள்ள மைதானத்தில் அவர் பாடுவது தெரியவந்தது. நான்,கிரி, மாணிக்கத்தின் அத்தான் என எல்லோரும் இசைப்பிரியர்கள். அந்த நாள்களில் இப்படிப்பட்ட பெரிய கலைஞர்களைக் காணக்கிடைப்பதே பெரிய விஷயம். அதனால், களைப்பை மறந்து, உடனே மீண்டும் எழுந்து உடைமாற்றிக்கொண்டு அக்கச்சேரியைக் கேட்கப் போனோம்.

### மதுரை சோமு தரிசனம்

இசைமேதை மதுரை சோமு அவர்களின் அன்றைய கச்சேரியை, வாழ்நாளில் மறக்க முடியாது. சோமு அவர்களின் சொந்த ஊர் மதுரை. நீண்ட நாள்களின்பின் தன் தாய் மண்ணில் பாடுகிற சிலிர்ப்பு, அவரின் அன்றைய கச்சேரி முழுவதும் பதிந்திருந்தது. பல இடங்களிலும் நிகழ்ச்சிகள் நடந்ததால், அன்று அம்மைதானத்தில் பெரிய கூட்டம் இல்லை. சபையின் முன்வரிசையில் இருந்தே கச்சேரியைக் கேட்க முடிந்தது. கச்சேரி தொடங்கிய சில நிமிடங்களிலேயே இசைக்குள் மூழ்கிப்போனார் மதுரை சோமு. தன்னை மறந்து தன் நாமம் கெட்டுப் பாடினார். தோடி இராகத்தை மெய்ம் மறந்து நீண்ட நேரம் பாடிய அவர், சில வினாடிகள் நிறுத்தி, ''இராஜரத்தினம்பிள்ளை சார் அல்லவா, இதற்குச் சொந்தக்காரர்'' என்று சொல்லிவிட்டு, சில நிமிடங்கள் விம்மி விம்மி அழுதார். மேடை, பக்கவாத்தியம், சபை என எதைப் பற்றியும் அவர் கவலைப்படவில்லை. மறைந்த நாதஸ்வரவித்துவான் இராஜரத்தினம்பிள்ளை அவர்களை, ஞாபகப்படுத்தியவர், என்ன நினைத்தாரோ தெரியவில்லை. திடீரென தனது வாயை நாதஸ்வரம் ஊதுவதுபோல உப்பிப்பிடித்து, நாதஸ்வர ஓசை வருமாற்போல்,பிறகும் சில மணித்துளிகள் தோடியை உருகி உருகிப் பாடினார். பிறகு ஒரு விருத்தம். மதுரை மீனாட்சியை ''எங்கள் வீட்டுப் பொருள்களில் வந்திருப்பாய்'' என்று அழைக்கும் பாட்டு அது. பாடலின் இறுதி அடி ''மீனாட்சித் தாயே! எங்கள் வீட்டுக் கும்பத்தில் நீ வருவாய்'' என அழைப்பதாய் முடியும். அந்த அடியை அவர் உருகி உருகிப் பாடியபோது, சபை உறைந்துபோனது. பக்கவாத்தியக்காரர், சபையோர் என அனைவர் கண்களிலும் கண்ணீர் வெள்ளம். யாரையும் கவனிக்காத அவர், உச்சஸ்தாயியில் அந்த அடியைப் பாடிவிட்டு, ஒரு குழந்தைப் பிள்ளையைப் போல் விம்மி விம்மி அழுதார். பக்கவாத்தியக்காரர்கள் என்ன செய்வதென்று தெரியாமல் ஸ்தம்பித்து இருந்தனர். சில நிமிடங்கள் நிசப்தமாய்க் கழிந்தன. அந்த அமைதியில் உச்ச இசை பதிவாகியிருந்தது. பிறகு, ''தாயே யசோதா'' என்ற கீர்த்தனையைப் பாடத்தொடங்கினார். அவரது மாணவரொருவர் பின்னாலிருந்து தம்புரா மீட்டியபடி அவரோடு சேர்ந்து பாடிக்கொண்டிருந்தார். அம்மாணவர் சற்று வயதானவர். ஓரிடத்தில்ஒருசங்கதிஅம்மாணவருக்கு வழுக்கி விட்டது. அதைத் தாங்க முடியாத சோமு அவர்கள், இருந்த இடத்தில் இருந்தபடி கையை மட்டும் பின்னால் விட்டு, அம்மாணவரின் காதைப் பிடித்து முன்னால் இழுத்து, அவர் கன்னத்தில் 'பளாரென' அறைந்தார். சபை திகைத்துப் போனது. அடி வாங்கிய மாணவர் எந்தப் பிரதிபலிப்பும் இல்லாமல், அடியை வாங்கிக் கொண்டு, மீண்டும் பின்னால் தலையை இழுத்து அசையாது தம்புரா மீட்டினார். மதுரை சோமு அவர்களின் அச்செயல், சற்று மிகையோ என எனக்குப்பட்டது. கச்சேரி தொடர்ந்தது. மற்றோரிடத்தில் சோமு அவர்கள், தனது பாணியில் ஒரு 'பிர்கா' அடிக்க, அது சரியாய் அமையாமல் போயிற்று. அடுத்த நிமிடம் துடித்துப்போன சோமு அவர்கள், ''குருநாதா, குருநாதா'' எனப் பெரிய சத்தமிட்டுக் கதறி, தனது இரண்டு கன்னங்களிலும், பளார் பளாரென தனது கைகளாலேயே அறைந்து கொண்டார். அக்காட்சியைக் கண்டு திகைத்துப் போனேன். மாணவனது பிழையைக் கண்டித்த அவர், தன் பிழையையும் மறக்காமல், குருநாதரை நினைந்து தன்னைத் தான் கண்டித்துக் கொண்டதைக் கண்டபின்பு, அவர் மாணவரை அடித்ததன் நியாயம் புரிந்தது. இப்படியாய் அன்றைய கச்சேரி முழுவதும், சோமு அவர்கள் இசைத் தேவதையாகவே மாறி விஸ்வரூபம் எடுத்தார். இன்றுவரை அத்தகைய ஓர் இசை அனுபவத்தை நான் பெறவில்லை. கச்சேரி முடிந்ததும் அவர் காலில் விழுந்து அனைவரும் ஆசிபெற்று அவர் கையெழுத்தையும் வாங்கிக் கொண்டோம். இன்று எத்தனையோ கச்சேரிகளைக் கேட்டாகி விட்டது. இன்றும் பலரும் நன்றாகவே பாடுகிறார்கள். ஆனால், ஒரு வித்துவான் தன்னை மறந்து இசைக்குள் கரையும் அனுபவத்தை மதுரை சோமுவிடம் கண்டதுபோல் பின்னர் முழுமையாய்க் காண முடியவில்லை. தன்னுணர்வு முற்றாக நீங்காத வரை இசையின் விஸ்வரூபம் முழுமையாய் வெளிப்படாது எனும் உண்மையை அன்று சோமு உணர்த்தினார்.

(தொடரும்...)

காலைக்கதிர் Kalaikkathir






# விடுதலைக்கான வேட்கை எங்களின் சாவால் ஓயாது!

சாவு என்பது எல்லா ஜீவனுக்கும் பொதுவானது. ஆனால், ஓர் இனத்தின் சந்ததி சுதந்திரமாக வாழ வேண்டும்... என்று நினைத்துப் போராடிச் சாவடைந்து போவது உன்னதமான தியாகமாகவும் பலரது உள்ளத்தில் வைத்துப் போற்றப்படுவதாகவும் அமைகின்றது.

தமிழீழ விடுதலைப் புலிகள் தமது இனத்துக்காகப் போராடினார்கள். பௌத்த – சிங்கள பேரினவாதத்துக்கும் மக்கள் மீதான இன அழிப்புக்கும் நில ஆக்கிரமிப்புக்கும் எதிராக அவர்கள் போராடப் புறப்பட்டார்கள்.

இந்தப் போராட்டத்தின் கால நீழ்ச்சியில் முதன் முதலாக வீரச்சாவடைந்த ஒரு போராளியின் நினைவு தினமே 'மாவீரர் – 27' ஆம் நாள் ஆகும்.

தமிழ்ஈழமண்ணுக்காகத்தங்களின் இன்னுயிரை ஆகுதியாக்கிக்கொண்ட, புலி வீரர்களின் கொள்கை ஒன்றாக இருப்பினும் அவர்கள் சாவடைந்த களங்கள் வெவ்வேறானவை! அவர்களின் தியாகங்கள் விலை மதிப்பற்றவை!

"எனது சாவுக்குப் பிறகு இந்த மண் சுதந்திரமடையும்..." என்ற நம்பிக்கையிலேதான் ஒவ்வொரு வீரர்களும் சாவைத் தழுவிக்கொண்டார்கள்.

"எங்கள் சாவே எமது மண் மீதான எதிரியின் ஆக்கிரமிப்பைத் தடுக்கும் அரண்..." என்று கூறி அவர்கள் சிங்களப் படைகளை நேரெதிர் கொண்டு சாவடைந்து வீழ்ந்தார்கள்.

இவர்களது உடல்கள் தான் வீழ்ந்தனவே தவிர, தம் முள்கொண்ட இலட்சியப்பயனத்தை மக்களின் மனங்களிலும் விதைத்துவிட்டேசென்றிருக்கின்றார்கள்.

அதன் விளைவே இன்றைய நெருக்கடியான சூழ்நிலையிலும் கூட, மக்கள் அவர்களை; தம்வீரர்களை நெஞ்சில் நிறுத்தி நினைவு கூர்ந்து வழிபாடு செய்தலைக் காணலாம்.

## பொய்யல்ல புலி வீரம்!

புலி வீரம் பொய்யென்றே; நிதமும்
புனைகின்ற பொய்வாய்களுக்கு
உள்ளுள்
கிலி நெடுகக் கொள்வதேன்?
கிட்ட வா அதைச் சொல்கிறேன்.

மரிப்பவர்கள் எல்லோரும்
மாவீரர்கள் அல்லர்!
பிறப்பவர்கள் பலரும்
பிரபாகரன் அல்லர்.

வீரத்தின் உச்சமே; புனித
விதைகளின் துயிலும் இல்லம்
இங்கே இனிமேல்
உன் காலடியைப் பக்குவமாக எடுத்துவை.

உனது உறவுகள்...
உனது நண்பர்கள்...
உனது தோழர்கள்...
உனது தோழிகள்....
அனைவரும் இன்னமும்
நிரைவடிவில்
நீள் தூக்கத்தில்..!

இனி
விளக்கேற்றிவிட்டு
உன்
விழி நீரைத்துடை!
ஒரு விடியல்
பிறக்குமென்ற நம்பிக்கையோடு!

**வரதராசா சசிகுமார்.** வல்வெட்டித்துறை.







# பப்பாசிப் பயிர்ச்செய்கை

**பொதுப் பெயர்** - பப்பாசி
**தாவரவியல் பெயர்** - Carica papaya
**குடும்பம்** - Caricaceae

**மருத்துவ முக்கியத்துவம்**

★ மலச் சிக்கல்களைப் போக்கும்
★ இரத்தத்தில் உள்ள அமிலத் தன்மையைஅகற்றும்,
★ இரத்தசோகை என்னும் நோயைக் குணப்படுத்தும்.
★ நமதுஉடலில் காயம்பட்டு வெளியேறுகின்ற இரத்தம் உடனடியாக உறைவதற்குத் தேவையான நொதியங்கள் அடங்கியுள்ளன.
★ கல்லீரல்,மண்ணீரல் நோய்க்குப் பப்பாசிப் பழமே சிறந்த உணவாகும்.
★ வயிற்றுபோக்கு,வாய்வு,நெஞ்சுஎரிச்சல்,அல்சர்,நீரிழிவு,கண் பார்வைகோளாறுக்கும் பப்பாளி ஒரு சிறந்தமருந்து.
★ கொழுப்புசத்துகுறைவடையும்
★ இளமையோடு வாழ தினசரி பப்பாசிப் பழத்தினை உண்டுவந்தால் உடலில் உள்ள கழிவுகள் அனைத்தும் வெளியேற்றப்பட்டு இளமைப் பொலிவோடு வாழலாம்.

*100 கிராம் பழத்திலுள்ளபோசணைபெறுமதிகள்.*

| போசணை | பெறுமதி |
|---|---|
| விற்றமின் C | 61.8 மில்.கிராம் |
| விற்றமின் E | 0.73 மில்.கிராம் |
| விற்றமின் K | 2.6 மைக்ரோகிராம் |
| பொற்றாசியம் | 257 மில்.கிராம் |
| கல்சியம் | 24 மில்.கிராம் |
| சோடியம் | 3 மில்.கிராம் |
| இரும்பு | 0.1 மில்.கிராம் |
| மக்னீசியம் | 10 மில்.கிராம் |
| பொஸ்பரஸ் | 5 மில்.கிராம் |

**இனங்கள்**

1. றெட் லேடி
2. சின்ரா
3. றட்ணா
4. ஹொறண சிவப்பு
5. உள்ளூர் வர்க்கதெரிவு

**கூர்மையாகச் செவிமடுத்துக் கொண்டிருக்கும் விண்ணுடன் பேசுவதற்கான மண்ணின் இடையறாத முயற்சிகளே மரங்கள்.**

**தேவையான காலநிலை**

★ நீர் வடிப்புள்ள சேதனப் பொருள் அடங்கிய வளமான மண்
★ வளம் குறைவாகவுள்ளமண்ணில் சேதனப் பசளைகளையும்,தேவைக்கேற்ப அசேதனப் பசளைகளையும் இட்டு நீர்ப்பாசனம் செய்யமுடியுமாயின் வெற்றிகரமாக செய்கையைமேற்கொள்ளலாம்.

**நடுகை**

★ நடுகை இடைவெளி 9'X9'
★ நடுகை குழி2'82'82'அளவில் தயார்செய்தல் வேண்டும்.
★ நன்கு உக்கிய சேதனப் பசளை,மேல்மண் என்பன 1:1 என்றவிகிதத்தில் கலந்து நடுகைக்குழிநிரப்பவேண்டும்
★ மாலைவேளைகளில் நடுகை
★ பொலித்தீன் பையிலிருந்த ஊடகத்தின் மட்டமும் நிலமட்டமும் ஒரேயளவாக இருக்கக் கூடியவாறுபொலித்தீன் பைஅகற்றப்பட்டுநடுகையைமேற்கொள்ளல்.

**பயிராக்கவியல்முறைகள்**

★ வைக்கோல்,காய்ந்தபுற்கள் போன்ற உக்கலடையக்கூடியபொருட்களை நாற்றிலிருந்துஅரைஅடி தூரத்திலேயேபாத்தியினுள் பரப்பிபத்திரக் கலலையிடல்
★ மழைகாலங்கலில் நீர் தேங்காது, இரண்டு வரிசைகளுக்கிடையேவடிகால் அமைத்துநீர் வெளியேறுவதை உறுதிப்படுத்தவேண்டும்
★ 2 – 4 மாத இடைவெளியில் சேதனப்பசளையுடன் சிபார்சுசெய்யப்பட்டஅளவில் அசேதனப் பசளைளையையும் சேர்த்து இடவும்

**அறுவடைசெய்தல்**

★ மரத்தின் வயது 8-9 மாதங்களாகும் போதுமுதலாவதுஅறுவடையைப் பெறமுடியும்
★ காய்களின் அடிப்புறம் மஞ்சள் நிறமாகமாறும் நிலையில் அறுவடைசெய்ய வேண்டும்
★ மரமொன்றில் இருந்து 50 – 80 பழங்களைபெற்றுக் கொள்ளமுடியும்.
★ பழங்கள் தரப்படுத்தப்பட்டு அததற்கேற்ப பொருத்தமான கூடைகளில் கொண்டு செல்லல்; மூலம் அதிக இலாபத்தைப் பெற்றுக்கொள்ளமுடியும்.
★ இரண்டுவருடங்கள் இலாபம் தரக்கூடிய உற்பத்திக் காலம்.

**சா.விஜிகலா**
**விவசாயப் போதனாசிரியர்**
**கிளிநொச்சி மேற்கு.**

காலைக்கதிர் Kalaikkathir



# ஜனாதிபதி ஆணைக்குழு முன்னிலையில் பிரதமர்: 30 இற்கும் மேற்பட்ட அமைச்சர்களும் பிரசன்னம்!







கொழும்பு, நவ. 22

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, மத்திய வங்கியின் பிணை முறி விநியோகம் தொடர்பில் விசாரணை செய்யும் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு முன்னிலையில் நேற்று முன்தினம் ஆஜராகி சாட்சியமளித்தார்.

அப்போது, கொழும்பு 12 இல் அமைந்துள்ள, ஜனாதிபதி விசாரணை ஆணைக் குழு வளாகம் மற்றும் அதற்கு செல்லும் பாதைகளில் விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

இந்த நிலையில், சுமார் 30 இற்கும் மேற்பட்ட அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஆணைக் குழுவில் பிரசன்னமாகியிருந்தனர்.

ஜனாதிபதி விசாரணை ஆணைக் குழு முன்வைத்திருந்த கேள்விக் கொத்துக்கான எழுத்து மூல விடைகள் தொடர்பில் மேலதிக தெளிவு படுத்தல் தொடர்பிலேயே நேற்றுமுன்தினம் பிரதமர் ரணில் ஆணைக்குழுவுக்கு காலை 10.00 மணிக்கு அழைக்கப்பட்டிருந்தார்.

இந்த நிலையில், காலை 9.45 மணியளவில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆணைக் குழு வளாகத்துக்கு சென்றிருந்தார். சிரேஷ்ட சட்டத்தரணி கௌரி தவராசாவின் ஆலோசனைக்கு அமைய ஜனாதிபதி சட்டத்தரணி பாயிஸ் முஸ்தபா பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சார்பில் ஆணைக்குழுவில் ஆஜரான நிலையில் அவருடன் பெருமளவிலான சட்டத்தரணிகள் அங்கு பிரசன்னமாகியிருந்தனர். அதற்கு முன்னதாகவே அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலரும் ஆணைக்குழுவுக்கு பிரசன்னமாகியிருந்தனர்.

சட்ட மா அதிபர் ஜனாதிபதி சட்டத்தரணி ஜயந்த ஜயசூரியவின் தலைமையில் சிரேஷ்ட மேலதிக சொலிசிற்றர் ஜெனரல், ஜனாதிபதி சட்டத்தரணி தப்புல டி லிவேரா உள்ளிட்டோர் பிரசன்னமாகியிருந்தனர்.

கடந்த 2015 பெப்ரவரி முதலாம் திகதி முதல் 2016 மார்ச் 31 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் மத்திய வங்கியின் பிணை முறி விநியோகம் தொடர்பில் விசாரணை செய்வதற்காக உயர் நீதிமன்ற நீதியரசர் கே.டி.சித்ரசிறியின் தலைமையில் நீதியரசர் பிரசன்ன ஜயவர்தன மற்றும் ஓய்வுபெற்ற பிரதி கணக்காய்வாளர் நாயகம் வேலுப்பிள்ளை கந்தசாமி ஆகியோர் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டனர்.

தொடர்ச்சியாக கடந்த 9 மாதங்கள் சாட்சி விசாரணைகளை முன்னெடுத்த பிணை முறி மோசடி தொடர்பில் விசாரணை செய்த ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு, தனது சாட்சி விசாரணைகளை கடந்த ஒக்ரோபர் 17 ஆம் திகதியுடன் நிறைவுக்கு கொண்டு வந்தது. எனினும் அவசியம் ஏற்படுமாயின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட சாட்சியாளர்களை நேரடியாக விசாரணை செய்ய ஆணைக் குழுவுக்கு அழைப்பதாகவும் அன்றைய தினம் ஜனாதிபதி விசாரணை ஆணைக் குழுவின் தலைவர் நீதியரசர் கே.டி. சித்ரசிரி அறிவித்திருந்தார்.

ஜனாதிபதி விசாரணை ஆணைக் குழு முன்னிலையில் சுயேட்சையாக ஆஜராகி சாட்சியம் அளிப்பேன் என பிரதமர் ரணில் தெரிவித்திருந்த நிலையிலேயே நேற்றுமுன்தினம் அவர் அங்கு அழைக்கப்பட்டிருந்தார்.

பிரதமர் ரணில் சாட்சிய மளிக்க ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவுக்கு வந்த போது, நாடாளுமன்றில் அங்கம் வகிக்கும் மங்கள சமரவீர, முஜிபுர் ரஹ்மான், அகிலவிராஜ் காரியவசம், அஜித் பி.பெரேரா, வஜிர அபேவர்தன, ஜோன் அமரதுங்க, திலக் மாரப்பன, மலிக் சமரவிக்ரம, ராஜித்த சேனாரத்ன, அர்ஜுன ரணதுங்க, வடிவேல்சுரேஷ், கபீர்ஹாசிம், சரத் பொன்சேகா, சுவாமிநாதன், நவீன் திஸாநாயக்க, ஹரிசன், சாகல ரத்நாயக்க, கயந்த கருணாதிலக, ருவன் விஜேவர்தன, எரான் விக்ரமரத்ன, சஜித் பிரேமதாஸ, காமினி ஜயவிக்ரம பெரேரா, ஹரீன் பெர்னாண்டோ, ஆஷு மாரசிங்க, மனோ கணேஷன், ரிஷாட் பதியுதீன், காவிந்த ஜயவர்தன, தயா கமகே மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரோஸி சேனாநாயக்க உள்ளிட்டோர் ஆணைக்குழுவில் பிரசன்னமாகியிருந்தனர்.

இந்த விசாரணையின்போது பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி திருமதி கௌரிசங்கரி தவராசாவின் அனுசரணையுடன் ஜனாதிபதி சட்டத்தரணி பாயிஸ் முஸ்தபா ஆஜரானார். இதனைவிட சிரேஷ்ட சட்டத்தரணி அருட்பிரகாசம் உட்பட 50 இற்கும் மேற்பட்ட சட்டத்தரணிகள் விசாரணையின் போது பிரசன்னமாகியிருந்தனர்.


ஏற்கனவே, ஆணைக் குழு பிரதமர் ரணிலுக்கு கேள்விக் கொத்துக்களை அனுப்பி யிருந்த நிலையில் அதற்கான விடைகளை அவர் அனுப்பியிருந்தார். எனினும் அது தொடர்பிலான மேலதிக தெளிவுபடுத்தல்கள் நேற்றுமுன்தினம் சாட்சிப் பதிவாக இடம்பெற்றன.

இதன்போது ஆணைக்குழுவின் தலைவர் நீதியரசர் கே.டி.சித்ரசிறி, நீதியரசர் பிரசன்ன ஜயவர்தன ஆகியோர் பிரதமரிடம் கேள்விகளை தொடுத்தமையுடன் முடிவில் சட்ட மா அதிபர் ஜனாதிபதி சட்டத்தரணி ஜயந்த ஜயசூரிய குறுக்கு கேள்விகளை கேட்டார். காலை 10.15 மணியளவில் சாட்சியம் வழங்க ஆரம்பித்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சுமார் ஒரு மணித்தியாலயமும் 15 நிமிடங்களும் சாட்சியம் வழங்கினார்.

சாட்சியம் அளிக்கும் போது நிதானமாகவும், புன்னகையுடனும் இருந்த ரணில் விக்ரமசிங்க, தடுமாற்றங்கள் இன்றி, ஆவணங்களை பரிசீலித்து சாட்சியம் வழங்கியமையுடன், ஆணைக் குழுவின் தலைமை நீதியரசர் கே.டி. சித்ரசிறியை, 'கௌரவ தலைவர் அவர்களே' என விளித்து சாட்சியமளித்துள்ளார்.

அத்துடன் சில இடங்களில் அவரது பதில்களில் நகைச்சுவையும் கலந்திருந்தது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## ஹுனுப்பிட்டிய ரயில் கடவையில் விபத்து; ரயில் போக்குவரத்து நேற்று தாமதம்!




கொழும்பு, நவ. 22

ஹுனுப்பிட்டிய ரயில் கடவையில் நேற்று அதிகாலை கொள்கலன் ஏற்றிவந்த லொறி ஒன்று ரயிலில் மோதி விபத்துக்குள்ளாகியது.

இதனால், பிரதான ரயில் போக்குவரத்தில் தாமதம் ஏற்பட்டது என ரயில்வே கட்டுப்பாட்டுப் பிரிவு அறிவித்துள்ளது.

கொழும்பிலிருந்து மட்டக் களப்பு நோக்கிச் செல்லும் கடுகதி ரயிலில் மோதியே இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

இதேவேளை, தெமட்டகொட பகுதியில் மரமொன்று விழுந்துள்ளதனால், கொழும்பு - அவிசாவளை ரயில் பாதையில் போக்குவரத்து நேற்றுத் தடைப்பட்டது என்றும் கூறப்படுகின்றது.

## சிங்கள - முஸ்லிம்களைப் பிரிக்க சதித்திட்டம் நடைபெறுகின்றது!

### அஜித் மான்னப்பெரும கூறுகிறார்

கொழும்பு, நவ. 22

அடிப்படைவாதிகள் இந்த நாட்டில் ஒற்றுமையாக வாழும் சிங்களவர்களையும் முஸ்லிம்களையும் பிரிக்கப் பார்க்கின்றனர். நாம் அதற்கு இடமளிக்கக் கூடாது என கம்பஹாமாவட்டநாடாளுமன்ற உறுப்பினர் அஜித் மான்னப்பெரும தெரிவித்துள்ளார்.

கஹட்டோவிட்டாவில் நேற்றுமுன்தினம் பிற்பகல் நடைபெற்ற அல் பத்ரியா மகா வித்தியாலயத்தின் புதிய இரு மாடிக் கட்டடத் திறப்பு விழா நிகழ்வில் சிறப்பு அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைக் கூறியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அரசு நாட்டின் கல்வி நிலைமையை உயர்த்துவதற்கு பல்வேறு திட்டங்களை முன் வைத்து செயற்பட்டு வருகின்றது. பாடசாலை மாணவர்களுக்கு காப்புறுதித் திட்டமொன்றை அறிமுகம்செய்துள்ளது.இதன் மூலம் மாணவர்களுக்கு ஏற்படும் நோய் உட்பட பல்வேறு தேவைகளின் போது 2 லட்சம் ரூபா வரைநிதி உதவி கிடைக்கின்றது.

க.பொ.த. சாதாரண தரம் சித்தியடைந்தவர்களுக்கு டெப்ரகணினிகளை அரசு வழங்க நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்கான ஏற்பாடுகள் நிறைவடைந்துள்ளன.



மாணவர்களின் உயர் படிப்புக்காக 8 லட்சம் ரூபாவரையிலானவட்டியில்லாக் கடனைக் கொடுக்க அரசு தீர்மானித்துள்ளது என்றும் அவர் கூறியுள்ளார்.

பாடசாலை அதிபர் காதர் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, அமைச்சர் ஏ.எச்.எம். பௌஸி, மக்கள் விடுதலை முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத், இஷாக் ரஹ்மான்எம்.பி., மாகாண சபை உறுப்பினர் ஷாபி ரஹீம் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# அ.தி.மு.கவை அழிக்கச் சதி குற்றஞ்சாட்டுகிறார் தினகரன்



ஜெயலலிதா வீட்டில் நடந்த வருமான வரிச் சோதனையில் ஆதாரங்கள் உள்ளன எனக் கூறுகின்றமை அ.தி.மு.க.வை அழிக்க உச்சக்கட்டச் சதி என்று டி.டி.வி. தினகரன் தெரிவித்துள்ளார்.

அ.தி.மு.க. (அம்மா அணி) துணைப் பொதுச்செயலாளர் டி.டி.வி.தினகரன் தஞ்சையில் நிருபர்களுக்கு அளித்த பேட்டியில்:-

ஜெயலலிதா வீட்டில் நடந்த வருமான வரிச் சோதனையின் போது மடிக்கணினி, பென்ட்ரைவ் சிக்கியுள்ளன எனக் கூறியுள்ளார். அதாவது, செயற்படாத கணினி, 5 பென்ட்ரைவ் கைப்பற்றினர் எனக்கூறப்படுகிறது. ஆனால், பென்ட்ரைவில் ஆதாரங்கள் உள்ளமி எனக் கூறுகின்றமை அ.தி.மு.க.வை அழிக்கக்கூடிய உச்சக்கட்டச் சதி ஆகும். பென்ட்ரைவில் ரகசியம் இருக்கும் என்று எவ்வாறு சொல்ல முடியும்?

முதலமைச்சர் எடப்பாடி, என்னைப் பார்த்து கட்சியில் எங்கு இருக்கிறீர்? என்று கேட்கிறார். எங்களால் பதவிக்கு வந்த எடப்பாடி மற்றும் அவரோடு இருப்பவர்கள் தங்களைக் காப்பாற்றிக் கொள்ளவும், எதிலும் மாட்டாமல் இருக்கவும் இதுபோல் கூறி வருகிறார்கள். முதலவர் பதவிக்குரிய தகுதி இல்லாமல் பிதற்றுகிறார்.

எம்.ஜி.ஆர். மறைவுக்குப் பிறகு ஜெயலலிதாவுக்குச் சசிகலாவும், நானும் தான் மெய் காப்பாளர்கள். நான் ஜெயலலிதாவை மகனாக இருந்து பாதுகாத்தேன்.

பெரா வழக்குப் போன்ற வழக்குகள் நடந்த போது, ஜெயலலிதா என்னை அரசியலுக்குக் கொண்டு வந்தார். பெரிய குளம் தொகுதியில் அதிக வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்றேன். ஜெயலலிதா பேரவைச் செயலாளராக நியமிக்கப்பட்டேன்.

பா.ஜனதாவில் இருந்து அ.தி.மு.க.வுக்கு வந்த மைத்ரேயன்கூட ஜெயலலிதா வீட்டில் நடந்த சோதனைக்கு வருத்தம் தெரிவித்துள்ளார். ஆனால் எடப்பாடி எதுவும் தெரிவிக்கவில்லை. ஜெயலலிதா அரசு எனக் கூறிக்கொள்ள இவர்களுக்கு எந்தத் தகுதியும் இல்லை என்று தெரிவித்துள்ளார்.

## நடிகை தீபிகா படுகோனை மிரட்டியவர்கள் மீது நடவடிக்கை

நடிகை தீபிகா படுகோனை மிரட்டியவர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு அரியானா முதலமைச்சருக்கு சித்தராமையா கோரிக்கை விடுத்துள்ளார்.

'பத்மாவதி' திரைப்படத்தில் நடிகை தீபிகா படுகோன் கதாநாயகியாக நடித்துள்ளார். அந்தப் படத்தில் ராஜபுத்ர சமூகத்தைச் சேர்ந்த 13ஆவது நூற்றாண்டின் சித்தூர்கர் ராணி பத்மாவதியின் வாழ்க்கை தொடர்பான கதை இடம் பெற்றுள்ளது. ராணியின் புகழுக்குக் களங்கம் ஏற்படுத்தும் விதமாக அந்தப் படத்தில் காட்சிகள் அமைந்துள்ளது எனக் கூறி ராஜ்புத்ர சமூகத்தைச் சேர்ந்தவர்கள் நாடு முழுவதும் கடும் எதிர்ப்புத் தெரிவித்துப் போராட்டம் நடத்தி வருகிறார்கள்.

அந்தப் படத்தில் நடித்துள்ள நடிகை தீபிகா படுகோனுக்கும் கொலை மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் அரியானா மாநிலத்தைச் சேர்ந்த பா.ஜனதா பிரமுகர், தீபிகா படுகோனின் தலைக்கு 10 கோடி ரூபா பரிசை அறிவித்துள்ளார்.

இந்த நிலையில் இது தொடர்பாக அரியானா மாநில முதலமைச்சர் மனோகர்லால் கட்டாரிடம் கர்நாடக முதலமைச்சர் சித்தராமையா பேசினார். இது தொடர்பாக சித்தராமையா தனது டுவிட்டர் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில் கூறி இருப்பவை வருமாறு:-

'பத்மாவதி' படத்தில் நடித்துள்ள நடிகை தீபிகா படுகோனுக்குக் கொலை மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது. பா.ஜனதாவின் வெறுப்புக் கலாசாரத்தை நான் கண்டிக்கிறேன். தீபிகா படுகோன் உலக அளவில் புகழ் பெற்ற நடிகை. அவருக்கு ஆதரவாகக் கர்நாடக அரசு நிற்கிறது. நான் அரியானா முதலமைச்சரிடம் பேசினேன்.

அவருக்கு மிரட்டல் விடுத்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறும் கூறியுள்ளேன். தீபிகா படுகோன் கர்நாடகத்தைச் சேர்ந்தவர். அவர் கர்நாடகம் வரும்போது அவருக்கும், அவரது குடும்பத்தினருக்கும் தேவையான பாதுகாப்பு வழங்கப்படும் என்று சித்தராமையா தெரிவித்துள்ளார்.

## பத்மாவதி படத்துக்கு கமலஹாசன் ஆதரவு!



சென்னை,நவ.22

சர்ச்சைக்குரிய பத்மாவதி திரைப்பட நடிகை தீபிகா படுகோனைப் பாதுகாக்க வேண்டும் என நடிகர் கமலஹாசன் டுவிட்டரில் ஆதரவு தெரிவித்துள்ளார்.

ராஜபுத்திர சமூகத்தைச் சேர்ந்த ராணி பத்மினியின் வாழ்க்கை வரலாற்றை விவரிக்கும் வகையில் பத்மாவதி திரைப்படத்தை இயக்குநர் பன்சாலி உருவாக்கியுள்ளார். ஆனால், இப்படத்தில் ராணி பத்மினி பற்றித் தவறாகச் சித்திரிக்கப்பட்டுள்ளமை என்பது ராஜபுத்திரர்களின் குற்றச்சாட்டு.

தற்போது இந்த விவகாரத்தை ஹரியானா இந்து அமைப்புகள், பா.ஜ.க. ஆகியன கையிலெடுத்துள்ளன. நடிகை தீபிகா படுகோன், இயக்குநர் பன்சாலி ஆகியோர் தலைக்கு அதிகபட்சமாக 10 கோடி ரூபா என உச்சகட்டப் போராட்ட வெறியையும் வெளிப்படுத்தியுள்ளனர்.

இதையடுத்து, டிசெம்பர் முதலாம் திகதி வெளியிடப்பட வேண்டிய திரைப்படம் தயாரிப்பாளர்களால் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், பத்மாவதி திரைப்படத்துக்கு நடிகர் கமலஹாசன் ஆதரவு தெரிவித்துள்ளார். இது தொடர்பாக நடிகர் கமலஹாசன் தமது டுவிட்டர் பக்கப் பதிவில், தீபிகா படுகோனை நாம் பாதுகாக்க வேண்டும். உடலுக்கு தலை எவ்வளவு முக்கியமோ அதைவிட முக்கியமான தீபிகாவின் சுதந்திரத்தை நாம் மறுக்கக்கூடாது.

என்னுடைய படத்துக்கும் கூட எதிர்ப்புகள் வந்துள்ளன; வன்முறையுடன் கூடிய எந்த விவாதமுமே மோசமானது. நாங்கள் போதுமான அளவு சொல்லிவிட்டோம். இனி யோசித்து விழித்தெழ வேண்டிய தருணமிது என கமலஹாசன் பதிவிட்டுள்ளார்.

## பேரறிவாளனுக்கு மீண்டும் மருத்துவப் பரிசோதனை

வேலூர் அடுக்கம்பாறை அரச மருத்துவமனையில் பேரறிவாளனுக்குச் சிறுநீர், ரத்தப் பரிசோதனை தொடர்பாக வைத்தியர்கள் சிகிச்சை அளித்தனர்.

வேலூர் சிறையில் அடைக்கப்பட்டுள்ள முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலைக் கைதி பேரறிவாளன் சிறுநீரக தொற்று மூட்டு வலியால் பாதிக்கப்பட்டுள்ளார். அவருக்கு மாதந்தோறும் வேலூர் அரசு மருத்துவமனையில் மருத்துவப் பரிசோதனை செய்யப்படுகிறது.

பேரறிவாளன் 2 மாதங்கள் தற்காலிக விடுப்பில் சென்றபோது ஜோலார்பேட்டையில் உள்ள அவரது வீட்டில் சிகிச்சை அளிக்கப்பட்டது. தற்காலிக விடுப்பு முடிந்து மீண்டும் சிறையில் அடைக்கப்பட்டார்.கடந்த 13ஆம் திகதி அவரை வேலூர் அடுக்கம்பாறை அரச மருத்துவ மனைக்கு அழைத்துச் சென்றனர். அங்கு சிறுநீர், ரத்தம் பரிசோதனை செய்யப் பட்டது.

இதனைத் தொடர்ந்து நேற்று பேரறிவாளன் மீண்டும் அடுக்கம் பாறை அரச மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டார். அங்கு சிறுநீர், ரத்த பரிசோதனை தொடர்பாக வைத்தியர்கள் சிகிச்சை அளித்தனர்.

### புனே அருகே நதிகள் இணைப்புப் பணி:

## பாரம் தூக்கி விழுந்து விபத்து; 8 தொழிலாளர்கள் உயிரிழப்பு!



புனே அருகே நதிகள் இணைப்புத் திட்டப் பணியின்போது பாரம் தூக்கி அறுந்து விழுந்து 8 தொழிலாளர்கள் பரிதாபமாக உயிரிழந்தனர்.

மராட்டியத்தில் உள்ள பீமா மற்றும் நிரா நதிகளை இணைக்கும் திட்டம் அரசு சார்பில் செயற்படுத்தப்பட்டு வருகிறது. இந்த நதிகள் இணைப்புத் திட்டத்தின் கீழ் புனேயை அடுத்த இந்தாப்பூர் பகுதியில் உள்ள அகேலே கிராம பகுதியில் பூமிக்கடியில் சுரங்கம் தோண்டி ராட்சத குழாய்கள் பதிக்கும் பணிகள் நடந்து வருகின்றன.

இந்தப் பணிகளை 300இற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் செய்து வருகிறார்கள். இவர்களில் பெரும்பாலானோர் வெளிமாநிலங்களைச் சேர்ந்தவர்கள். நேற்று முன்தினம் மாலை 6 மணியளவில் வழக்கம் போல பணிகள் முடிந்தன. இதையடுத்து சுரங்கத்தில் இருந்து தொழிலாளர்கள் வெளியே வந்து கொண்டிருந்தனர். கட்டுமானப் பணிக்குத் தளபாடப் பொருள்களைத் தூக்கிக்கொண்டு வரும் ராட்சதப் பாரந்தூக்கி ஒன்றும் அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் திடீரெனப் பாரந்தூக்கியைத் தாங்கிப் பிடித்து இருக்கும் இரும்புக் கம்பி அறுந்தது. இதன் காரணமாக கண் இமைக்கும் நேரத்தில் பாரந் தூக்கி 250 அடி உயரத்தில் இருந்து அங்கு நின்றிருந்த தொழிலாளர்கள் மீது விழுந்தது. இதில் 8 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

பாரம் தூக்கி அறுந்து விழுந்து 8 பேர் பலியான துயரச் சம்பவம் அப்பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

# வியாழன் கிரகத்தில் புயல்: நாசா விஞ்ஞானிகள் தகவல்

வொஷிங்டன்,நவ.22

வியாழன் கிரகத்தில் கடும் புயல் வீசியுள்ளது என நாசா அனுப்பிய ஜூனோ எனப்படும் விண் கலம் கண்டறிந்துள்ளது.

வியாழன் கிரகத்தில் ஆய்வு செய்ய அமெ ரிக்காவின் 'நாசா' விண்வெளி மையம் ஜூனோ என்ற விண்கலத்தை அனுப்பியது.

அதில் பொருத்தப்பட்டுள்ள சக்தி வாய்ந்த புகைப்படக்கருவி வியாழன் கிரகத்தில் ஏற்படும் பருவ நிலை மாற்றம் மற்றும் தட்ப வெப்ப நிலைப் பாடுகளைப் புகைப்படம் எடுத்துப் பூமிக்கு அனுப்பி வருகின்றது.

சமீபத்தில் ஜூனோ விண்கலம் எடுத்து அனுப்பிய புகைப்படத்தில் வியாழன் கிரகத்தில் கடும் புயல் வீசியிருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இது இக்கிரகத்தின் வடபுலத்தில் ஏற்பட்டுள்ளது.

இப்புகைப்படம் கடந்த ஒக்ரோபர் 24ஆம் திகதி அனுப்பப்பட்டுள்ளது. அப்போது விண்கலம் வியாழன் கிரகத்தின் மேகக் கூட்டங்களின் மீது 10ஆயிரத்து 108 கிலோ மீற்றர் தூரத்தில் பறந் தது.

புகைப்படத்தில் வியாழன் கிரகத்தில் புயல் வீசும் போது மேகக் கூட்டங்கள் கலைந்தும் கரு மேகங்கள் திரண்டும் காணப்பட்டன என்றும் தெரிவிக்கப்படுகிறது.



## பாகிஸ்தானில் கடும் பனிமூட்டம்:

# வான் மீது கவிழ்ந்தது லொறி; 20 பேர் துடிதுடித்துச் சாவு!





பாகிஸ்தானின்சிந்து மாகாணத்தில் நேற்று அதிகாலை ஏற்பட்ட பனி மூட்டம் காரணமாக வளைவில் திரும் பிய லொறி வான் மீது கவிழ்ந்ததில் 20 பேர் பலியாகினர்.

பாகிஸ்தானின் சிந்து மாகாணத் தில் கைரபுர் பகுதியில் உள்ள தெரி என்ற இடத்தில் இருக்கும் நெடுஞ் சாலையில் நேற்று அதிகாலை நிலக் கரி மூடைகளை ஏற்றிக்கொண்டு லொறி ஒன்று வந்துள்ளது. கடும் பனிமூட்டம் நிலவியதால் வளைவில் திரும்பிய லொறி திடீரென அருகில் வந்த வான் மீது கவிழ்ந்தது.

இந்தக் கோர விபத்தில் வானில் இருந்த 17 பேர் சம்பவ இடத்திலேயே பலியாகினர். மேலும், மருத்துவமனை யில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்ட மூவர் சிறிது நேரத்தில் பலியாகினர். 7பேர்காயமடைந்து மருத்துமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர் என உள்ளூர் ஊடகம் செய்தி வெளியிட் டுள்ளது.

இதே இடத்தில் கடந்த 2014ஆம் ஆண்டு பஸ் மற்றும் லொறி நேருக்கு நேர் மோதியதில் 59 பேர் பலியாகினர் என்பது குறிப்பிடத்தக்கது.

# டுபாய் மரினாவில் புதிய துறைமுகம்

டுபாய்,நவ.22

டுபாய் மரினா பகுதியில் 20 ஆயிரம் சிறிய படகுகளை நிறுத்தும் வகையில் புதிய துறைமுகக் கட்டு மானப் பணியை சர்வதேச கடல் சார் அமைப்பின் தலைவர் ஆரம்பித்து வைத்தார்.

இது தொடர்பாக டுபாய் துறை முகங்கள் சார்பில் வெளியிடப்பட் டுள்ள செய்திக் குறிப்பில் கூறியவை வருமாறு:-

டுபாயில் கடற்கரைப் பகுதிகளில் சுற்றுலாப் பயணிகளை மிகவும் கவரக்கூடியது மரினா கடற்கரை ஆகும். இந்தப் பகுதியில் இருந்து பெரிய கப்பல்கள் மற்றும் சிறிய வகை சுற்றுலாப் படகுகள் அதிக அளவில் இயக்கப்பட்டு வருகின்றன.

இந்தப் பகுதியில் தண்ணீரில் செல்லும் மோட்டார் சைக்கிள் மற்றும் 'ஜெட் ஸ்கை' எனப்படும் நீரினால் உந்தப்பட்டு அந்தரத்தில் மிதக்கும் விளையாட்டுகள் மிகவும் பிரபல மானவை. இந்தப் பகுதியில் சுற்று லாவை மேம்படுத்தவும், அதிக அள



வில் சுற்றுலாப் படகுகளை இயக்க வும் டுபாய் ஆட்சியாளர் ஷேக் முகமது பின் ராஷித் அல் மக்தூம் அறிவித்துள்ளார். இது புதிய 10 மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்தத் திட்டத்தின் ஒரு பகுதி யாக மரினா பகுதியில் சிறிய வகைச் சுற்றுலா மற்றும் தனியார் படகுகளை நிறுத்தும் வகையில் புதிய துறை முகம் ஒன்று கட்டப்பட உள்ளது.

இதில் 20 ஆயிரம் சிறிய படகு களை நிறுத்தும் வகையில் வசதிகள் செய்து தரப்படும். இந்த பகுதியானது 'மெரினா கியூப்' எனும் சிறு தீவுப் பகுதியாக அழைக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ப)

# தீவிரவாதத்தை ஆதரித்து வருகிறது வடகொரியா



குற்றஞ்சாட்டும் ட்ரம்ப்

வொஷிங்டன்,நவ.22

வடகொரியா தீவிரவாதத்தை ஆதரித்து வருகிறது என அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் குற்றஞ்சாட்டியுள்ளார்.

சமீப காலமாக வடகொரியா பல தடவைகள் ஏவுகணைச் சோதனை நடத்தியுள்ளது. கடந்த சில மாதங்களில் மட்டும் கண்டம்விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணைகளையும் அந்த நாடு பரிசோதனை செய்துள்ளது.

இந்த ஏவுகணைச் சோத னைகள் அமெரிக்காவைக் குறிவைத்து நடத்தப்பட்டன எனத் தகவல்கள் வெளியாகின. இதனால் அமெரிக்காவின் தூண் டுதலின்பேரில் வட கொரியாவின் மீது ஐ.நா.சபை புதிய பொருளா தாரத் தடையை விதித்துள்ளது.

இது வடகொரியாவுக்குக் கடும் எரிச்சலையும் ஆத்திரத்தை யும் ஏற்படுத்தியுள்ளது. எங்கள் மீது விதிக்கப்பட்ட புதிய பொருளாதாரத் தடைக்கு அமெரிக்கா உரிய விலையைக் கொடுக்க நேரிடும் என வட கொரியா எச்சரித்தது.

இந்த நிலையில், அமெரிக்கா வில் நடைபெற்ற அமைச்ச ரவைக் கூட்டத்தில் பேசிய ட்ரம்ப், வடகொரியா தீவிர வாதத்தைத் தொடர்ந்து ஆதரித்து வருகிறது எனக் கடுமையாகக் குற்றஞ்சாட்டினார்.

இதுதொடர்பாக, அமெரிக்க அதிபர் ட்ரம்ப் கூறுகையில், வடகொரியா தொடர்ந்து அணு சோதனை நடத்தி வருகின்றது. அத்துடன், அந்த நாடு தீவிரவாதத்தையும் ஆதரிக்கின் றது. தீவிரவாதத்தை ஆதரிக்கும் நாடுகளான ஈரான், சிரியா, சூடான் ஆகிய நாடுகளுடன் கூட்டுச் சேர்ந்து தீவிரவாதத் தாக்குதல்கள் நடத்தத் திட்டம் தீட்டி வருகிறது எனத் தெரி வித்துள்ளார்.

# கொல்கத்தா டெஸ்ட்: பந்து வீச்சாளர்களுக்கு கோஹ்லி பாராட்டு



இலங்கைக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டி சமநிலையில் முடிந்ததையடுத்து, பந்து வீச்சாளர்களுக்கு இந்திய அணித் தலைவர் விராட் கோஹ்லி பாராட்டுத் தெரிவித்துள்ளார்.

கொல்கத்தா டெஸ்ட் போட்டி முடிந்ததும் கோஹ்லி அளித்த பேட்டியில், இந்த ஆட்டத்தில் இருந்து ஏதாவது எடுக்க வேண்டியது முக்கியம் என்று நினைத்தோம். ஆனால் ஆடுகளத்தின் தன்மை 4ஆவது மற்றும் 5ஆவது நாளில் அதிக அளவில் மாற்றம் கண்டது.

இலங்கை அணியின் பந்து வீச்சு நன்றாக இருந்தது. இலங்கை அணி முதல் இன்னிங்ஸில் அதிக முன்னிலை பெறாவிட்டால் எங்களால் ஆட்டத்தைக் கட்டுக்குள் கொண்டு வர முடியும் என்று நம்பினோம். 2ஆவது இன்னிங்ஸில் இலங்கை அணியின் துடுப்பாட்டம் இந்த அளவுக்குச் சரிவைச் சந்திக்கும் என்று எதிர்பார்க்கவில்லை.

எங்களது பந்து வீச்சு சிறப்பாக இருந்தது. புவனேஷ்வர் குமார் நல்ல வேகத்தில் பந்து வீசினார். கடுமையாக உழைக்கும் அவர் அதற்குத் தகுந்த பலனைப் பெற்று வருகிறார். எங்களது அணியின் திட்டத்தில் புவனேஷ்வர் குமார் முக்கியமானவர்.

சர்வதேச போட்டியில் 50 சதங்களைக் கண்டு இருப்பது நல்ல விஷயமாகும். சதத்தை விட அணியின் வெற்றிக்கு உதவ வேண்டும் என்பதே எனது நோக்கமாகும் என்று தெரிவித்தார்.

# இந்திய அணியின் செயற்பாடு மகிழ்ச்சி : ரவிசாஸ்திரி



இந்திய அணியின் செயற்பாடு மிகவும் மகிழ்ச்சி அளிக்கின்றது என இந்திய அணியின் பயிற்றுவிப்பாளர் ரவி சாஸ்திரி தெரிவித்துள்ளார்.

இந்தியா - இலங்கை அணிகளுக்கு இடையிலான முதல் டெஸ்ட் கொல்கத்தா ஈடன் கார்டன் மைதானத்தில் நடைபெற்றது. கடைசி நாள் ஆட்டத்தின் போது விராட் கோஹ்லியின் சிறப்பான சதத்தால், இலங்கை அணிக்கு இந்தியா 231 ஓட்டங்களை வெற்றி இலக்காக நிர்ணயித்தது.

இந்திய அணியின் அபாரமான பந்து வீச்சால் இலங்கை அணியின் விக்கெட்டுகள் மளமளவென வீழ்ந்தன. 26.3 ஓவரில் 75 ஓட்டங்கள் எடுப்பதற்குள் 7 விக்கெட்டுக்களை இழந்திருந்தது. அப்போது வெளிச்சமின்மை காரணமாக ஐந்தாவது நாள் ஆட்டம் அத்துடன் முடிவுக்கு வந்ததால் ஆட்டம் சமநிலையில் முடிந்தது.

இந்த நிலையில், இலங்கை அணிக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் இந்திய அணியின் செயற்பாடு மகிழ்ச்சி அளிக்கின்றது என இந்திய அணியின் பயிற்றுவிப்பாளர் ரவி சாஸ்திரி தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் கூறுகையில், கொல்கத்தா ஈடன் கார்டன் மைதானத்தில் நடைபெற்ற டெஸ்ட் போட்டியில் இந்திய அணியின் செயற்பாடு மிகவும் திருப்தியாக இருக்கிறது. எனக்கு இந்தியாவில் பிடித்த நகரங்களில் கொல்கத்தாவும் ஒன்று.

இந்த வயதிலேயே விராட் கோஹ்லி 50 சதங்களை எடுத்து முடித்துள்ளார். அவருக்கு வானமே எல்லையாக இருக்கும் என நினைக்கிறேன் எனக் குறிப்பிட்டுள்ளார்.

# 2018 பொதுநலவாய விளையாட்டுப் போட்டி போட்டியாளர் தெரிவு பெப். 2 ஆரம்பம்




2018, ஏப்ரல் மாதம் நடைபெறவுள்ள பொதுநலவாய விளையாட்டுப் போட்டி நிகழ்வை இலக்காகக் கொண்டு இலங்கையில் முறையான வேலைத்திட்டம் நடைமுறைப் படுத்தப்படவுள்ளது.

21ஆவது பொதுநலவாய விளையாட்டுப் போட்டிகள் எதிர்வரும் ஏப்ரல் மாதம் ஆஸ்திரேலியாவில் இடம்பெறவுள்ளது. இதில் பங்கேற்கும் இலங்கைப் போட்டியாளர்களைத் தெரிவு செய்வதற்கான போட்டிகள் எதிர்வரும் பெப்ரவரி இரண்டாம் திகதி ஆரம்பமாகவுள்ளன என இலங்கை மெய்வன்மைச் சங்கத்தின் தலைவர் மேஜர் ஜெனரல் பாலித்த பெர்னாண்டோ தெரிவித்தார்.

நிகழ்வில் பங்கேற்கும் போட்டியாளர்களுக்கு பயிற்சி வழங்குவது தொடர்பில் விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிறி ஜயசேகரவுடன் பேச்சு நடத்தவுள்ளோம் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.



# இத்தாலி தோல்வி: உதைபந்து சம்மேளன தலைவர் பதவி விலகல்



உலகக்கிண்ணத் தொடருக்குத் தகுதி பெறாததால் இத்தாலி உதைபந்துச் சம்மேளனத் தலைவர் கார்லோ பதவி விலகியுள்ளார்.

ரஷ்யாவில் அடுத்த ஆண்டு உலகக்கிண்ண உதைபந்துத் தொடர் நடைபெறவுள்ளது. இதற்கான தகுதிச்சுற்றின் முடிவில் இத்தாலி அணி நேரடியாகத் தகுதி பெறவில்லை play off சுற்றில் வெற்றி பெற்றால்தான் தகுதி பெற முடியும் என்ற நிலை உருவானது.

அதன்படி இத்தாலி Ao play off சுற்றில் சுவீடன் அணியை தொடர்கொண்டது. இரு அணிகளும் தங்களது சொந்த மைதானங்களில் தலா ஒருமுறை மோத வேண்டும். அதில் யார் அதிக கோல்கள் வித்தியாசத்தில் வெற்றி பெறுகிறார்களோ அவர்களே உலகக்கிண்ணத் தொடருக்குத்தகுதி பெற முடியும் என்ற நிலமை ஏற்பட்டது.

சுவீடனுக்குச் சொந்தமான மைதானத்தில் நடைபெற்ற முதல் போட்டியில் சுவீடன் 1:0 என வெற்றி பெற்றது. பின்னர் இத்தாலிக்கு சொந்தமான மைதானத்தில் நடைபெற்ற 2ஆவது போட்டியில் இரு அணிகளும் கோல்கள் அடிக்கவில்லை. இதனால் ஆட்டம் சமநிலையில் முடிந்தது.

இரு போட்டிகளையும் சேர்த்து சுவீடன் 1:0 என்ற கணக்கில் வெற்றி பெற்று உலகக் கிண்ணத்திற்குத் தகுதி பெற்றது. 1958ஆம் ஆண்டுக்குப் பிறகு சுமார் 60 ஆண்டுகள் கழித்து இத்தாலி உலகக்கிண்ணப் போட்டிக்குத் தகுதி பெற முடியாமல் ஏமாற்றம் அளித்தது.

2ஆவது போட்டி முடிந்த உடனேயே, அந்த அணியின் தலைவரும் தலைசிறந்த கோல் காப்பாளருமான பபன் சர்வதேசப் போட்டியில் இருந்து ஓய்வு பெற்றார். இந்த நிலையில் இத்தாலி உதைபந்து சம்மேளனத் தலைவரான கார்லோனா தவேச்சியோ தனது பதவியை ராஜினாமா செய்துள்ளார். கடந்த புதன்கிழமை இத்தாலி அணி பயிற்சியாளரான ஜியான் பியோரா அதிரடியாக நீக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# ஜனா நோவோட்னா புற்றுநோயால் மரணம்

17 முறை கிராண்ட்ஸ்லாம் சம்பியன் பட்டம் வென்ற செக் குடியரசு டென்னிஸ் வீராங்கனை ஜனா நோவோட்னா புற்றுநோயால் மரணமடைந்தார். அவருக்கு வயது 49.

செக்குடியரசு நாட்டின் முன்னாள் டென்னிஸ் வீராங்கனை ஜனா நோவோட்னா. முன்னாள் இரண்டாம் தர வீராங்கனையாக 17 முறை கிராண்ட்ஸ்லாம் பட்டத்தைப் பெற்று சாதனை படைத்துள்ளார்.

49 வயதான இவர் புற்று நோயால் அவதிப்பட்டு வந்தார். இந்த நிலையில் நேற்றுமுன்தினம் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என பெண்கள் டென்னிஸ் சங்கம் செய்தி வெளியிட்டுள்ளது.

இரட்டையர் பிரிவில் கொடிகட்டிப் பறந்த ஜனா நோவோட்னா 1998ஆம் ஆண்டு நடைபெற்ற விம்பிள்டன் தொடரில் சம்பியன் பட்டம் வென்று அசத்தினார். இரட்டையர் பிரிவில் 12 முறை கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்ற அவர், நான்குமுறை விம்பிள்டன் பட்டத்தையும் வென்றமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir



# ஒரே நாளில் 5 சாதனைகளை படைத்தார் ஹேரத்



இந்திய அணிக்கு எதிரான முதல் டெஸ்டில் அரை சதம் அடித்த இலங்கைப் பந்துவீச்சாளர் ரங்கன ஹேரத் 5 புதிய சாதனைகளைப் படைத்துள்ளார்.

இலங்கை- இந்தியா இடையில் நடைபெற்று வரும் முதல் டெஸ்ட் போட்டியின் முதல் இன்னிங்ஸில் இந்தியா 172 ஓட்டங்கள் எடுக்க, இலங்கை 294 ஓட்டங்கள் எடுத்தது.

நான்காவது நாள் ஆட்டநேர முடிவில் இந்திய அணி இரண்டாவது இன்னிங்ஸில் ஒரு விக்கெட் இழப்பிற்கு 171 ஓட்டங்கள் எடுத்தது.

இப்போட்டியில் 67 ஓட்டங்கள் அடித்த இலங்கை வீரர் ரங்கன ஹேரத் ஒரே நாளில் துடுப்பாட்டத்தில் 5 புதிய சாதனைகளைப் படைத்துள்ளார்.

★ முதல்தரப் போட்டிகளில் சதம் அடிக்காமலேயே அதிக ஓட்டங்கள் எடுத்த இலங்கை வீரர் ரங்கன தான், இதுவரை 5ஆயிரம் ஓட்டங்கள் எடுத்துள்ளார்.

★ இந்திய மண்ணில் அந்த அணிக்கு எதிராக அதிக வயதில் அரைசதம் அடித்த வீரர்கள் பட்டியலில் மூன்றாவது இடம்பிடித்தார்.

★ சர்வதேச டெஸ்ட் அரங்கில் ஆயிரத்து 500 ஓட்டங்கள் மற்றும் 400 விக்கெட்டுகளைக் கைப்பற்றிய முதல் இலங்கை வீரர் என்ற பெருமை இவருக்குக் கிடைத்துள்ளது.

★ இந்திய மண்ணில் 8ஆவது அல்லது அதற்கு அடுத்த வீரராகக் களமிறங்கி அதிக வயதில் அரைசதம் விளாசிய வீரர்கள் பட்டியலில் முதலிடம் பிடித்தார்.

★ இந்திய மண்ணில் விளையாடிய வெளிநாட்டு அணி வீரர்களில் அதிக வயதில் டெஸ்ட் போட்டியில் பங்கேற்ற இரண்டாவது வீரர் என்ற பெருமையையும் பெற்றுள்ளார்.

## டிக்வெல்ல தவறு செய்யவில்லை - சந்திமல்




கொல்கத்தாவில் நடைபெற்ற முதல் டெஸ்ட் போட்டியில் டிக்வெல்ல தவறு செய்யவில்லை என்று இலங்கை அணியின் தலைவர் தினேஷ் சந்திமல் கூறியுள்ளார்.

இந்தியா மற்றும் இலங்கை அணிகளுக்கிடையே நடந்த முதல் டெஸ்ட் போட்டி சமநிலையில் முடிந்தது. முதல் இன்னிங்ஸில் தடுமாறிய இந்திய அணி, திடீரென்று இரண்டாவது இன்னிங்ஸில் விஸ்வரூபம் எடுத்தது, இலங்கை அணியின் விக்கெட்டுகளை அடுத்தடுத்து வீழ்த்தியது.

ஒரு கட்டத்தில் 4 விக்கெட் இழப்பிற்கு 22 ஓட்டங்கள் எடுத்து தடுமாறியதால், இந்திய அணி எஞ்சிய விக்கெட்டுகளை வீழ்த்தி விடும் என்று எதிர்பார்க்கப்பட்ட போது போட்டி சமநிலையில் முடிந்தது.

இது தொடர்பாக இலங்கை அணியின் தலைவர் தினேஷ் சந்திமல் கூறுகையில், இந்திய அணி அற்புதமான பந்து வீச்சாளர்களைக் கொண்டுள்ளது. மூன்று வீரர்கள் மூன்று விதமாக வீசுகின்றனர். நான் சந்தித்த சிறப்பான பந்து வீச்சுகளில் இதுவும் ஒன்று, இரண்டாவது இன்னிங்ஸில் இந்திய அணி துடுப்பாட்டத்தை முடிந்த பிறகு மிகவும் மகிழ்ச்சியாக வந்தோம்.

ஆனால் ஆட்டத்தின் எங்கள் விக்கெட்டுகள் அடுத்தடுத்து விழுந்தமையால், கடைசி ஓவர்களில் மிகவும் பதற்றம் ஏற்பட்டது. நாங்கள் போட்டியை இழக்க விரும்பவில்லை, அதன் காரணமாகவே நிதான ஆட்டத்தை வெளிப்படுத்தினோம்.

போட்டியின் போது டிக்வெல்லவிற்கும், இந்திய வீரர்களுக்கும் இடையே சற்று வாக்குவாதம் ஏற்பட்டது டிக்வெல்ல போட்டியை விரும்புபவர். களத்தில் தன்னை யாராவது பார்த்தாலே அதற்குப் பதிலடி கொடுக்க வேண்டும் என்று விரும்புவார். எனக்கு அவர் தவறு செய்தமை போல் தெரியவில்லை.

வீரர்கள் கேள்வி கேட்டனர், அதற்கு டிக்வெல்லா பதில் அளித்தாரே தவிர தவறு எதுவும் செய்யவில்லை, இதில் நான் தலையிடவும் விரும்பவில்லை. போட்டியின் போது இது போன்ற நிகழ்வுகள் நடப்பது வழக்கம் தான் என்று கூறியுள்ளார்.



## கோஹ்லியின் புதிய சாதனை

கொல்கத்தா ஈடன் கார்டனில் சதம் அடித்ததன் மூலம் சர்வதேச போட்டிகளில் 50 சதங்கள் அடித்து விராட் கோஹ்லி சாதனை படைத்துள்ளார். இந்தியா - இலங்கை அணிகளுக்கு இடையிலான முதல் டெஸ்ட் போட்டி கொல்கத்தா ஈடன் கார்டன் மைதானத்தில் நடைபெற்று முடிந்துள்ளது.

2ஆவது இன்னிங்ஸில் இந்திய அணித் தலைவர் விராட் கோஹ்லி சிறப்பாக விளையாடி சதம் அடித்தோர். டெஸ்ட் போட்டியில் விராட் கோஹ்லியின் 18ஆவது சதம் இதுவாகும். இதன்மூலம் சர்வதேச போட்டிகளில் ஒட்டு மொத்தமாக 50 சதம் அடித்து அசத்தியுள்ளார். ஒருநாள் போட்டியில் 32 சதங்கள் அடித்துள்ளார்.

இந்திய வீரர் சச்சின் டெண்டுல்கர் 100 சதங்கள் அடித்து முதல் இடத்தில் உள்ளார். பொண்டிங் 71 சதங்களுடன் 2ஆவது இடத்திலும், சங்ககார 63 சதங்களுடன் 3ஆவது இடத்திலும், கலீஸ் 62 சதங்களுடன் 4ஆவது இடத்திலும், அம்லா 54 சதங்களுடன் 5ஆவது இடத்திலும், ஜெயவர்தன 54 சதங்களுடன் 6ஆவது இடத்திலும், லாரா 53 சதங்களுடன் 7ஆவது இடத்திலும் உள்ளனர். விராட் கோஹ்லி 50 சதங்களுடன் 8ஆவது இடத்தில் உள்ளார்.

இந்தியா சார்பில் டெண்டுல்கர், கோஹ்லியைத் தவிர ட்ராவிட் 48 சதங்களும், செவாக் 38 சதங்களும், கங்குலி 38 சதங்களும் அடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.




## 365 நாள்களும் குழந்தைகள் தினம் - சச்சின்

புதுடில்லியில் நடைபெற்ற யுனிசெப் நிகழ்ச்சியில் கலந்து கொண்ட சச்சின், ஆண்டின் அனைத்து நாள்களும் குழந்தைகள் தினம் எனக் கூறியுள்ளார்.

புதுடில்லியின் யுனிசெப் அமைப்பின் சார்பாக தியாகராஜ் மைதானத்தில் உலக குழந்தைகள் தின விழா நடைபெற்றது. அதில் கிரிக்கெட் வீரர் சச்சின் டெண்டுல்கர் கலந்து கொண்டார்.

நிகழ்ச்சியில் சச்சின் மனநலம் குன்றிய சிறுவர்களுடன் கிரிக்கெட் விளையாடினர். அப்போது பேசிய அவர், தற்சமயம் உள்ள குழந்தைகள் மிகவும் திறமைசாலிகளாக உள்ளனர். தொழில்நுட்பம் வளர்ச்சியடைந்து கொண்டே செல்கிறது. அதனைப் பயன்படுத்தி சிறுவர்களும் வளர்ச்சியடைந்து கொண்டே செல்கின்றனர். அவர்கள் கணினி மூலம் உலகத்தில் நடக்கும் சம்பவங்களை உடனுக்குடன் தெரிந்து கொள்கின்றனர்.

3 வயது குழந்தை கூட கணினியைப் பயன்படுத்துகிறது. குழந்தைகளின் நம்பிக்கையின் அளவும் அதிகரித்துள்ளது. இதற்கு முந்தைய காலக்கட்டத்தைச் சேர்ந்த குழந்தைகளோடு ஒப்பிடும் போது அவர்கள் மிகவும் புத்திசாலிகள் என்பதை ஒப்புக்கொள்ள வேண்டும்.

குழந்தைகள் தினத்தைப் பற்றி என்னுடைய கருத்து என்ன வென்றால், ஆண்டின் 365 நாள்களும் குழந்தைகள் தினம் தான் என சச்சின் தெரிவித்துள்ளார்.

# பனங்கள் இறக்கத்தடை; உடனடியாக நீக்கப்படும்!

## டக்ளஸ் எம்.பியிடம் உறுதியளித்தார் ஜனாதிபதி

கொழும்பு,நவ.22

பனை மரத்திலிருந்து 'கள்' இறக்குவதற்கு தடைவிதிக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டு அண்மையில் வெளியாகியிருந்த வர்த்தமானி அறிவித்தல் தொடர்பில் உடனடியாக கவனம் செலுத்தி பனைமரத்திலிருந்து 'கள்' இறங்குவதற்கு வசதியாக அமைச்சரவையில் தீர்மானம் எடுக்கப்படும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனா தெரிவித்திருக்கிறார்.

நேற்று முன்தினம் இரவு கொழும்பில் ஜனாதிபதி தலைமையில் நடைபெற்ற ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பிலுள்ள கட்சிகளின் தலைவர்கள் கூட்டத்தில் கலந்து கொண்ட ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா எம்.பி., 'கள்' இறக்குவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளதாக வெளியான வர்த்தமானி அறிவித்தல் தொடர்பாக ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டுவந்தமையுடன் இவ்விடயத்திற்கு உடனடியானத் தீர்வு வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தார். அதனைத் தொடர்ந்தே ஜனாதிபதி மேற்கண்டவாறு உறுதியளித்தார்.

'கள்' இறக்குவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளதாக வெளியான அறிவித்தலால், குறிப்பாக வடமாகாணத்தில் சுமார் 12 ஆயிரம் குடும்பங்கள் பாதிப்புக்குள்ளாகி இருக்கின்றமையையும், பனைசார் உற்பத்தி முயற்சிகள் பாதிக்கப்பட்டிருக்கின்றமையையும் செயலாளர் டக்ளஸ் தேவானந்தா எம்.பி. ஜனாதிபதிக்கு தெளிவுபடுத்தினார்.

இவ்விடயம் தொடர்பாக ஏற்கனவே பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடனும், நிதி அமைச்சர் மங்கள சமரவீரவுடனும் டக்ளஸ் தேவானந்தா கலந்துரையாடியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. - இவ்வாறு ஈ.பி.டி.பி. செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## விக்கிக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உயர்நீதிமன்றநீதிவான்கள் புவனிக் அலுவிகாரை, சிசிர டி ஆப்ரூ, நளின் பெரேரா ஆகியோரைக் கொண்ட ஆயமே இந்தத்தீர்ப்பை நேற்று வழங்கியது.

மேற்படி டெனீஸ்வரனின் மனுவை மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைமைநீதியரசர் தெஹிதெனிய, நீதியரசர் அமரசேகர ஆகியோரைக் கொண்ட ஆயமே கடந்த மாதம் 16 ஆம் திகதி வழக்கைத் தொகையுடன் தள்ளுபடி செய்து தீர்ப்பளித்திருந்தது.

வழக்கைத் தொடர்வதற்குப் போதிய காரணமின்மை குறித்தும், மனுதாரரின் சத்தியக் கடதாசியில் உள்ளசட்டக்குறைபாடு குறித்தும் நீதியரசர்கள் தமது தீர்ப்பில் சுட்டிக்காட்டியிருந்தனர்.

அந்தவிளக்கங்கள், மனுவை விசாரிக்காமல் அதனைத் தள்ளுபடி செய்வதற்குப் போதுமானவையல்ல என்று நேற்றுக் கருத்து வெளியிட்ட உயர்நீதிமன்ற நீதியரசர்கள், இந்த மனுவில் கூறப்பட்டுள்ள விடயங்களை இனியும் காலதாமதப்படுத்தாமல், விரைந்து விசாரித்துத் தீர்ப்பளிக்க வேண்டும் என்றும் உத்தரவிட்டது.

இந்தமேன்முறையீட்டு மனு உயர்நீதிமன்றத்தில் நேற்று பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட சமயமே, காலதாமதப் படுத்தாமல் உயர்நீதிமன்றம் நேற்றே விரைந்து, விசாரித்து, இவ்விடயத்தில் ஒரு முடிவை எடுத்துஅறிவித்தமைகுறிப்பிடத் தக்கது.

இந்த வழக்கில் மனுதாரர் சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி சுரேன் பெர்னாண்டோவும் -

எதிர்மனுதாரர்களுள் ஒருவரான வைத்தியர் சத்தியலிங்கம் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரனும் -

பிரதான எதிர் மனுதாரரான முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி கனகஈஸ்வரனும் - ஆஜரானார்கள். (உ)

## சர்வேஸ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குற்றச்சாட்டுகளை சட்டமா அதிபர் திணைக்களத்திடம் வடக்கு ஆளுநர் நேற்று ஒப்படைத்திருந்தார். சட்டமா அதிபர் வழங்கும் ஆலோசனைக்கு அமைவாகவே அமைச்சர் சர்வேஸ்வரன் மீது நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் ஆளுநர் குறிப்பிட்டிருந்தார்.

வவுனியா - ஈரப்பெரியகுளத்தில் உள்ள பரகும்பா மகா வித்தியாலயத்தில், கடந்த வாரம் வசதி குறைந்த மாணவர்களுக்கு சைக்கிள் வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வடக்கு மாகாணக் கல்வி அமைச்சர் சர்வேஸ்வரன், தேசியக் கொடியை ஏற்றுவதற்கு அழைக்கப்பட்டார். எனினும், அவர் தேசியக் கொடியை ஏற்றுவதற்கு மறுப்புத் தெரிவித்ததால், கல்வி அதிகாரிகள் அதனை ஏற்றியிருந்தனர்.

இதனையடுத்து வடக்கு மாகாணக் கல்வி அமைச்சர் அரசமைப்பை மீறிவிட்டார் எனவும், அவர் மீது வடக்கு மாகாண ஆளுநர் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் தென்னிலங்கையில் இருந்து குரல்கள் எழுப்பப்பட்டு வருகின்றன.

இந்நிலையில், நேற்று செய்தியாளர்களைச் சந்தித்த வடக்கு மாகாண ஆளுநர், தேசியக் கொடியை ஏற்ற மறுத்த வடக்கு மாகாணக் கல்வி அமைச்சருக்கு எதிராக எடுக்கப்படும் நடவடிக்கை ஏனைய அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ஒரு படிப்பினையாக அமையும் என்று குறிப்பிட்டுள்ளார்.

## வடக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மணிநேரப் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடுவர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து நாடு முழுவதும் முன்னெடுக்கப்படும் அரச தாதியர்கள், துணைமருத்துவசேவையாளர்களின் போராட்டத்துக்கு ஆதரவாகவே இந்தப் போராட்டத்தை முன்னெடுப்பதாக வடக்கு மாகாண அரச தாதிய உத்தியோகத்தர்கள் சங்கத்தின் தலைவர் க.ஜனார்த்தனன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

சம்பள முரண்பாடு, பதவியுயர்வு , மேலதிக நேரக் கொடுப்பனவு நிலுவை, கைவிரல் அடையாள வருகைப் பதிவேட்டை நடைமுறைப்படுத்த மேற்கொண்ட தீர்மானத்தை நிறுத்தல் போன்ற கோரிக்கைகளை முன்வைத்து இந்தத் தொழிற்சங்கப் போராட்டம் முன்னெடுக்கப்படுகிறது.

வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் கீழ் உள்ள வைத்தியசாலைகளில் பணியாற்றும் தாதிய உத்தியோகத்தர்கள் இன்று புதன்கிழமை காலை 7 மணி தொடக்கம் நாளை வியாழக் கிழமை காலை 7 மணிவரை பணிப்புறக் கணிப்பில் ஈடுபடுவர்.

நோயாளர்களினதும் பொது மக்களினதும் நன்மை கருதி வேலைநிறுத்தத்தின்போது உயிர் காப்பு நடவடிக்கைகளுக்கான அவசர சிகிச்சைக்கு மாத்திரம் தாதிய உத்தியோகத்தர்கள் கடமையில் ஈடுபடுவார்கள் - என்றார்.

இதேவேளை, இந்தப் போராட்டத்துக்கு ஆதரவாக யாழ். போதனா வைத்தியசாலை தாதிய உத்தியோகத்தர்களும் இன்று காலை 7 மணி தொடக்கம் 24 மணிநேரப் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடுவர் என வைத்தியசாலையின் தாதி உத்தியோகத்தர் சங்கத் தலைவர் த.பானு மகேந்திரா அறிவித்துள்ளார்.

## நவம்பர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு அழைப்பு விடுத்துள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம்.

யாழ்ப்பாணத்தில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

தமிழ் மக்களின் விடுதலைக்காக ஆயுதப் போராட்டம் ஒன்று நடத்தப்பட்டது. அதில் 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட போராளிகள் தமது உயிர்களைத் தியாகம் செய்தார்கள்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தில் உயிர் நீத்த போராளிகளை மட்டுமல்ல - இந்த விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்ட அத்தனை வீர மறவர்களையும் நினைவு கூர்வது மாத்திரமல்ல- இந்தப் போராட்டத்தில் கொல்லப்பட்ட அத்தனை மக்களையும் நாம் நினைவு கூர்ந்து எதிர்வரும் 27ஆம் திகதி எழுச்சி நிகழ்வுகளை நடத்தவேண்டும்.

மாவீரர் துயிலும் இல்லங்களில் மட்டுமல்ல எங்கெங்கெல்லாம் விளக்கேற்ற முடியுமோ அங்கெல்லாம் ஏற்ற வேண்டும். கார்த்திகை விளக்கீட்டுக்குத் தீபம் ஏற்றுவது போன்று வீடுகள், கடைகள், நிறுவனங்களுக்கு முன்னாலும் அன்றைய தினம் மாவீரர்களுக்கு விளக்கேற்றி அஞ்சலிக்கவேண்டும்.

எந்த வித அச்சமும் இல்லாமல் மாவீரர்களுக்கான எழுச்சியை நாம் இம்முறை கடைப்பிடிக்கவேண்டும்.

மாவீரர் வாரம் இன்று 21ஆம் திகதி (நேற்று) ஆரம்பமாகியுள்ளது. மிகவும் ஏழ்மையுடனும் பெரும் அவலங்களுக்கு மத்தியிலும் வாழும் மாவீரர் குடும்பங்களுக்குவாழ்வாதாரஉதவிகளை வழங்க அனைவரும் முன்வர வேண்டும். பல்லாயிரக் கணக்கான போராளிகள், குடும்பங்களை இழந்து அவயங்களை இழந்து வாழ்கின்றனர். அவர்களுக்கும் வாழ்வாதார உதவிகளை ஏற்படுத்திக் கொடுக்க இந்த வாரத்தில் நாம் தயாராக வேண்டும். - என்றார்.

## யாழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தப்பட்டது. தேசத்தின் விடுதலைக்காக உயிர்நீத்த மாவீரர்களுக்கு யாழ்.பல்கலைக்கழகமாணவர்கள் நேற்று மாலை தீபம் ஏற்றி அஞ்சலி செலுத்தினர்.

இந்த அஞ்சலி நிகழ்வில் பல்கலைக்கழக மாணவர்களுடன் கல்விசாரா, கல்வி சாரா ஊழியர்களும் பங்கேற்றனர் எனக் கூறப்பட்டது.

## ஆலயக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என நேற்றுப் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சரிடம் நேரில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்தனவுக்கும், மன்னார் மாவட்ட முக்கியஸ்தர்களுக்கும் இடையிலான முக்கிய கலந்துரையாடல் ஒன்று நேற்றுப் பாதுகாப்பு அமைச்சில் நடந்தது.

இந்தக் கலந்துரையாடலை வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ்நிர்மலநாதன் ஏற்பாடு செய்திருந்தார்.

இதில், பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்தன, மன்னார் மறைமாவட்டக் குரு முதல்வர் அருட்திரு விக்டர் சோசை, செபஸ்ரியார் ஆலயப் பங்குத்தந்தை பெப்பி சோசை, மன்னார் மாவட்ட செஞ்சிலுவைச் சங்கத் தலைவர் கெனடி ஆகியோர் கலந்துகொண்டனர்.

கலந்துரையாடலில் மன்னார் - தள்ளாடிப் பகுதியில் அமைந்துள்ள ஆலயத்துக்குச் சொந்தமான இடத்தில் இராணுவம் கட்டடம் ஒன்றை அமைப்பதற்கு முயற்சிப்பதாகவும், முள்ளிக்குளம் கிராமத்தை விடுவிக்குமாறு வலியுறுத்தி முன்னெடுக்கப்பட்ட போராட்டத்துக்கு இது வரை சரியான பதில் எதுவும் கிடைக்கவில்லை எனவும், மன்னார் மாவட்ட பொது மக்களின் காணிகளில் படையினர் இருப்பதை அனுமதிக்க முடியாது எனவும் மன்னார் மாவட்டப் பிரதிநிதிகள் அழுத்தம் திருத்தமாகக் கூறியுள்ளனர்.

இதற்குப் பதிலளித்த பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்தன, வரவு - செலவுத்திட்டம் தொடர்பான விவாதம் முடிவடைந்த பின்னர் டிசெம்பர் மாதம் மன்னாருக்கு நேரடியாக வந்து பிரச்சினைகளைத் தீர்ப்பதாக உறுதியளித்துள்ளார்.

## ஆவா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படும் நிசா விக்டருக்கு ஒன்றரை வருட கடூழியச் சிறைத் தண்டனைவழங்கிமல்லாகம்நீதிவான் மன்றம் நேற்றுத் தீர்ப்பளித்தது.

மானிப்பாய் பகுதியில் இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவம் தொடர்பான வழக்கின் சந்தேக நபரான நிசா விக்டர், அந்த வழக்கில் முற்படுத்துவதற்காகக் கடந்த வெள்ளிக்கிழமை மல்லாகம் நீதிமன்றுக்குச் சிறைச்சாலை உத்தியோகத்தர்களால் அழைத்துச் செல்லப்பட்டார்.

அங்கு சிறைச்சாலை உத்தியோகத்தர்களின் பிடியிலிருந்து தப்பிய சந்தேகநபரான நிசா விக்டர் நீதிமன்றத்தின் மதில் பாய்ந்து தலைமறைவாகினார்.

எனினும் சந்தேகநபரைத் துரத்திச் சென்ற சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் வீடொன்றுக்குள் மறைந்திருந்தவேளை மடக்கிப் பிடித்தனர்.

இந்தநிலையில் நிசா விக்டர் நேற்று மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார். இதன்போதே இந்தத் தண்டனைவழங்கித்தீர்ப்பளித்தார் நீதிவான் அந்தோனிப்பிள்ளை ஜூட்சன்.

## புலிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சந்திப்பிலேயே அவர் இதனைக் கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

உள்ளூராட்சித் தேர்தலில் நாம் பிரிந்து நிற்பது ஏற்புடையதல்ல. இன்னும் சில மாதங்களில் கிழக்கு மாகாண சபைத் தேர்தல் வரவுள்ளது. அதில் நாம் ஒற்றுமையாக நின்றால்தான் கிழக்கு மாகாண சபையைக் கைப்பற்ற முடியும். அதேபோல் பறிபோகும் எங்களுடைய மண்ணைக் காப்பாற்ற முடியும்.

உயிர் ஊசலாடிக் கொண்டிருக்கும் எமது மக்களை சாகடிக்கவேண்டாம். ஆகவே சுரேஷ் பிறேமசந்திரன் மற்றும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் உள்ளிட்ட அனைவரும் ஓரணியாகச் செயற்படுவோம் என அழைக்கின்றேன். - என்றார்.

## காமினிக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யில் விடுவிக்கப்பட்டனர்.

மூவரையும் தலா 50 ஆயிரம் ரூபா ரொக்கப் பிணை மற்றும் 10 இலட்சம் ரூபா பெறுமதியான இரு சரீரப் பிணைகளில் செல்லுமாறு கொழும்பு கோட்டை நீதிவான் லங்கா ஜயரத்ன நேற்று உத்தரவிட்டார்.

அத்துடன், காமினி செனரத் மற்றும் இரண்டாவது சந்தேக நபரான பியதாஸ குடாபலகே ஆகியோர் வெளிநாடு செல்வதற்கும் தடை விதிக்கப்பட்டது.

கடந்த 2012ஆம் ஆண்டு கொழும்பில் ஹோட்டல் ஒன்றை நிர்மாணிப் பதற்கென ஒதுக்கப்பட்ட அரசநிதியைத் தவறாக பயன்படுத்திய குற்றத்துக்காக, கடந்த 13ஆம் திகதி இவர்கள் கைதுசெய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## உணர்வெழுச்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டன் ஆரம்பமாகியது.

நேற்றுக் காலை முதல் மாலை வரை தமிழர் தாயகத்தின் பல பகுதிகளிலும் மாவீரர் வார ஆரம்ப நிகழ்வுகள் இடம்பெற்றன. மாவீரர் துயிலும் இல்லங்கள், பொது இடங்கள், நினைவு மண்டபங்கள் ஆகியவற்றில் மாவீரர்களின் உருவப்படங்கள் வைக்கப்பட்டு மாவீரர் வார ஆரம்ப நிகழ்வுகள் நடைபெற்றன.

நீண்ட இடைவெளிக்குப் பின்னர் தமிழ் மக்கள் இம்முறை மாவீரர் தின நிகழ்வுகளைச் சுதந்திரமாக அனுஷ்டிக்கவுள்ளனர்.

இம்முறை பெரும்பாலான மாவீரர் துயிலும் இல்லங்களில் மாவீரர் தினத்தை அனுஷ்டிப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதற்காக படையினரால் இடித்தழிக்கப்பட்ட மாவீரர் துயிலும் இல்லங்கள் சிரமதானம் மூலம் மக்களால் துப்புரவு செய்யப்பட்டு மாவீரர்களுக்குஅஞ்சலிசெலுத்துவதற்கான ஏற்பாடுகள் மாவீரர் தின ஏற்பாட்டுக்காக அமைக்கப்பட்டுள்ள குழுவினரால் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

வடக்கில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு, வவுனியா மாவட்டங்களிலும், கிழக்கில் அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களிலும் உள்ள துயிலும் இல்லங்களில் மாவீரர் வார ஆரம்ப நாளான நேற்று மக்களால் சுடரேற்றப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது. இதில் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், அரசியல் தலைவர்கள் உட்படப் பலர் பங்கேற்றனர்.

# சுகாதாரத்துறையை நவீனப்படுத்தி உயர்த்திட அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகிறது அரசு

## ஜனாதிபதி மைத்திரி பெருமிதம்



கொழும்பு, நவ. 22

உலகெங்கிலும் மேற்கொள்ளப்படும் புதிய ஆய்வு மற்றும் கண்டுபிடிப்புகளுடன் மருத்துவ விஞ்ஞானத் துறையில் ஏற்பட்டுவரும் மாற்றங்களுக்கு ஏற்ப, இலங்கை சுகாதாரத்துறையை நவீனமயப்படுத்தி உயர்ந்த தரத்துடன் முன்கொண்டு செல்வதற்குத் தற்போதைய அரசு அர்ப்பணிப்புடன் உள்ளது.

இதற்குத் தேவையான அனைத்து வசதிகளையும் வழங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் முற்பகல் பத்தரமுல்லையிலுள்ள காட்சு சர்வதேச பல்கலைக்கழக கேட்போர் கூடத்தில் நடைபெற்ற மருத்துவ ஆய்வுகூட தொழில் வல்லுநர்களின் வருடாந்த மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

சுகாதாரத் துறையில் மிகவும் முக்கியமான பிரிவான மருத்துவ ஆய்வுகூட சேவையிலுள்ள தொழில் வல்லுநர்களின் கல்வித்தரத்தை மேம்படுத்தி பட்டப்படிப்புவரை கொண்டு செல்வதற்குத் தேவையான வழிகள் தற்போது ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இலங்கை சுகாதார சேவையின் தரம் காரணமாக சர்வதேசத்தில் எமது நாட்டுக்குச் சிறந்த அங்கீகாரம் கிடைக்கப் பெற்றுள்ளது.

இதற்காக சுகாதாரத்துறை யிலுள்ள அனைத்து தொழில் வல்லுனர்களுக்கும் மக்களின் கௌரவம் கிடைக்கும்.

கடந்த காலத்தில் நாடெங்கிலும் டெங்கு நோய் பரவிய சந்தர்ப்பத்தில் இரத்தப் பரிசோதனைச் சேவையைத் துரிதப் படுத்தி மருத்துவ ஆய்வுகூட தொழில் வல்லுநர்கள் வழங்கிய ஒத்துழைப்பு பாராட்டத்தக்கது.

இலவச சுகாதார சேவையைப் பலப்படுத்தும் அரசின் கொள்கைக்கேற்ப சுகாதாரத்துறையின் தரத்தையும் நியமங் களையும் மேம்படுத்து வதற்குத் தேவையான அனைத்து வசதிகளையும் வழங்க அரசு நவடிக்கை எடுக்கும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிகழ்வில், சிறந்த சேவையை வழங்கிய மருத்துவ ஆய்வுகூட சேவை தொழில் வல்லுநர்களைப் பாராட்டி ஜனாதிபதியால் விருதுகள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் ஜயசுந்தர பண்டார, கொழும்பு தேசிய வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் அனில் ஜயாசிங்க, மருத்துவ ஆய்வுகூட தொழில் வல்லுநர் சங்கத்தின் தலைவர் ரவி குமுதேஷ் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# இலங்கை வரலாற்றில் முதன்முறையாக அழகுக்கலை நிபுணர்களுக்கு விருது!



அழகுக்கலை மற்றும் சிகை அலங்காரத் துறையைச் சேர்ந்தவர்களைப் பாராட்டி விருது வழங்கும் நிகழ்வு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நடைபெற்றது.

பத்தரமுல்லை வோட்டர்ஸ் எட்ஜ் ஹோட்டலில் நேற்று முன்தினம் மாலை இந்த நிகழ்வு இடம்பெற்றது.

அழகுக்கலை மற்றும் சிகை அலங்காரத்துறையில் உள்ளவர்களைக் கௌரவிக்கும் முதலாவது நிகழ்வு இதுவாகும். இந்தத்துறையின் முன்னேற்றத்திற்காக இந்த விருது விழா ஏற்பாடு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

அழகுக்கலை மற்றும் சிகை அலங்காரக் கலைஞர்கள் 16 பேருக்கான விருதுகளை ஜனாதிபதி வழங்கினார்.

இந்த நிகழ்வில் அமைச்சர்களான சந்திம வீரக்கொடி, தயா கமகே, பிரதி அமைச்சர் அனோமா கமகே, கருணாரத்ன பரணவித்தான ஆகியோர் உள்ளிட்ட அதிதிகளும் 350இற்கும் மேற்பட்ட அழகுக்கலை மற்றும் சிகை அலங்கார நிபுணர்களும் கலந்துகொண்டனர்.

# கற்கை இடம்பெறாமையால் ஏற்பட்ட இழப்பை ஈடுசெய்வதற்கு வேலைத் திட்டம் வகுப்பு!

கொழும்பு, நவ. 22

பல்கலைக்கழக மாணவர்களுக்கு இந்த வருடத்தில் குறிப்பிட்ட படி கற்கை நெறிகள் இடம் பெறாமையால் ஏற்பட்ட இழப்பை ஈடு செய்வதற்கு தேவையான வேலைத்திட்டம் ஒன்று வகுக்கப்பட்டுள்ளது.

ருஹூனு பல்கலைக் கழக பீடாதிபதி பேராசிரியர் சமன் விமலசுந்தர இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பல்கலைக் கழகங்களின் வைத்திய பீட கல்வி நடவடிக்கைகள் நேற்றுமுன்தினம் ஆரம்பமாகின என பீடாதிபதிகள் தெரிவித்துள்ளனர்.

மாணவர்கள் பயிற்சி நடவடிக்கையைபோன்று கல்வி நடவடிக்கையிலும் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

களனி பல்கலைக்கழக வைத்திய பீட விரிவுரையாளர் சங்கத்தின் தலைவர் பேராசிரியர் ரணில் பெர்னாண்டோ கருத்து தெரிவிக்கையில்-

அனைத்து வைத்திய பீடங்களிலும் மாணவர்கள் நேற்றுமுன்தினம் வகுப்புகளுக்குசமுகமளித்தனர் என தெரிவித்தார்.

# அரசிலிருந்து சு.க. விலகினால் மட்டுமே கூட்டணி குறித்து கலந்துரையாடலாம்



கொழும்பு, நவ. 22

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் கூட்டமைப்பைப்பேண, ஒன்றிணைந்த எதிர்க் கட்சிக்கு முடியாது என நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இந்தக் கட்சி அரசில் இருந்து விலகுமாக இருந்தால் மட்டுமே இது குறித்து கலந்துரையாட முடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பலபிட்டிய பகுதியில் இடம் பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டபோதே நாமல் ராஜபக்ஷ மேற்கண்டவாறு கருத்து வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது

# எயிட்ஸ் நோயால் 678 பேர் இறப்பு!

கொழும்பு, நவ. 22

இந்த வருடத்தின் இரண்டாவது காலப்பகுதியில் எயிட்ஸ் நோயால் இறந்தவர்களின் எண்ணிக்கை 678 என்று தேசிய பாலியல் நோய் எயிட்ஸ் வேலைத் திட்டத்தின் பணிப்பாளர் வைத்தியர் சிசிர லியனகே சுட்டிக்காட்டியுள்ளார்.

எச்.ஐ.வி. வைரஸ் பரவுவதைத் தடுப்பதற்காக பல்வேறு நிகழ்வுகள் நேற்றுமுன்தினம் ஆரம்பமாகின.

டிசெம்பர் முதலாம் திகதி இடம் பெறும் எயிட்ஸ் ஒழிப்பு தினத்தை முன்னிட்டு தேசிய பாலியல் நோய் எயிட்ஸ் தடுப்பு பிரிவு பொது மக்களுக்கு தெளிவுப்படுத்தும் தொடர் நிகழ்வுகளை ஏற்பாடு செய்துள்ளது.

இதற்கான முதலாவது நிகழ்வு பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

குடும்ப சுகாதார அமைப்பு ஆபத்தான மருந்து கட்டுபாட்டு தேசிய சபை மற்றும் எச்.ஐ.வி. உடன் வாழ்வோரின் சங்கத் தினரும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

எச்.ஐ.வி. வைரஸால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 2688 என்று தேசிய பாலியல் நோய் எயிட்ஸ் வேலைத் திட்டத்தின் பணிப்பாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

# மஹாவலி கேந்திர நிலையத்தில் அரசமைப்பு குறித்த செயலமர்வு!

கொழும்பு, நவ. 22

உத்தேச அரசமைப்பு தொடர் பான செயலமர்வு ஒன்று நேற்றுமுன்தினம் பிற்பகல் 3.30 மணி முதல் மாலை ஆறு மணி வரை கொழும்பு மஹாவலி கேந்திர நிலையத்தில் நடைபெற்றது.

தேசிய சகவாழ்வு கலந்துரையாடல் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சர் மனோ கணேசன், நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில கொழும்பு பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி மஹாநாகம ஹேவ, ஜனாதிபதி சட்டத்தரணி கலாநிதி ஜயதிஸ்ஸ கொஸ்தா உள்ளிட்டோர் இதில் கலந்துகொண்டனர்.

ஐடீஎம் நேசன் கம்பஸ் நிறுவனத்தின் சட்டபீடம் இதனை ஏற்பாடு செய்திருந்தது.





வடமாகாண மரநடுகை மாதத்தை முன்னிட்டுத் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் ஏற்பாட்டில் நல்லூர் சங்கிலியன் பூங்காவில் மலர்க் கண்காட்சி இடம்பெற்று வருகிறது. தினமும் காலை 9 மணியிலிருந்து இரவு 8 மணி வரை நடைபெறும் இக்கண்காட்சியை ஏராளமானவர்கள் பார்வையிட்டு வருகின்றனர். 24 ஆம் திகதி வரை நடைபெறவுள்ள இக்கண்காட்சியில் பாடசாலை மாணவர்களுக்கு இலவசமாக மரக்கன்றுகளும் வழங்கப்பட்டு வருகின்றன. பொதுமக்கள் ஆர்வத்தோடு கண்காட்சியைப் பார்வையிட்டு மரக்கன்றுகளையும் பூச்செடிகளையும் வாங்கிச் செல்வதைப் படங்களில் காணலாம்.

# 16 வயதுச் சிறுமியை வன்புணர்ந்த இளைஞனுக்கு 3 ஆண்டுகள் சிறை

## யாழ். மேல் நீதிமன்றம் நேற்றுத் தீர்ப்பு

யாழ்ப்பாணம், நவ.22

சிறுமியை வன்புணர்ந்த இளைஞருக்கு 3 ஆண்டுகள் சிறைத்தண்டனை வழங்கித் தீர்ப்பளித்தது யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றம்.

பாதிக்கப்பட்ட சிறுமிக்கு 6 இலட்சம் ரூபா இழப்பீட்டை குற்றவாளி வழங்க வேண்டும். அதனை வழங்கத் தவறின் இரண்டு ஆண்டுகள் சிறைத் தண்டனையை அனுபவிக்கவேண்டும். 10 ஆயிரம் ரூபா தண்டம் செலுத்தவேண்டும். செலுத்தத் தவறின் 6 மாதங்கள் சிறைத் தண்டனையை அனுபவிக்க நேரிடும் என்று தண்டனைத் தீர்ப்பை நேற்று அறிவித்தார் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன்.

யாழ்ப்பாணம், பொலிஸ் பிரிவில் 16 வயதுக்கு உட்பட்ட சிறுமி ஒருவர் வன்புணர்வுக்குட்படுத்தப்பட்டார். அது தொடர்பில் சிறுமி வழங்கிய வாக்குமூலத்தின் அடிப்படையில் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுப் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார்.

சந்தேகநபர்மீது சிறுமியை வன்புணர்ந்த ஒரு குற்றச்சாட்டு மட்டும் முன்



வைக்கப்பட்டுச் சட்டமா அதிபரால் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

பாதிக்கப்பட்ட சிறுமிக்குக் குழந்தை இருப்பதால் எதிரிக்கு எதிராக மரபணு அறிக்கையை வழக்குத் தொடுநர் முன்வைத்தார்.

இதனால் எதிரி குற்றத்தை நேற்று மன்றில் ஏற்றுக்கொண்டார். எதிரியின் சட்டத்தரணி கருணை மனுவை மன்றில் முன்வைத்தார்.

இதனடிப்படையிலேயே யாழ்ப்பாணம் மேல் நீதிமன்று மேற்கண்டவாறு தண்டனைத் தீர்ப்பை வழங்கியது.

வழக்குத் தொடுநர் சார்பில் அரச சட்டவாதி நாகரட்ணம் நிஷாந்த் வழக்கை நெறிப்படுத்தினார்.

# சங்கரின் நினைவிடத்தில் நேற்று தீபமேற்றி அஞ்சலி

யாழ்ப்பாணம், நவ.22

வல்வெட்டித்துறை – உடுப்பிட்டி வீதியில் உள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் முதல் மாவீரர் சங்கரின் நினைவிடத்தில் நேற்றுப் பொதுமக்கள் அஞ்சலி செலுத்தினர். இந்த அஞ்சலி நிகழ்வு நேற்று மாலை நடைபெற்றது.

தமிழீழ விடுதலைப்புலிகள்அமைப்பில்இணைந்து விடுதலைக்காகப் போராடி உயிர் நீத்த முதல் மாவீரர் சங்கரின் நினைவிடத்தில் முதல் பெண் மாவீரர் மாலதி மற்றும் மாவீரர் பண்டிதர் ஆகியோரின்



உருவப்படங்களும் வைத்து உணர்வுப்பூர்வமாக அஞ்சலி செலுத்தப்பட்டது.

மாவீரர் மேஜர் பண்டிதரின் தாயார் தீபமேற்றி நினைவேந்தலை ஆரம்பித்து வைத்தார்.

# புதிய தேசியக் கொடியே தமிழர்களின் எதிர்பார்ப்பு

## கூறுகின்றார் சிவாஜிலிங்கம்

யாழ்ப்பாணம், நவ.22

"தமிழ் மக்களைக் கொன்று குவித்தது தவறில்லையா? தேசியக் கொடியை ஏற்ற மறுத்ததுதான் தவறா?" – என்று கேள்வி எழுப்பியுள்ள வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், புதிய தேசியக் கொடியே தமிழ் மக்களின் கோரிக்கை எனவும் கூறினார்.

அண்மையில் வவுனியா பரகும்பா சிங்கள மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் தேசியக் கொடியை ஏற்றுவதற்கு வடக்கு மாகாணக் கல்வியமைச்சர் க.சர்வேஸ்வரன் மறுப்புத் தெரிவித்திருந்தார். இந்த விடயம் பல்வேறு சர்ச்சைகளை உருவாக்கியுள்ளது.

இது தொடர்பாக நேற்று யாழ்ப்பாணத்தில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கருத்துவெளியிட்டமாகாண சபை உறுப்பினர் சிவாஜிலிங்கம் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

வடக்கு மாகாணக் கல்வி அமைச்சர் க.சர்வேஸ்வரன் தேசிய கொடியை ஏற்ற மறுப்புத் தெரிவித்த விடயம் தென்னிலங்கையில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

அந்த நிகழ்வின்போது தேசியக் கொடியை வேறு யாராவது ஏற்றுமாறு மாகாணக்கல்வி அமைச்சர் தெரிவித்துள்ளார். அங்கிருந்த ஆசிரியர் ஒருவர் இதனைச் சர்ச்சைக்குரிய விடயமாக மாற்றியுள்ளார். ஒன்றுமில்லாத விடயத்தைப் பெரிதாக்கித் தென்னிலங்கை அரசியல்வாதிகள் சித்திரித்து வருகின்றனர்.

மாகாணக் கல்வி அமைச்சர் தேசியக் கொடியை அவமதிக்கவோ அல்லது கீழே போட்டு மிதிக்கவோ இல்லை. அவர் தேசியக் கொடியை ஏற்ற மறுப்பு மட்டுமே தெரிவித்தார்.

அதனைச் சர்ச்சையாக மாற்றிச் சட்ட நடவடிக்கை எடுப்பதாகக் கூறி வருகின்றார்கள். அவ்வாறான சட்ட



நடவடிக்கை என்ன என்பதையும் பார்க்கலாம்.

தமிழ் மக்களைக் கொன்று குவித்தது தவறாகத் தெரியவில்லை. தேசியக் கொடியை ஏற்ற மறுத்தது தான் தவறான விடயமா? புதிய அரசமைப்பு உரு வாக்கப்பட்டுப் புதிய தேசியக் கொடி அமைக்கப்பட வேண்டும். அது வரை இந்த சர்ச்சைகள் நீடிக்கும்.

சிங்கள மக்கள் இந்த விடயத்தைப் பிரச்சினையாக மாற்றுவார்கள் எனின், இந்தப் பிரச்சினை இன்னும் பெரிய பிரச்சினையாக மாறும். புதிய அரசமைப்பு, புதிய தேசியக் கொடியே ஈழத் தமிழ் மக்களின் கோரிக்கை. – என்றார்.

# மரண அறிவித்தல்



## முருகையா பரமேஸ்வரி

யாழ். ஏழாலையைப் பிறப்பிடமாகவும், கே.கே.எஸ். வீதி கோண்டாவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட முருகையா பரமேஸ்வரி அவர்கள் நேற்றுமுன்தினம் (20.11.2017) திங்கட்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற முத்தையா நாகம்மா தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்ற வீரவாகு சின்னம்மா தம்பதியினரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற வீரவாகு முருகையாவின் அன்பு மனைவியும், நி.கலாதேவி, வ.ராதாதேவி, மு.யசோதரன் (B.Sc QS - ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தாயாரும், ச.நிமலன் (பிரதி அதிபர், யாழ். இந்துக் கல்லூரி), க.வரதராஜா (டுபாய்), ய.தர்சினி (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமியாரும், நி.ஜனலக்ஷன் (B.Sc Eng SANKAN), நி.பிருந்தாபன் (யாழ். இந்துக் கல்லூரி க.பொ.த. உயர்தரம் – 2018) வ.ஷஜித்திரா (இராமநாதன் நுண்கலைப்பீடம், யாழ். பல்கலைக்கழகம்), வ.கோபிலக்ஷன் (யாழ். இந்து ஆரம்ப பாடசாலை), ய.ரொஷாந் (ஆஸ்திரேலியா), ய.நிதுரா (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை, பூரணம், இராசமணி, குமாரசாமி மற்றும் பூமணி செல்லத்துரை, காலஞ்சென்ற ஈஸ்வரி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (22.11.2017) புதன்கிழமை பி.ப.2 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

கே.கே.எஸ். வீதி,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.

தகவல்
குடும்பத்தினர்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 22.11.2017 இல் அச்சிடப்பட்டுவெளியிடப்பெற்றது.